FREE COPY

பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

யாழ்ப்பாணத்தில் காண்டம் வாசிக்கப்படுகிறது
ஸ்ரீ கௌசிக அகஸ்திய நாடி ஜோதிட நிலையம் (PVT) Ltd.
P.ஜெய்சங்கர்
கடந்த கால, நிகழ்கால, எதிர்காலம் போன்றவற்றைக் கூறுகிறது.
தொடர்பு : 021 221 7944
நாவலர் வீதி, கைலாசபிள்ளையார் கோவிலடி, நல்லூர்.

விடியல் 01 வள்ளுவர் ஆண்டு 2048 பங்குனி 22, செவ்வாய்க்கிழமை 04.04.2017 கதிர் 150

## போர்க்குற்றமே நடக்கவில்லை! பிறகு எதற்கு விசாரணை எல்லாம்?

### யாழில் வைத்து இப்படிக் கேள்வி எழுப்புகிறார் ராஜித



(நிதர்ஷன்)

கொழும்பு, ஏப். 04

இறுதிக் கட்டப் போரின் போது போர்க் குற்றங்கள் எவையும் இடம்பெறவுமில்லை, அவ் வாறு இடம்பெற்றன என அரசாங் கம் ஏற்றுக் கொள்ளவும் இல்லை. இந்த நிலையில், போர்க் குற்ற விசார ணைகள் தேவையற்றவை என்று இலங்கையின் சுகாதார அமை ச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று செய்தியா ளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

"போரின் போது போர்க்குற்றங்கள் எவையும் இடம்பெறவில்லை. அவ்வாறு

பக்கம் 18 »

## பதவியேற்ற நீதிபதியை முறையற்ற விதத்தில் விலக்க இலங்கை நீதித்துறையில் முயற்சி

### கூட்டமைப்புக் கண்டனம்



கொழும்பு, ஏப். 04

"மேல் நீதிமன்ற நீதிபதியாகக் கடமையாற்றும் ராமநாதன் கண்ணனை அப்பதவியிலிருந்து விலக்க வேண்டும் என்று நீதிபதிகள் சங்கமும், இலங்கை சட்டத்தரணிகள் சங்கமும் தீர்மானம் எடுத்திருக்கின்றமை சுயாதீன நீதித்துறையில் தலையீடு செய்வதாகும். அதை நாம் கண்டிருக்கின்றோம்."

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்திருக்கின்றது.

நீதிபதி ராமநாதன்

பக்கம் 18 »

## அமைச்சரவையை மாற்ற ஜனாதிபதிக்கு அதிகாரம் கிடையாது!

### சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு

கொழும்பு, ஏப்ரல் 04

**அமைச்சரவையைத் தம்பாட்டில் மாற்றியமைப்பதற்கான ஜனாதிபதியின் அதிகாரம் 19 ஆவது திருத்தத்தின் மூலம் பறிக்கப்பட்டுவிட்டது. அத்தகைய அதிகாரம் அவருக்குக் கிடையாது என்பது இன்னமும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியினருக்குப் புரியாமல் இருப்பது வேடிக்கையே.**

**– இவ்வாறு கூறியிருக்கின்றார் கூட்டு எதிரணியினரின் முக்கியஸ்தரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சம்பிக்க ரணவக்க.**

பிரதமரின் ஆலோசனைப் படியேதான் அமைச்சர்களையும், அவர்களுக்கான அமைச்சுக்களையும் ஜனாதிபதி குறித்தொதுக்க முடியும் என்பதைத் தற்போதைய அரசமைப்பின் 19 ஆவது திருத்தம் மிகத் தெளிவாக வரையறை செய்துள்ளது என்றும் பிவித்துறு ஹெல உறுமயவின் தலைவரான சம்பிக்க ரணவக்க நேற்றுச் செய்தி

பக்கம் 18 »

## வடக்கு மாகாண சபை ஐரோப்பிய ஒன்றியம் இணைந்து செயற்படும்



(எஸ்.நிதர்ஷன்)

ஐரோப்பிய ஒன்றியமும் வடக்கு மாகாண சபையும் புரிந்துணர்வோடு இணைந்து செயற்படுவதற்கு தீர்மானித்துள்ளன என வடக்கு மாகாண முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கு நேற்று

பக்கம் 18 »

## வெள்ளியன்று டாக்டர்கள் வேலை நிறுத்தம்

கொழும்பு, ஏப். 04

மாலபே தனியார் மருத்துவக் கல்லூரிச் சர்ச்சை தொடர்பில் அரச மருத்துவர்கள் சங்கம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை 7ஆம் திகதி நாடளாவிய ரீதியில் வேலை நிறுத்தத்தில் ஈடுபடப் போகின்றது என நேற்றுக் கொழும்பில் அறிவித்தது. (உ)

## வீரவன்ஸவின் பிணை மனு நேற்றும் நிராகரிக்கப்பட்டது

கொழும்பு, ஏப். 04

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸவைப் பிணையில் விடக் கோரித் தாக்கல் செய்யப்பட்டிருந்த மனுவை மீண்டும் நேற்றும் கொழும்பு கோட்டை நீதிமன்றம் நிராகரித்தது.

விமல்வீரவன்ஸவின் கைதினால் அவரது மகள் மன அழுத்தத்துக்கு உட்பட்டு வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டிருக்கின்றார் என்ற காரணத்தைக்

பக்கம் 18 »

## சுகாதார அமைச்சர் வந்த சமயத்தில் சுகாதாரத் தொண்டர்கள் போராட்டம்



(எஸ்.நிதர்ஷன்)


யாழ்ப்பாணம், ஏப்.04

மத்திய சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்த சமயம் அமைச்சரின் கவனத்தை ஈர்க்கும் வகையில் வடக்கு மாகாண சுகாதாரத் தொண்டர்கள் தமக்கான நிரந்தர நியமனத்தை வழங்கக் கோரி போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

யாழ்ப்பாணத்திற்கு வந்தி

பக்கம் 18 »

## ஜே.ஆரின் மகன் ரவி ஜெயவர்த்தன காலமானார்



கொழும்பு, ஏப். 04

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் மகனும், இலங்கைப்

பக்கம் 18 »

## போதைப்பொருள் கடத்தலை கட்டுப்படுத்த வடபகுதி கடலில் கடற்படை தீவிர ரோந்து!

கொழும்பு, ஏப். 04

கடல் மார்க்க மாக கஞ்சா மற்றும் போதைப்பொருள் கடத்துவதைத் தடுப்பதற்கு நாள் முழுவதும் கடற்படையினரின் ரோந்துப் பணிகள் அதிகரிக்கப்பட்டுள்ளன என வடக்குக் கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் ஜெயந்த டி சில்வா தெரிவித்தார்.

காங்கேசன்துறைக் கடற்படைத் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்

பக்கம் 18 »

### அளப்பு அருணாசலம்



உவர் பாக்குத்தர்... முழுப்பூசனிக் காயைச் சோத்துக்குள்ள வல்லோ புதைக்கப் பாக்கிறார்...!

# உத்தேச அரசமைப்பு மிகவும் ஆபத்தானது

## எச்சரிக்கிறார் பீரிஸ்



கொழும்பு, ஏப்.04

புதிய உத்தேச அரசமைப்பின் அடிப்படையில் மாகாண ஆளுநர், மாகாண முதலமைச்சரின் பொறுப்பின் கீழ் செயற்படும் விதத்தில் திருத்தங்கள் செய்யப்படுகின்றமையால் ஆளுநரின் அதிகாரங்கள் முடக்கப்படும் அபாயம் இருப்பதாக பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் எச்சரித்துள்ளார்.

பலப்பிட்டியில் நேற்று நடைபெற்ற நிகழ்வு ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

உத்தேச அரசமைப்பின் ஊடாக மாகாண ஆளுநர், மாகாண முதலமைச்சருக்குப் பொறுப்புச் சொல்லக்கூடிய வகையில் திருத்தங்கள் செய்யப்படுகின்றன. இது ஆளுநர்களின் செயற்பாடுகளை முடக்கும் நடவடிக்கைகள் ஆகும்.

அத்துடன் தற்போதைய அரசமைப்பின் அடிப்படையில் மாகாண ஆளுநர்கள் ஜனாதிபதியின் பிரதிநிதிகளாகக் கடமையாற்றுகின்றனர். இதனால் அவர்கள் ஜனாதிபதியின் நேரடிக் கண்காணிப்பில் செயற்பட்டு வந்தனர். புதிய அரசமைப்பில் அவ்வாறான ஒரு நிலைமை கிடையாது.

எனினும் தற்போது இந்தநிலை மாற்றம் அடையப் போகின்றது. முதலமைச்சர்களுக்கு அதிகாரங்களை வழங்கும் நடவடிக்கைகளை அரசு முன்னெடுக்க இருக்கின்றது.-என்றார். (எ)

## புற்றுநோய் மருந்துக்கே தட்டுப்பாடு நிலவும்

### அரச மருந்தகங்கள் கூட்டுத்தாபனப் பணிப்பாளர் கூறுகிறார்

குறிப்பிட்ட தினத்தின் பின்னர் புற்றுநோயாளர்களுக்கு ஊசி மூலம் ஏற்றப்படும் மருந்து வகையில் மாத்திரமே தட்டுப்பாடு நிலவும் என்று அரச மருந்தகங்கள் கூட்டுத்தாபனப் பணிப்பாளர் எச்.எம்.எச்.ரூம் தெரிவித்தார்.

அரச மருந்தகங்கள் கூட்டுத்தாபனத்தால் இறக்குமதி செய்யப்பட்ட 53 வகையான மருந்துகள் மார்ச் முதல் செப்ரெம்பர் வரையான காலப் பகுதியில் காலாவதியாவதாக வெளியான தகவலில் உண்மையில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவித்தவை வருமாறு:-

பல மருந்துகள் 2 வருடங்களுக்குப் பின்னரே காலாவதியாகின்றன. எனினும் சில ஊசி மருந்து வகைகள், மூக்கால் உள்ளிழுப்பதற்கான மருந்து வகைகள் 12-18 மாதங்களுக்கு இடைப்பட்ட காலத்தில் காலாவதியடைகின்றன. இந்தநிலையில், மார்ச் மாதத்தில் இருந்து செப்ரெம்பர் மாதம் வரை காலாவதியாகும் மருந்து வகைகளில் ஒரே ஒரு வகையான மருந்து மட்டுமே உள்ளது. அது புற்றுநோயாளர்களுக்கு ஊசி மூலம் ஏற்றப்படும் மருந்தாகும். -என்றார். (எ)



## ஓட்டோ தூள் தூள்! வியப்பில் பொலிஸ்!!

வவுனியா, பம்பைமடுப் பகுதியில் ஓட்டோ ஒன்று விபத்துக்குள்ளாகி நொருங்கிய நிலையில் வீதியோரத்தில் இருந்து நெளுக்குளம் பொலிஸாரால் நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளது.

எனினும், இவ்விபத்து எவ்வாறு இடம்பெற்றது என்பது தொடர்பான எதுவித தகவலும் கிடைக்கப்பெறவில்லை. அத்துடன் இவ்விபத்துக்குள்ளான ஓட்டோ வீதியில் 10 மீற்றர் தூரத்திற்குத் தள்ளிச்செல்லப்பட்டுள்ளது. அந்த ஓட்டோ முழுமையாகச் சேதமடைந்த நிலையில் வீதியோரத்தில் இருந்து மீட்கப்பட்டுள்ளது

இவ்விபத்து எவ்வாறு நிகழ்ந்தது, இது யாருடைய ஓட்டோ என்பது தொடர்பான விசாரணையை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(இ-100)

## வெளிநாடு செல்வதற்கு திஸ்ஸவுக்கு அனுமதி!



கொழும்பு, ஏப்.04

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க வெளிநாட்டுப் பயணங்களை மேற் கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்றம் இந்த அனுமதியை நேற்று வழங்கியுள்ளது.

இதுவரை காலமும் அவரது கடவுச்சீட்டு நீதிமன்றில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், கடவுச்சீட்டை விடுவிக்குமாறு நீதிபதி விகும் களுவாரச்சி உத்தரவிட்டுள்ளார்.

ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு இடையில் இரகசிய உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டதாகத் தெரிவித்து போலி ஆவணம் ஒன்றைதிஸ்ஸ அத்தநாயக்க வெளியிட்டார் என்று குற்றம் சுமத்தி அவர்மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

எதிர்வரும் 10 ஆம் திகதி தொடக்கம் 23 ஆம் திகதி வரையில் ஆஸ்திரேலியாவுக்குப் பயணம் மேற்கொள்ள அனுமதி வழங்குமாறு அத்தநாயக்க நீதிமன்றில் கோரிக்கை விடுத்திருந்தார்.

தனது மகளைப் பார்வையிடுவதற்காக அவர் கோரியிருந்த நிலையில் இந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட நீதிமன்றம், வெளிநாட்டுப் பயணத்துக்கு அனுமதி வழங்கியுள்ளது. (எ)

## சட்டவிரோத சிகரெட்டுகளுடன் வெளிநாட்டுப் பிரஜை கைது!

கொழும்பு, ஏப்.04

சட்டவிரோதமாக நாட்டுக்குள் கொண்டு வரப்பட்ட ஒருதொகை சிகரெட்டுக்களுடன் வெளிநாட்டுப் பிரஜை ஒருவர் வெலிகம - மிரிஸ்ஸ பகுதியில் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே அவர் கைதாகியுள்ளார்.

மேலும், சந்தேகநபர் வசம் இருந்து 18 சட்டவிரோத சிகரெட் பக்கற்றுக்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. கைதானவர் உக்ரைன் நாட்டைச் சேர்ந்த 46 வயதான ஒருவர் என்றும் தெரிய வந்துள்ளது. (எ)

## இலங்கைக்கு வருகின்றார் ஆஸி. அமைச்சர் இன்று

கொழும்பு, ஏப்.04

சர்வதேச அபிவிருத்தி மற்றும் பசுபிக் விவகாரங்களுக்கான ஆஸ்திரேலிய அமைச்சர் செனட்டர் கொன்செட்டா பியரவன்டி வெல்ஸ் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இன்று வருகை தரும் அவர் எதிர்வரும் 7 ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருக்க உள்ளார். இதன்போது அவர் வட மாகாணத்துக்கும் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

போர் காரணமாக வடக்கில் நல்லிணக்கம் மற்றும் புனரமைப்புக்காக ஆஸ்திரேலிய அரசின் 250 மில்லியன் டொலர் நிதியில் முன்னெடுக்கப்படும் பணிகளின் நிலைவரம் குறித்து அவர் பார்வையிடவுள்ளார்.

அத்துடன், வெளிவிவகார அமைச்சர் உட்பட இலங்கை அரசின் முக்கிய அமைச்சர்கள் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடனும் ஆஸி. அமைச்சர் பேச்சுக்களை நடத்தவுள்ளார்.



மேலும் ஆஸ்திரேலியாவில் கல்வி பயில்வதற்காகப் புலமைப்பரிசில்களைப் பெற்றுள்ள ஆயிரம் மாணவர்களையும் அவர் சந்திக்க உள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

சர்வதேச அபிவிருத்தி மற்றும் பசுபிக் விவகாரங்களுக்கான ஆஸ்திரேலிய அமைச்சர் ஒருவர் இலங்கைக்கு விஜயம் செய்வது இதுவே முதல் தடவை என்று தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை, இலங்கை மற்றும் ஆஸ்திரேலியாவுக்கு இடையிலான ராஜதந்திர உறவு 70 ஆவது ஆண்டை எட்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (எ)

## முல்லைத்தீவு செயலகம் முன்னால் உறவுகளின் ஓயாத போராட்டம்!

நேற்று 28 ஆவது நாள்





காணாமல்ஆக்கப்பட்டோரின் உறவுகள் முன்னெடுத்துவரும் போராட்டம் நேற்றுடன் 28 ஆவது நாளாக முன்னெடுக்கப்பட்டுள்ளது.

யுத்தகாலத்தில் கடத்தப்பட்டு காணாமல்போகச் செய்யப்பட்டவர்கள் இறுதிக்கட்ட யுத்தத்தில் இராணுவத்திடம் சரணடைந்த நிலையில் காணாமல் போகச் செய்யப்பட்டவர்கள் எனத் தமது உறவுகள் தொடர்பில் அரசு பதிலளிக்க வேண்டும் என வலியுறுத்தி இந்தத் தொடர் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு முன்பாக கூடாரம் அமைத்துள்ள காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தொடர் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர். (இ-18)

# யாழில் பால் உற்பத்தி அதிகம் ஆனால், நுகர்வு மிகவும் குறைவு

## அமைச்சர் பொ.ஐங்கரநேசன் சுட்டிக்காட்டு

தென்மராட்சி, ஏப்.04

வடமாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் யாழ் மாவட்டத்திலேயே கூடுதலான அளவு பால் உற்பத்தி செய்யப்படுகிறது. ஆனால், பால் நுகர்வு மிகக் குறைவாக உள்ளது. பால்மாவே மிக அதிகஅளவில் நுகரப்படுகிறது. இதற்குப் பால்மா நிறுவனங்களே அடிப்படைக் காரணம் என்றுவடக்குகால்நடைஅபிவிருத்தித்துறை அமைச்சர் பொ.ஐங்கரநேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.

தென்மராட்சி சரசாலையில் நேற்று கிராமிய அமைச்சின் கீழ் உள்ள மில்கோ நிறுவனத்தின் பால்குளிரூட்டும் நிலையத்தைத் திறந்து வைத்து உரையாற்றும் போதே அமைச்சர் பொ.ஐங்கரநேசன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில் –

வடக்கில் கடந்த பெப்ரவரி மாதத்தில் ஏறத்தாழ 31 லட்சத்து 24 ஆயிரம் லீற்றர் பால் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இதில் யாழ் மாவட்டத்தின் பங்களிப்பே அதிகம். ஏறத்தாழ 14 லட்சம் லீற்றர் பால் யாழ்ப்பாணத்திலேயே உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

ஆனால், பாலை அருந்தும் பழக்கம் வெகுவாகக் குறைந்து விட்டதால் பெருமளவு பால் வடக்குக்கு வெளியே கொண்டு செல்லப்படுகிறது. பெப்ரவரி மாதம் வடக்கின் பால் உற்பத்தியில் அரைவாசியளவு, ஏறத்தாழ 16 லட்சம் லீற்றர் பால் தென்னிலங்கை நிறுவனங்களால் கொள்வனவுசெய்யப்பட்டுள்ளது.

வடக்கின்கால்நடைஅமைச்சு பால் உற்பத்தியை அதிகரிப்பதற்குக் கடுமையாக உழைத்து வருகிறது. கடந்தபெப்ரவரிமாதத்தில் மட்டும் அதிசளவு பால் தரக்கூடியகலப்பினப்பசுக்களைஉருவாக்கும்நோக்கில்வடக்கில்2071 பசுக்கள் செயற்கை முறையில் சினைப்படுத்தப்பட்டுள்ளன. அந்த மாதத்தில் செயற்கை முறைச்சினையூட்டலினால்474 கலப்பினப் பசுக்கன்றுகள் பிறந்துள்ளன.

உடன் பாலின் நுகர்ச்சி குறைந்து பால்மாவைப் பயன்படுத்தும் போக்கு எமது மக்களிடையேஅதிகரித்துள்ளது. இதற்கு பல காரணங்கள் இருந்தாலும், பால்மா போஷாக்கானது என்ற பால்மாநிறுவனங்களின்கவர்ச்சிகரமானவிளம்பரங்களேபிரதான காரணம். உடன் பாலை அருந்தினால் நோய் வரும், ஒவ்வாமை ஏற்படும் என்ற நம்பிக்கை பலரிடையே இருக்கிறது.

பால்மாவின் விற்பனையை அதிகரிக்கச் செய்வதற்காக, பால்மா உற்பத்திநிறுவனங்களே இவ்வாறான பரப்புரையையும் திரைமறைவில் செய்து வருகின்றன. இங்கிருந்து பாலைத் தெற்குக்கு அனுப்பி, பால்மாவாக அதை மீளவும் வாங்கிப் பயன்படுத்தும் போக்கில் இருந்து விடுபட்டு உடன்பாலை அருந்துவதற்கு நாம் முன்வர வேண்டும். – எனக் கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின்மாகாணப்பணிப்பாளர் சி.வசீகரன், உதவிப்பணிப்பாளர் வக்சலாஅமிர்தலிங்கம், மில்கோ நிறுவனத்தின் உபதலைவர் பாலித சமரக்கோன், இயக்குநர் ரியூடோர்அமரசிங்க ஆகியோருடன் அதிக எண்ணிக்கையில் பாற்பண்ணையாளர்களும் கலந்து கொண்டிருந்தார்கள்.

தெரிவுசெய்யப்பட்டபண்ணையாளர்களுக்குப்பால்சேகரிக்கும் கொள்கலன்கள் வழங்கி வைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (ம)

# மட்டுவிலில் வாள்வெட்டு

மட்டுவில் வடக்கு முத்துமாரி அம்மன் ஆலய வீதியில் நின்ற இரு இளைஞர்கள் இனந்தெரியாதோரின் வாள் வெட்டுக்கு இலக்காகினர்

இச்சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 8 மணியளவில் இடம்பெற்றது.

இளைஞர் ஒருவர் தனது வீட்டுக்குஅருகில்தனதுநண்பருடன் கதைத்துக் கொண்டு நின்ற வேளை இருவர் மீதும்வாள்வெட்டுச்சம்பவம் இடம்பெற்றது எனத் தெரிவிக்கப்பட்டது.

வாள் வெட்டுக்கு இலக்கானவர்கள்சாவகச்சேரிஆதாரவைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டனர்.

இந்த அசம்பாவிதம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (ம-22)

# கர்ப்பவதி படுகொலை விளக்கமறியல் நீடிப்பு

ஊர்காவற்றுறை, ஏப்.04

ஊர்காவற்றுறை – சுருவில் வீதியில் உள்ள வீடொன்றில் கர்ப்பவதிப் பெண் படுகொலை வழக்கின் சந்தேக நபர்களான சகோதரர்கள் இருவரின்விளக்கமறியல் எதிர்வரும் 17 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

மேற்படி வழக்கு ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் நீதிவான் ஏ.எம்.எம்.றியாழ் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போதே நீதிவானால் சந்தேக நபர்களுக்கு விளக்கறியல் நீடிக்கப்பட்டது. (ம)

# பேராதனை பல்கலை திடீர் மூடல்!

பேராதனைப் பல்கலைக் கழக மாணவர்கள் மத்தியில் ஒருவகையான காய்ச்சல் பரவல் காரணமாக பல்கலைக் கழகத்தின் அனைத்துப் பீடங்களும் காலவரையறையின்றி மூடப்பட்டுள்ளன என பல்கலைக்கழக துணைவேந்தர் உபுல் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

விடுதிகளில்தங்கியுள்ளமாணவர்கள் அனைவரையும் இன்று நண்பகல் 12 மணிக்கு முன்னர் வெளியேறுமாறும் அவர் பணித்துள்ளார்.

இதேவேளை, மத்திய மாகாணத்தில்பன்றிக்காய்ச்சல்பரவி வருகின்றது எனக் கூறப்படுகின்றது. இந்த மாகாணத்தில் கடந்த மூன்று மாதங்களில் கர்ப்பவதிப் பெண் உட்பட 17 பேர் இந்த நோய்க்கு பலியாகியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# பிறந்து ஒரு நாளான சிசுவை தாயார் எரித்துக் கொன்றார்?

## முல்லை. மல்லிகைத்தீவில் சம்பவம்

முல்லைத்தீவு புதுக்குடியிருப்புமல்லிகைத்தீவுபிரதேசத்தில்பிறந்து ஒருநாள்மாத்திரமே ஆனசிசுஒன்றின்சடலம்எரிந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்தச்சம்பவத்துடன்தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில், மல்லிகைத்தீவு கிராமத்தில் உள்ளவாய்பேசமுடியாதபெண்ணொருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். கணவனைப்பிரிந்து வாழும் அந்தப் பெண்ணுக்கு ஏற்கனவே13வயதில் ஒருபெண்பிள்ளைஉள்ளார்.

மேற்படிபெண்ணுக்குநேற்று முன்தினம் நள்ளிரவு குழந்தை பிறந்தது. அந்தக்குழந்தையை தாயார் வீட்டுக்கு அருகில் பற்றைகள் சூழ்ந்த இடமொன்றில் குப்பைகளுடன் சேர்த்து எரித்தார் எனக் கூறப்படுகின்றது.

இந்நிலையில், நேற்றுக் காலை பாடசாலைக்குச் சென்ற 13 வயதுடைய மகள், தனது தாயாருக்குகுழந்தைபிறந்தமை, அதைஅவர்எரித்தமைபோன்ற விடயங்களை ஆசிரியருக்குக் கூறினாள்எனத்தெரியவருகின்றது.

பாடசாலை நிர்வாகம் அந்த விடயத்தை அவசர பொலிஸ் இலக்கமான 119 இற்குத் தெரியப்படுத்தியது. இதையடுத்து புதுக்குடியிருப்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். இதன்போது அரைகுறையாக எரிந்த நிலையில் சிசுவின் சடலம் மீட்கப்பட்டது.

சிசுவின் சடலத்தை பார்வையிட்ட முல்லைத்தீவு நீதவான் எஸ்.எம்.எஸ்.சம்சுதீன் பிரேத பரிசோதனைக்காக வைத்திய சாலைக்கு எடுத்துச்செல்ல உத்தரவிட்டார்.

சிசு இறந்து பிறந்ததா? அல்லது தாயாரால் கொலை செய்யப்பட்டு எரிக்கப்பட்டதா? – என்பதை அறிவதற்காக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-81)

# வேலையற்ற பட்டதாரிகளை அம்பாறையில் சந்தித்தார் மனோ!

அம்பாறை மாவட்டத்தில் கடந்த 35 நாள்களாகச் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் வேலையற்ற பட்டதாரிகளைத் தேசிய நல்லிணக்க, சக வாழ்வு, கலந்துரையாடல் அமைச்சர் மனோகணேசன் நேற்று நேரில் சந்தித்து அளவளாவி அவர்களது பிரச்சினைகளை நேரில் கேட்டறிந்தார்.

அம்பறை மாவட்டத்தைச் சேர்ந்த காரைதீவு விபுலானந்தர் சதுக்கத்தில் முகாமிட்டுத் தமக்கு அரச சேவையில் நியமனம் வழங்குமாறு கோரி மேற் படி அம்பாறை மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் கால வரை யறையற்ற சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

நேற்று அம்பாறை மாவட்டத்திற்கு வருகை தந்த அமைச்சர் மனோகணேசன் தமிழ், முஸ்லிம் பட்டதாரிகள் ஒன்றிணைந்திருந்த போராட்ட முகாமுக்குச் சென்று வேலையற்ற பட்டதாரிகளுடன் உரையாடினார்.

தாம் சுற்றுலாப் பயணியாக இங்கு வரவில்லை எனவும், அரசுக்குள் இருக்கும் ஒரு போராளியேதாமெனவும் குறிப்பிட்ட அமைச்சர் மனோ கணேசன், வேலையற்ற தமிழ், முஸ்லிம் பட்டதாரிகளின் போராட்டம் தொடர்பில் தாம் அழுத்தமாகக் குரல் கொடுப்பார் எனவும் உறுதியளித்தார்.

அரசவேலை வாய்ப்புகளில் சிறுபான்மைச் சமூகங்களுக்கான இன விகிதாசாரம் பேணப்படவில்லை எனக் கவலை வெளியிட்ட அமைச்சர் மனோ கணேசன், இந்தப் புறக்கணிப்புக்கு நிவாரணமாக வடக்கு – கிழக்கு வேலையற்ற பட்டதாரிகள் அனைவருக்கும் அரச சேவையில் நியமனம் வழங்கப்படவேண்டுமென வலியுறுத்தினார். (உ-150)

# நூல் வெளியீட்டு விழா


சாவகச்சேரி, ஏப்.04

வயலூரானின் 'நெஞ்சுறுத்தும் நிஜங்கள்' என்ற கவிதைத் தொகுப்புநூல் வெளியீட்டுவிழா, இன்று பிற்பகல் 3.30 மணிக்கு மட்டுவில் கிழக்கு மாதுமைகல்வி நிலைய மண்டபத்தில் மாதுமை கல்வி நிலைய இயக்குநர் சி.சிவகாந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வுபெற்ற அதிபர் க.அருந்தவபாலனும், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி பிரதேசசெயலக உதவிப்பிரதேச செயலாளர் செல்வி நஞ்சனா நவரட்ணமும் கலந்துகொள்வர்.

வெளியீட்டுரையை தென்மராட்சி பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் சி.முகுந்தன் நிகழ்த்துவார். நூலின் முதற்பிரதியை சாவகச்சேரி திருக்கணித பதிப்பக முகாமையாளர் சமூக ஜோதி க.சிவஞானசுந்தரம் பெற்றுக் கொள்வார். (ம-02)

# அமைச்சர் சுவாமிநாதனின் பெயர் வீட்டுத் திட்டங்களில் பொறிப்பு




தென்மராட்சி, ஏப்.04

தென்மராட்சியில் அண்மையில் கட்டி முடிக்கப்பட்டுள்ள வீட்டுத் திட்ட வீடுகளில் பொருத்துவதற்கு என 'அமைச்சர் டி.எம். சுவாமிநாதனின் பணிப்பின் பேரில் மீள் குடியேற்ற அமைச்சினால் இந்த வீட்டுக்கு நிதி அளிக்கப்பட்டது.'- என்றுஆங்கிலத்தில் பொறிக்கப்பட்ட மாபிள்கள் தென்மராட்சி பிரதே செயலகத்தினால் வழங்கப்பட்டுவருகிறது.

இம்மாபிளை வீட்டின் முன் பக்கசுவரில்பொறிக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றது. (உ-2)

# ஆயுதக் கடத்தல் தொடர்பான நால்வரின் விளக்கமறியல் நீடிப்பு

மட்டக்களப்பு நகருக்கு பஸ்ஸில் ஆயுதம் கொண்டு வந்த சம்பவத்துடன் தொடர்புபட்டனர் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நான்கு பேரின் விளக்கமறியல் 06 ஆம் திகதி வரையில் நீடிக்கப்பட்டுள்ளது.

21.02.2017 அன்று முல்லைத்தீவில் இருந்து ஆயுதங்கள் சிலவற்றை பஸ்ஸில் கொண்டு வந்தமை தொடர்பில் இருவர் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

அது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது மேலும் இருவர் கைதுசெய்யப்பட்டனர்.

பின்னர் கைதுசெய்யப்பட்ட அனைவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இது தொடர்பான வழக்கு நேற்று திங்கட்கிழமை மட்டக்களப்பு நீதிமன்ற நீதிவான் எம்.கணேசராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டபோது எதிர்வரும் 06ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பித்தார்.

டயானா
பிளாஸ்ரிக் மீள்சுழற்சி

பைபர் கிளாஸ் மோல்ட், பைவர் கிளாஸ் உற்பத்தி, றபர் மோல்ட் மற்றும், சிறுவர்களுக்குத் தேவையான உள்வக வெளியக விளையாட்டு உபகரணங்கள் தரமான முறையில் செய்து தரப்படும்.

108, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

021 222 8680
077 592 5088

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, editor@kalaikkathir.lk
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## வரலாற்றுக் கடப்பாடாகும் ஐக்கியம்

இலங்கையின் பௌத்த, சிங்கள பேரினவாத மேலாதிக்கம், இந்தத் தீவின் சிறுபான்மை இனங்களின் மீது தனது இன ஒடுக்கல் நடவடிக்கையைத் திட்டமிட்ட முறையிலே கட்டவிழ்த்து வருகின்றது என்பது ஊன்றிக் கவனிக்கப்பட வேண்டிய ஓர் அம்சமாகும்.

1948 இல் இலங்கை சுதந்திரமடைந்த கையோடு முதலிலேயே இலக்கு வைக்கப்பட்டது நமது சகோதரர்களாகிய மலையகத் தமிழர்கள்தான். அப்போதே தந்தை செல்வா அந்த அடக்குமுறை ஏனைய சிறுபான்மையினர் மீதும் விரைவில் திரும்பி - கண் வைத்து - தன் கை வரிசையைக் காட்டும் என்று எச்சரித்தார்.

மலையகத் தமிழர்களின் பிரஜாவுரிமையைப் பறித்து, அவர்களை நாடற்றவர்களாக்கும் கொடூரத்துடன் அந்த மேலாதிக்க ஒடுக்குமுறை கட்டவிழத் தொடங்கியது.

ஐம்பதுகளில் தனிச் சிங்களச் சட்டமும், பின்னர் உயர் கல்வியில் முழு ஒடுக்குமுறைக்கு வழிசெய்யும் மாவட்ட விகிதார அடிப்படையிலான பல்கலைக்கழகத் தெரிவு முறையும், தமிழர்களின் தாயகபூமியைச் சிங்கள மயப்படுத்தப்படும் குடியேற்றத் திட்டங்களும் என மேலாதிக்க அடக்குமுறை கொடிகட்டிப் பறந்தது.

தமிழர்களைக் கூண்டோடு - கொத்துக் கொத்தாகக் கொன்றொழிக்கும் - மிகப் பெருங் கொடூரத்துடன் - நந்திக் கடலில் அந்த மேலாதிக்கத்தின் ஓர் அத்தியாயம் தற்காலிகமாக முடிவுக்கு வர, அந்த இனக் குரூர செயற்பாடுகள் வெளியில் நீறுபூத்தனவாகவும், உள்ளே கனன்று கொண்டிருப்பனவாகவும் அடங்கிப் போயின.

அதையடுத்து, பேரினவாத மேலாதிக்கத்தின் குரூரக் கண் பார்வை மலையகத் தமிழர்களையும், வடக்கு - கிழக்குத் தாயகத் தமிழர்களையும் அடுத்து, முஸ்லிம் மக்களின்பால் திரும்பியதைக் கண்டோம்.

வடக்கு - கிழக்குத் தமிழர்கள் தமது தாயக பூமியிலேயே வேரறுத்து வீழ்த்தப்பட்ட போது, அந்தக் கொடூரத்துக்குச் சாமரம் வீசியபடி, அந்தக் கொடூரங்களைப் பார்த்து ரசித்தவாறு, அந்தக் குரூரங்களின் சூத்திரதாரியான கொழும்பு அரசுக்குப் பக்கபலமாகச் செயற்பட்டன பல முஸ்லிம் தலைமைகள்.

இன்று வடக்கு - கிழக்குத் தமிழரை அடக்கி, மௌனிக்க வைத்து விட்ட திருப்தியோடு முஸ்லிம்களையும் நோக்கித் தனது கைவரிசையைத் தென்னிலங்கை காட்டத் தொடங்கிய வேளையில்தான், முஸ்லிம் தலைவர்கள் விழித்துக்கொள்ள முயலுகின்றனர்.

பேரினவாத சிந்தனையின் அடையாளமாக விளங்கும் மஹிந்த ராஜபக்ஷவையும் அவரது பரிவாரங்களையும் வீட்டுக்கு அனுப்பினால் எல்லாம் திருந்திவிடும் என்று நம்பித்தான் - கருதித்தான் - கடந்த ஜனாதிபதித் தேர்தலில் அந்த முயற்சியில் ஏனைய சிறுபான்மையினருடன் ஐக்கியப்பட்டு வாக்களித்தனர் முஸ்லிம்கள்.

எதிர்பார்த்தபடி மஹிந்த ராஜபக்ஷவை வீட்டுக்கு அனுப்ப முடிந்தது. ஆனால், தென்னிலங்கை அரசில் புரையோடிப் போயிருக்கும் மேலாதிக்கச் சிந்தனையை - கொழும்பு அரசை இயக்கும் பௌத்த, சிங்களப் பேரினவாதப் போக்கை - மாற்றியமைக்க முடியவில்லை.

ஆட்சியாளர்கள் மாறிய போதும், ஆட்சிப்பீடம் மாறிய போதிலும், அடிப்படைப் பண்பியல்புகளில் மாற்றம் ஏற்படவில்லை.

அதனைப் பாதிக்கப்பட்ட சிறுபான்மை இனச் சமூகங்கள் இப்போது நன்கு உணரத் தொடங்கிவிட்டன.

தமிழ், முஸ்லிம் தலைவர்கள் - அவர்கள் அரசில் அமைச்சர்களாகவிருக்கும் முஸ்லிம் தலைவர்களாகவோ அல்லது மனோ கணேசன் போன்ற மலையகத் தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தென்னிலங்கைத் தமிழ்த் தலைவர்களாகவோ கூட இருக்கலாம் - எல்லோரும் இப்போது வெளிப்படுத்தும் அல்லது பிரதிபலிக்கும் கருத்து அதனைத்தான் கூறி நிற்கின்றது.

தமிழர்களும், முஸ்லிம்களும் இணைந்து நில விடுவிப்புப் போராட்டத்தில் குதிக்க வேண்டிய நிலைமை உருவாகி வருகின்றது. அதற்கு நாம் தயாராக வேண்டும் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மூத்த பிரமுகருமான மாவை சேனாதிராசா விடுத்துள்ள அழைப்பை இந்தப் பின்புலத்தில்தான் பார்க்க வேண்டும்.

இலங்கைத் தீவில் பேரினவாத மேலாதிக்கத்தின் ஒடுக்குமுறையில் துவண்டு போய்க் கிடக்கும் சிறுபான்மையினத்தவர்களுக்கு, தங்களின் கௌரவ வாழ்வை மீட்பதற்கு - தங்களுக்கு நீதி, நியாயம் செய்யப்படுவதற்கு - ஒரேவழி, இன அடக்குமுறைக்கு எதிரான நடவடிக்கைகளை ஒன்றுபட்டு எதிர்கொள்வதுதான்.

கிழக்கில் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் நில விவகாரத்தில் சில சச்சரவுகள், இழுபறிகள் உள்ளன. ஆனால், அது எங்கள் மக்கள் - தமிழர்களும், முஸ்லிம்களும் - சேர்ந்து பேசி, கலந்துரையாடி, ஊடாடி, விட்டுக் கொடுத்துத் தீர்த்துக் கொள்ள முடியும்.

ஆனால், அதற்கு அப்பால் வடக்கிலும் கிழக்கிலும் - வலிகாமம் வடக்கில் தொடங்கி, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் பகுதிகளிலும், வில்பத்து வரையிலும் தமிழர்களினதும், முஸ்லிம்களினதும் காணிகள் கொழும்பு அரசின் படைத்தரப்புகளால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. அல்லது அந்த அரசின் அதிகார வர்க்கத்தினால் அபகரிக்கப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

அவற்றுக்கு எதிராக ஒன்றிணைவது - ஒன்று திரள்வது - சிறுபான்மையினர்கள் மீது வரலாறு சுமத்திய கடப்பாடாகி உள்ளது.

நிலைமையை உணர்ந்து, அதனை அவர்கள் இனியும் காலம் தாமதிக்காது செய்தாக வேண்டும். எதிர்பார்க்கலாமா?

# இராணுவம் சார்ந்தவர்கள் அரசியலுக்குத் தகுதியற்றோர்!

• இவ்வாறு கூறுகிறார் வாசுதேவ நாணயக்கார



கொழும்பு, ஏப்.04

இராணுவம் சார்ந்தவர்கள் அரசியலுக்குப் பொருத்தமற்றவர்கள். அந்தவகையில் கோட்டாபய மற்றும் பொன்சேகா ஆகிய இருவருக்குமே இது பொருந்தும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு அவர் வழங்கிய நேர்காணலின் போதே இதனைக் கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வரு மாறு:-

ஒன்றிணைந்த கூட்டு எதிர்க் கட்சி எதிர்வரும் தேர்தலில் தனி இலச்சினை மற்றும் தனிப் பெயரால் தனித்துப் போட்டியிடும்.

அதேபோல் கோட்டாபய அரசியலுக்கு வரப்போகிறார் எனக் கருத்துத் தெரிவித்துள்ளார். ஆனாலும் இராணுவம் சார்ந்தவர்கள் எவரும் அரசியலுக்கு எந்த வகையிலும் பொருத்தமற்றவர்கள்.

சரத் பொன்சேகாவாக இருந்தாலும் கோட்டாபயவாக இருந்தாலும் இருவருக்குமே இது பொருத்தமானது.

மேலும், விமல் வீரவன்சவின் உண்ணாவிரதத்துக்கும் நான் எதிர்ப்புத் தெரிவிக்கின்றேன். நீதிமன்ற உத்தரவுகளை மீறும் வகையில் போராட்டம் செய்யப்படுவது பொருத்தமற்றது.

இந்த விடயத்தில் விமல் உண்ணாவிரதம்இருக்கமாட்டார் என்றே நான் நினைத்திருந்தேன். முன்னாள் ஜனாதிபதியும் விமல் உண்ணாவிரதம் இருக்க மாட்டார் என்றே நினைத்திருந்தார்.

மற்றும் விமல் தொடர்பில் ஜனாதிபதியுடன் கலந்துரையாடினோம். அதன் மூலம் விமலுக்குப் பிணை மறுக்கப்படுவதற்கு அரசியல் காரணங்கள் இல்லை.- என்றார். (எ)

# பிரதேச மக்களின் நலனே முக்கியம் இனவாதக் கண்ணோடு நோக்காதீர்!

## வில்பத்து விவகாரம் குறித்து ராஜித



வவுனியா, ஏப்.04

வில்பத்துப் பிரச்சினையை அந்தப்பிரதேசமக்களின்நலனை அடிப்படையாக வைத்தே நோக்க வேண்டுமே தவிர இனவாதக் கண்கொண்டு நோக்க வேண்டாம் என்று சுகாதார அமைச்சரும், அமைச்சரவைப் பேச்சாளருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

வவுனியாவுக்கு நேற்றுமுன்தினம் விஜயம் செய்த வேளை, வில்பத்துப் பிரச்சினை தொடர்பில் செய்தியாளர்களின் கேள்விக்குப் பதிலளித்த போதே அவர் இவ்வாறு கூறினார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அந்தப்பிரதேச மக்களின் மீள்குடியேற்றம் தொடர்பில் பிரச்சினைகள் இருப்பின், அது தொடர்பில் கண்டறிந்து தீர்வைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். முடிந்தளவு விரைவாக அவர்களது வசிப்பிடங்களைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேபோன்று, தமிழ் மக்களது பிரச்சினைகளும் காணப்படுகின்றன. அவர்களது சொந்த இடங்களில் இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றை முடிந்தளவு விரைவாக அந்த மக்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். -என்றார். (எ)

# ஊழல்களில் ஈடுபடுவோரை பாதுகாத்து வருகிறது அரசு

## குற்றஞ்சாட்டுகிறது ஜே.வி.பி.



பொலன்னறுவை, ஏப்.04

அரசும் சட்டமா அதிபர் திணைக்களமும் ஆட்சியில் இருந்துகொண்டு ஊழல் களில் ஈடுபடுகின்றவர்களைப் பாதுகாக்க முயற்சிக்கின்றனர் என்று ஜே.வி.பி. குற்றம் சுமத்தியுள்ளது.

பொலன்னறுவையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் ஜேவி பியின் மாகாண சபை உறுப்பினரான வசந்த சமரசிங்க இதனைத் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர்மேலும் தெரிவித்தவை வருமாறு:-

குற்றவாளிகளைத் தண்டிப்பது, அவர்களுக்குப் பிணை கொடுப்பது, சிறையில் அடைப்பது என அனைத்து விடயங்ளும் வெளிவாரியான ஒரு சக்தியால் கட்டுப்படுத்தப்பட்டு வருகின்றன.

குற்றவாளிகளைத் தண்டிப்பதாகக் கூறி ஆட்சிக்கு வந்த அரசு குற்றவாளிகளைக் காப்பாற்றும் நடவடிக்கைகளை மேற் கொண்டு வருகின்றது.

இந்தநிலையில் திருடர்களைக் கண்டுபிடிக்க வேண்டிய பொலிஸ்துறையின் நிதி மோசடி விசாரணை பிரிவில் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன.-என்றார். (எ)



வீதி விபத்துக்களை தவிர்ப்போம்!

வீதிக்கு சமாந்தரமாக சைக்கிள்களிலோ, மோட்டார் சைக்கிள்களிலோ கதை அளந்தபடி பயணிப்பதனை நிறுத்துவோம்.

வீணே இறக்கும் உயிர்களைக் காப்போம்!!

தகவல் : சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை/ மாநகரசபை, யாழ்ப்பாணம்.

### நாளை

05.04.2017
புதன்கிழமை

நட்சத்திரம் : பூசம் பி.இ. 1.55 வரை
திதி : நவமி பி.ப. 1.46 வரை

சுபநேரம் : 4.39 – 6.09 வரை
இராகுகாலம் : 12.09 – 1.39 வரை

## வடக்குப் பாடசாலைகளில் நேரக் கணிப்பு இயந்திரம்

### இரண்டாம் தவணை முதல் கட்டாயம்

வட மாகாணத்தில் உள்ள பாடசாலைகளுக்கு ஆசிரியர் வரவைப் பதிவு செய்வதற்கு நேரக் கணிப்பு இயந்திரம் பயன்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டம், இரண்டாம் தவணையில் இருந்து கட்டாயமாக அமுல்படுத்தப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில், முன்னதாகக் கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

வட மாகாணத்தில் உள்ள தேசிய மற்றும், மாகாண பாடசாலைகளில் கடமையாற்றும் கல்விசரார் மற்றும் கல்விசாரா உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் அனைவரும் வரவைப் பதிவு செய்யும் இயந்திரத்தில் பதிவு செய்யவேண்டும்.

இரண்டாம் தவணையில் இருந்து இந்தத் திட்டம் கட்டாயமாக அமுல்படுத்தப்படவேண்டும்.

நேரக் கணிப்பு இயந்திரத்தைக் கொள்வனவு செய்வதற்குப் பாடசாலை அபிவிருத்திக் குழு நிதி அல்லது உள்ளீட்டுக்கான நிதியைப் பயன்படுத்த வேண்டும். பாடசாலைகளில் இயந்திரப் பயன்பாடு தொடர்பான தரவுகளைக் கோட்டக் கல்வி அலுவலகங்கள் ஊடாக வலயக் கல்விப் பணிப்பாளர் பெற்று அதனை இந்த மாதம் 19 ஆம் திகதிக்கு முன்னர், அறிக்கையிடல் வேண்டும்.-என்றுள்ளது. (ஐ)

# ஆபத்தான தொழில்களில் 39 ஆயிரம் சிறுவர்கள்

## புள்ளி விவரத் திணைக்கள ஆய்வின் மூலம் கண்டறிவு

இலங்கையில் 39 ஆயிரத்து 7 சிறுவர்கள் ஆபத்தான தொழில்களில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று கண்டறியப்பட்டுள்ளது.

நாட்டிலுள்ள சிறுவர்களின் மொத்த எண்ணிக்கை 45 லட்சத்து 71 ஆயிரத்து 442 ஆகும். அவர்களில் 39 ஆயிரத்து 7 பேர் ஆபத்தான தொழில்களில் ஈடுபட்டுள்ளனர் என்று மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளி விவரத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

தற்போது வரையில் ஆபத்தான தொழிலில் ஈடுபட்டுள்ள சிறுவர்களின் எண்ணிக்கை 39 ஆயிரத்து 7 எனவும் அதன் வீதம் 0.9 என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2008 ஆம் ஆண்டு அதன் எண்ணிக்கை 63 ஆயிரத்து 916 ஆகக் காணப்பட்டுள்ள நிலையில் அதன் வீதம் 1.3 ஆகக் காணப்பட்டது என்று புள்ளி விவரத் திணைக்களத்தின் அதிகாரியான சாந்தனி விஜேபண்டார தெரிவித்துள்ளார்.

எனினும் தற்போதுவரையில் இலங்கையினுள் ஆபத்தான தொழில்களில் ஈடுபட்டுள்ள சிறுவர்களின் எண்ணிக்கை 2008 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது குறைந்துள்ளதாகக் காட்டுகிறது என்றும் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் முழுமையான சிறுவர் எண்ணிக்கையில் 0.1 வீத சிறுவர்கள் எனப்படும் 4 ஆயிரத்து 707 பேர் ஆபத்தற்ற தொழில்களில் ஈடுபட்டுள்ளனர் என்று தகவல் வெளியாகியுள்ளது.

ஆபத்தான தொழிலில் ஈடுபட்டுள்ள சிறுவர்கள் 88.2 வீதம் எனப்படும் 34 ஆயிரத்து 395 பேர் பாடசாலை செல்வதில்லை என்று ஆய்வில் தெரியவந்துள்ளது.

கிராமப் புற பிரதேசங்களை விடவும், தோட்டம் மற்றும் நகரப் புறங்களில் உள்ள சிறுவர்களே அதிகம் பாடசாலை செல்வதில்லை என்றும் தெரியவந்துள்ளது.

சிறுவர்களைத் தொழிலில் ஈடுபடுத்துபவர்களின் எண்ணிக்கையில் அதிக ஆபத்தான நகரமாக அனுராதபுர மாவட்டம் காணப்படுகின்றது. அதன் வீதம் 59 ஆகும். திருகோணமலையில் 47.8 வீதம், மொனராகலையில் 46.9 வீதமும், களுத்துறையில் 43.97 வீதமும், மாத்தறையில் 41 வீதமான சிறுவர்கள் தொழிலில் ஈடுபடுகின்றனர் என்றும் ஆய்வில் மேலும் தெரியவந்துள்ளது. (ஐ)

## சதாவதானி ச.ச.நிலைய நிர்வாகிகள் தெரிவு

பருத்தித்துறை, ஏப்.04

பருத்தித்துறை மேலைப் புலோலி சதாவதானி கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையத்தின் புதிய தலைவராக ஓய்வுநிலை உதவித் திட்டப் பணிப்பாளரும், சதாவதானி சிக்கன கடனுதவு கூட்டுறவுச்சங்கத்தலைவருமான மு.தர்மலிங்கம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

உப தலைவர்களாக பொ. சூரியமூர்த்தியும், யோ. செந்தூரனும், செயலாளராக பி.பிரியந்தும், உப செயலாளர்களாக தே.வாசுதேவனும், பா.நக்கீரனும், பொருளாளராக க.குமாரதீசனும், உள்ளகக் கணக்காளராக க.பத்மசாமியும் தெரிவானார்கள்.

மற்றும் நிர்வாக உறுப்பினர்களாக ப. சிவசுப்பிரமணியம், சி.தவச்செல்வம், சி.முருகானந்தன், தே.சங்கரதாஸ், ச.கார்த்தீபன், செ.விக்கினேஸ்வரன், செல்வநாயகம், திருமதி சி.ஞானாம்பிகை ஆகியோரும் தெரிவு செய்யப் பட்டனர். (இ-30)

## ரயில் மோதி யானையும் குட்டியும் சாவு!



வவுனியா, ஏப்.04

மடு, பறையனாலங்குளம் பகுதியில் ரயிலுடன் மோதுண்டு யானை ஒன்றும் அதன் வயிற்றில் இருந்த குட்டியும் இறந்துள்ளன.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை 2.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

கொழும்பில் இருந்து மன்னார் நோக்கிச் சென்ற ரயில் பறையனாலங்குளம் பகுதியில் சென்று கொண்டிருந்த போது ரயில் பாதையின் குறுக்கே நின்ற யானையை மோதித் தள்ளியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்து காரணமாக யானை சம்பவ இடத்திலேயே இறந்தது. அந்த யானையின் வயிற்றுக்குள் இருந்த குட்டியும் இறந்துவிட்டது. (ஐ-100)

## ஆன்மீக சொற்பொழிவு

தொண்டைமனாறு சந்நிதியான ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையால் நடத்தப்பட்டு வரும் வாராந்த ஆன்மீக நிகழ்வு வரிசையில் எதிர் வரும் 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு 'யோகா ஆன்மீகம்' என்னும் தலைப்பில் சொற்பொழிவு இடம்பெறும்.

இந்தச்சொற்பொழிவை யாழ். சித்த மருத்துவ அலகைச் சேர்ந்த சி.உமாசுதன் நிகழ்த்துவார். (இ-30)

## பயணி ஒருவரைத் தாக்கிய பொலிஸார் பணி இடை நீக்கம்

கொழும்பு, ஏப்.04

களுத்துறையில் பயணி ஒருவரைக் கடுமையாக தாக்கிய பொலிஸார் இருவர் பணி இடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

தொடங்கொட பிரதேசத்தில் மக்கள் பார்த்துக் கொண்டிருக்கும் போது மோட்டார் சைக்கிள் சாரதியான இளைஞரை பொலிஸார் கொடூரமாகத் தாக்கியுள்ளனர். இது தொடர்பான காணொளி வெளியாகி சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது.

தாக்குதலில் ஈடுபட்ட பொலிஸாரில் ஒருவர் தொடங்கொட பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் சார்ஜென்ட். மற்றவர் அங்கு பணியாற்றும் கான்ஸ்டபிள் என்று தெரியவந்துள்ளது.

அவர்கள் இருவரும் இணைந்து தொடங்கொட பிரதேசத்தில் அந்நபரைக் கொடூரமாகத் தாக்கியுள்ளனர்.

சாரதி அனுமதிப்பத்திரமின்றி, உத்தரவை மீறி குறித்த இளைஞர் பயணித்துள்ளார் என்று கூறப்படுகின்ற நிலையில், அவர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ஐ)

## மே மாதம் தொடக்கம் வருகின்றன 'ஸ்மார்ட்' அடையாள அட்டைகள்

உத்தேச இலத்திரனியல் ஆள் அடையாள அட்டை விநியோகிக்கப்படும் வரையில் மே மாதம் முதல் 'ஸ்மார்ட்' அடையாள அட்டைகள் விநியோகிக்கப்படும் என்று ஆள்பதிவுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

1972 ஆம் ஆண்டு முதல் விநியோகிக்கப்பட்டு வரும் பழைய 'லெமினேடின்' அடையாள அட்டை இந்த 'ஸ்மார்ட்' அட்டையுடன் செல்லுபடியற்றதாக மாறும் என்று ஆள்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் வியானி குணதிலக்க தெரிவித்துள்ளார்.

15 வயதை நிறைவு செய்த இளைஞர், யுவதிகள் ஆகியோருக்கு மாற்றம் செய்தல், காணாமல் போதல் காரணங்களுக்காக அடையாள அட்டைக்கு விண்ணப்பிப்பவர்களுக்கும் இந்த 'ஸ்மார்ட்' அடையாள அட்டை புதிதாக விநியோகிக்கப்படும்.

பழைய முறைமையின் கீழ் கடந்த 45 வருடங்களாக முன்னெடுக்கப்பட்டு வரும் நடைமுறையிலுள்ள அடையாள அட்டை பல்வேறு சட்டவிரோத நடவடிக்கைகளை முன்னெடுக்கக் கூடிய வகையில் உள்ளது.

இந்த நிலையில், அந்தப் பழைய முறைமை சமகாலத்துக்குப் பொருத்தமற்றது எனவும் அவர் மேலும் விளக்கியுள்ளார். (ஐ)

## பாகிஸ்தானின் 3 அரிசிக் கப்பல்கள் புறப்பட்டுவிட்டன கொழும்பு நோக்கி!

### இம்மாத நடுப்பகுதியில் வந்து சேரும்

கொழும்பு, ஏப்.04

வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கைக்குப் பாகிஸ்தான் வழங்கியுள்ள 3 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியை ஏற்றிக் கொண்டு மூன்று கப்பல்கள் கொழும்பு நோக்கிப் புறப்பட்டுள்ளன.

இலங்கையில் உள்ள பாகிஸ்தான் தூதரகம் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

இலங்கையில் வறட்சியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 10 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியை அனுப்பிவைப்பார் என்று பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் அறிவித்திருந்தார்.

கடந்த பெப்ரவரி மாதம் 25 மெற்றிக் தொன் அரிசி பாகிஸ்தான் விமானப்படை விமானம் மூலம் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இதன் பின்னர் மேலும் மூன்று விமானங்களில் பாகிஸ்தான் அரிசியை அனுப்பியிருந்தது.


இதனையடுத்தே மூன்று கப்பல்களில் 3 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியை பாகிஸ்தான் அனுப்பி வைத்துள்ளது. இந்தக் கப்பல்கள் ஏப்ரல் மாதம் நடுப்பகுதியில் கொழும்பை வந்தடையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இவற்றை பாகிஸ்தான் தூதுவர் மேஜர் ஜெனரல் சையிட் சகீல் ஹுசேன், ஸ்ரீலங்கா பிரதமரிடம் கையளிக்கவுள்ளார்.

எஞ்சிய 7 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி, ஏப்ரல் மாத முடிவுக்குள் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது.

இலங்கையில் இயற்கை அனர்த்தங்கள் ஏற்படும் போதெல்லாம் பாகிஸ்தான் உதவிகளை வழங்கி வந்துள்ளது.

இலங்கையுடன் வலுவான இராஜதந்திர உறவுகளைக் கொண்டுள்ள பாகிஸ்தான், அதனை மேலும் வலுப்படுத்திக் கொள்ள விரும்புகிறது. (ஐ)



## விசேட தேவையுடைய சிறார்களுக்கு கற்றல் உபகரணங்கள்

இலங்கை மனித உரிமைகள் அமைப்பின் மட்டக்களப்பு மாவட்டப் பிரதிநிதிகள் மூலம் மட்டக்களப்பு மென்கப் விசேட தேவையுடைய பிள்ளைகளின் பாடசாலை சிறுவர்களுக்கு கற்றல் உபகரணம் வழங்கும் நிகழ்வு அமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட விசாரணை அதிகாரி கே. ரஜனிகாந்த் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் மனித உரிமைகள் அமைப்பின் மாவட்ட விசாரணை அதிகாரி தஸீர், அமைப்பின் பிரதிப் பணிப்பாளர் மற்றும் மாவட்டப் பணிப்பாளர், பாடசாலைப் பொறுப்பாளர்கள், மற்றும் விசேட தேவையுடைய சிறுவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதன் போது மனித உரிமைகள் அமைப்பால் விசேட தேவையுடைய 47 சிறுவர்களுக்கு அவர்களின் கற்றல் வளத்தை ஊக்குவிக்கும் முகமாகக் கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன. (ச)

## டெங்குக் காய்ச்சல்; மட்டக்களப்பில் ஒருவர் சாவு!

மட்டக்களப்பு, ஏப்.04

டெங்குக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சை பயனின்றி நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு உயிரிழந்துள்ளார் என வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கல்லடியைச் சேர்ந்த 2 பிள்ளைகளின் தந்தையான கூட்டுறவுத் திணைக்களத்தின் கணக்காய்வுப் பிரிவில் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தராகப் பணியாற்றிவந்த எஸ்.ஸ்ரீகாந்த் (வயது-42) என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

டெங்குக் காய்ச்சல் காரணமாக இவர் சில தினங்களாக தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தார்.

டெங்குக் காய்ச்சல் காரணமாக மட்டக்களப்பில் இதுவரையில் 4 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# நாட்டில் நடந்தவை அநியாயங்களே!

## பரிகாரம் வழங்கத் தயாராக வேண்டும்!!



விவசாய அமைச்சர் துரைராஜசிங்கம் தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஏப்.04

நல்லிணக்கத்தைக் தேடிக்கொண்டிருக்கின்ற இந்த நாடு, இங்கு இடம் பெற்ற அநியாயங்களைக் கண்டறிந்து, அவை இனி மேலும் இடம் பெறாத வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்த அநியாயங்களுக்குச் சர்வதேச நியமத்தின் அடிப்படையில் பரிகாரம்வழங்குவதற்குத்தயாராகவேண்டும்.

-இவ்வாறு கிழக்கு மாகாணவிவசாய அமைச்சர் கி.துரைராஜசிங்கம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு தாழங்குடா றோமன் கத்தோலிக்கப் பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டியில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறுதெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்த நாட்டில் இடம் பெற்ற அநியாயங்களின் உண்மையைக் கண்டறிந்த பின்னரே இந்த நாட்டில் நல்லிணக்கம் ஏற்படும். அதை விடுத்து வேண்டாத பிரயத்தனங்களில் ஈடுபடுவதன் காரணமாக எந்தவித நல்லிணக்கத்தையும் நாம் அடைய முடியாது. இந்தச் செய்தியை நான் அரசியல் தலைவர்களுக்குப் பகிரங்கமாக அறிவிக்க விரும்புகின்றேன்.

பாதிக்கப்பட்ட மக்களாகிய நாம், எமது எதிர்காலம் நோக்கி உறுதியான எண்ணப்பாட்டோடு செயற்பட வேண்டும். எமக்குச் சரியான நீதி கிடைக்க வேண்டும். நீதி கிடைப்பதற்கான பொறிமுறைகள் தற்போது உருவாகிக்கொண்டிருக்கின்றன. அந்தப் பொறிமுறைகள் சரியான முறையில் செயற்படுத்தப்பட்டு, எங்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். அந்த நீதியைப் பெற்றுக் கொடுப்பதற்கான செயற்பாட்டில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தொடர்ந்து செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது.

மேலும், சர்வதேச விசாரணை என்ற விடயம் வெறுமனே சொல்லப்பட்டது அல்ல. அது தொடர்பான ஆதாரங்களை சர்வதேச நிபுணர்கள் ஏற்கெனவே சேகரித்து வைத்திருக்கின்றார்கள்.- என்றார். (ச)

## ஜோசப் பரராஜசிங்கம் எம்.பி. கொலை: பிள்ளையானுக்கு மறியல் நீடிப்பு



மட்டக்களப்பு,ஏப்.04

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலைச் சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களான சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) உட்பட 4 பேரினதும் விளக்கமறியல் எதிர்வரும் 17 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிவான் எம்.கணேசராஜா முன்னிலையில் நேற்று இவர்களை ஆஜர் படுத்திய போதே, நீதிவான் இவர்களுக்கான விளக்க மறியலை நீடித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம், 2005 ஆம் ஆண்டு மட்டக்களப்பு புனித மரியாள் இணைப்பேராலயத்தில் நடைபெற்ற நத்தார் நள்ளிரவு ஆராதனையில் கலந்துகொண்டிருந்த போது சுட்டுக்கொல்லப்பட்டிருந்தார். இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் சந்தேக நபரான சிவநேசதுரை சந்திரகாந்தன் உட்பட 4 பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

## சிசுவை கிணற்றில் வீசிய தாய் கைதானார்!

பிறந்து 6 நாள்களேயான ஆண் சிசுவொன்றைக் கொலை செய்து கிணற்றில் வீசினார் எனச் சந்தேகிக்கப்படும் சிசுவின் தாயை மட்டக்களப்பு கல்லடியில் வைத்து நேற்றுத் திங்கட்கிழமை காலை மட்டக்களப்புப் பொலிஸார் கைதுசெய்தனர்.

மட்டக்களப்பு நகரில் மேல்மாடி வீதியை அண்டி அமைந்துள்ள வீட்டு வளாகம் ஒன்றில் அமைந்துள்ள கிணற்றிலிருந்து பிரஸ்தாப சிசுவின் சடலத்தைக் கடந்த சனிக்கிழமை பொலிஸார் மீட்டிருந்தனர்.

மேற்படி வீட்டை வாடகைக்கு எடுத்து, அவ் வீட்டில் வைத்தியத் தம்பதிகள் வசித்து வந்துள்ளனர். இந்த வீட்டில் வேலை செய்து வந்த துறைநீலாவணையைச் சேர்ந்த பணிப்பெண் ஒருவரே கடந்த 27ஆம் திகதி இந்தச் சிசுவைப் பிரசவித்துள்ளார் எனப் பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரிய வந்திருந்தது. இதனை அடுத்து, தலைமறைவாகி இருந்த இந்தப் பணிப்பெண்ணைப் பொலிஸார் தீவிரமாக தேடி வந்த நிலையிலே, அவர் கைது செய்யப்பட்டுள்ளார். (ச)

## தௌபீக் எம்.பியின் வாகனம் விபத்து ஒருவர் படுகாயம்!

திருகோணமலை,ஏப்.04

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக்கின் வாகனம், ஓட்டோ ஒன்றுடன் மோதி நேற்று விபத்துக்குள்ளானதில் ஓட்டோச் சாரதி படுகாயமடைந்தார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

திருகோணமலையிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த மேற்படி நாடாளுமன்ற உறுப்பினரின் வாகனம், முள்ளிப் பொத்தானை 95ஆம் கட்டை கல்லடிப் பாலத்துக்கு அருகில் ஓட்டோ ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானது. இதன் போது படுகாயமடைந்த ஓட்டோச் சாரதி கந்தளாய் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ச)

## மட்டக்களப்பில் சுவரொட்டிகள்

கல்குடாவில் அமைக்கப்பட்டு வரும் மதுபானத் தயாரிப்புக்கான எதனோல் மூலப்பொருள் உற்பத்தி நிலையத்துக்கான நிர்மாண வேலையை உடனடியாகத் தடுத்து நிறுத்தக் கோரி மட்டக்களப்பின் பல பகுதிகளிலும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

ஸ்ரீலங்கா தவ்ஹீத் ஜமாஅத் அமைப்பால் 'கல்குடாவில் கலாசார, குடும்ப, சீரழிவுகளைத் தோற்றுவிக்க முனையும் மதுபான உற்பத்தித் தொழிற்சாலையின் நிர்மாணப்பணியை உடனே நிறுத்து', 'மதுவற்ற மாவட்டமாக மட்டக்களப்பு மலர மக்களே ஒன்றுபடுவோம்' என்று எழுதப்பட்டு இந்தச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. (ச)

## அரசு கூட்டமைப்பை ஏமாற்றுவதுபோல மக்களை ஏமாற்ற முடியாது!

மட்டக்களப்பு,ஏப்.04

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை ஏமாற்றுவதைப் போல் நல்லாட்சி அரசால் இந்த நாட்டு மக்களை ஏமாற்ற முடியாது. நாட்டில் இனிமேல் தான் நல்லாட்சி ஏற்படப் போகின்றது எனத் தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் தலைவர் விநாயகமூர்த்தி முரளீதரன் (கருணா) தெரி வித்தார்.

வடக்கு மற்றும் கிழக்கு உட்பட நாட்டின் பல பாகங்களிலும் பட்டதாரிகள் உட்பட பல்வேறு தரப்பினர் மேற்கொண்டுவரும் பல்வேறு போராட்டங்கள் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கி நாட்டில் வேலையற்றிருக்கும் இளைஞர் மற்றும் யுவதிகளுக்கு வேலைவாய்ப்பளித்து நாட்டை வளப்படுத்துவதற்கு அரசிடம் உறுதியான திட்டங்கள் எதுவும் இல்லை. அதிகாரம் படைத்தவர்கள் எனக் கூறிக்கொண்டிருப்பவர்கள் வேடிக்கை பார்த்துக்கொண்டிருப்பது வேதனைக்குரியது.

நாட்டில் எவ்வளவோ திணைக்களங்கள் மற்றும் அரசகூட்டுத்தாபனங்கள் உள்ளன, பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனங்களை மட்டும் தான் வழங்க வேண்டும் என்றில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசுக்கு ஆதரவாகக் கைதட்டிக் கொண்டு, 40 நாள்களாகப் போராடி வரும் பட்டதாரிகளின் போராட்டத்தைக் கவனத்திலே எடுக்கவில்லை.

நாட்டில் புதிய வேலைகளை உருவாக்க வேண்டிய கடப்பாடு அரசுக்கு உள்ளது. வாழைச்சேனை காகிதத் தொழிற்சாலை தூர்ந்து போய்க்கொண்டிருக்கின்றது.

அதை மீளக் கட்டியெழுப்பினாலே பல நூற்றுக்கணக்கானோருக்கு வேலைவாய்ப்புக்களை வழங்கலாம்.- என்றார். (ச)

# 13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் நெகிழ்வுத்தன்மையுடனேயே இந்தியா!

## பிரதமர் ரணில் கூறுகின்றார்

கொழும்பு, ஏப். 04

13 ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் இந்தியா நெகிழ்வுத்தன்மையுடனேயே இருக்கிறது என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்திய ஊடகம் ஒன்றுக்கு அளித்துள்ள செவ்வியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தமிழர்களுக்கு அதிகபட்ச தன்னாட்சி உரிமை மற்றும் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைப்பு ஆகிய இரண்டு விடயங்களை முக்கியத்துவப்படுத்தியதாக, 1987ஆம் ஆண்டு இந்திய இலங்கை உடன்பாடு கையெழுத்திடப்பட்டது.



இதற்காக 13 ஆவது திருத்தச் சட்டம் இந்தியாவின் ஆதரவும் இலங்கையில் கொண்டு வரப்பட்டது. ஆனால் தமிழர்கள் இந்த விடயத்தில் சிறிய முன்னேற்றங்களே ஏற்பட்டன என்று கூறுகின்றனர். சிங்களவர்கள் பெரும்பாலானோர் இதனை எதிர்க்கின்றனர்.

இந்த நிலையில், 30 ஆண்டு கால 13 ஆவது திருத்தச்சட்டம் காலாவதியாகி விட்டதா? அதில் திருத்தங்கள் செய்ய வேண்டியுள்ளனவா? என்று எழுப்பப்பட்ட கேள்விக்குப் பிரதமர் ரணில் பதிலளித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வழங்கிய பதில் வருமாறு:-

நாங்கள் புதிய அரசமைப்பை வரைவதற்காக அரசமைப்புச் சபை ஒன்றை கொண்டிருக்கிறோம். அதற் காக வழிகாட்டல் குழு அமைக் கப்பட்டுள்ளது.

நாங்கள் அதிகாரப் பகிர்வு பற்றி கலந்துரையாடுகிறோம். ஆனால், ஒவ்வொரு மாகாண சபையும் கூடுதல் அதிகாரங்களைக் கேட்கின்றன. இந்த நிலையில் நாடாளுமன்றத்துக்கும் மாகாணசபைகளுக்கும் இடையில் பிரிவுகள் காணப்படுகின்றன.

இது தமிழ்- சிங்கள விவகாரம் அல்ல. இது மத்திய-மாகாண விவகாரம். எதனை நாம் வழங்க முடியும் என்பது குறித்துக் கலந்துரையாடி வருகிறோம். இது ஒரு ஜனநாயக நாடு.- என்று குறிப்பிட்டுள்ளார்.

ஆனால், புதுடில்லி 13 ஆவது திருத்தச்சட்ட விவகாரத்தில் நெகிழ்வுப் போக்குடன் இருக்கிறதா என்று எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த பிரதமர்-

ஆம், எப்போதும் நெகிழ்வுடன் தான் இருக்கிறது. அதனை நாம் வரவேற்கிறோம் என்றும் பதிலளித்துள்ளார்.

# கொழும்பு மாநகரசபையின் மைதானங்கள் அரசியல் கூட்டங்களுக்கு வழங்கப்படாது!

கொழும்பு, ஏப். 04

கொழும்பு மாநகரசபையின் கட்டுப்பாட்டில் இருக்கும் மூன்று மைதானங்கள் அரசியல் கூட்டங்களுக்கு வழங்கப்படமாட்டா என்று மாநகரசபை நிர்வாகம் அறிவித்துள்ளது.

கொழும்பு மாநகரசபையின் கீழ் நிர்வாகம் செய்யப்படும் ஹைட் பார்க் மைதானம், பி.டி. சிறிசேன மற்றும் ரத்னம் ஆகிய மைதானங்கள் அரசியல் கட்சி கூட்டங்களுக்கோ, மே தினக் கூட்டங்களுக்கோ வழங்கப்படமாட்டா என்று கொழும்பு மாநகரசபையின் ஆணையாளர் டி.ஏ. அனுரகுமார தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் மே தினக் கூட்டத்தை நடத்த ஹைட் பார்க் மைதானத்தை வழங்கவில்லை எனச் சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை இந்தக் குற்றச்சாட்டை நிராகரிக்கின்றோம்.

மே தினக் கூட்டத்தை நடத்துவதற்கு தொழிற்சங்கமொன்றே கோரிக்கை விடுத்திருந்தது.


எவ்வாறெனினும் இந்த மூன்று மைதானங்களைத் தவிர நகரசபை நிர்வாகத்திற்கு உட்பட்ட அனைத்து மைதானங்களையும் பெற்றுக் கொள்ள எவ்விததடையும் கிடையாது.

ஏற்கனவே மே தினக் கூட்டங்களை நடத்துவதற்கு தொழிற்சங்கங்களும் அரசியல் கட்சிகளும் மைதானங்களை ஒதுக்கீடு செய்துள்ளன என்றும் தெரிவித்துள்ளார்.

# பாதுகாப்புக் கருத்தரங்கு கொழும்பில் ஆரம்பமானது!

கொழும்பு, ஏப். 04

தீவிரவாதத்தைத் தடுத்தல் மற்றும் தெற்காசியாவில் வன்முறை அடிப்படைவாதத்தை எதிர்த்தல் என்ற தொனிப்பொருளில் இரண்டு நாள் பாதுகாப்புக் கருத்தரங்கு ஒன்று கொழும்பில் நேற்று ஆரம்பமானது.



நேபாளத்தின் தெற்காசிய கற்கைகள் நிலையம் மற்றும் ஜேர்மனியின் கொன்ராட் அடெனெளர் ஸ்டிபிடுங் ஆகிய அமைப்புகளுடன் இணைந்து இலங்கையின் தேசிய பாதுகாப்புக்கான கற்கைகள் நிறுவகம், இந்தக் கருத்தரங்கை ஒழுங்கு செய்துள்ளது.

இந்தக் கருத்தரங்கில் இலங்கையின் பாதுகாப்புச் செயலர் கருணாசேன ஹெற்றியாராச்சி பிரதம விருந்தினராக பங்கேற்றுள்ளார். வன்முறை அடிப்படை வாதத்தை எதிர்கொள்ளல் மற்றும் தோற்கடித்தல் தொடர்பான கலந்துரையாடுவதற்காக இந்தக் கருத்தரங்கு ஒழுங்கு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

பாதுகாப்புத்துறை மற்றும் பாதுகாப்புக் கற்கைகள் துறைகளில் நிபுணத்துவம் வாய்ந்தவர்கள் மற்றும் கல்வியாளர்கள் இந்தக் கருத்தரங்கில் பங்கேற்றுள்ளனர்.

# கொழும்பு நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் பெருந்தொகையான மதுபானங்கள் மீட்பு!

கொழும்பு, ஏப். 04

கொழும்பு ஐந்து நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் வைத்து பெருந்தொகை மதுபானங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

சட்டவிரோதமான முறையில் பெருந்தொகை மதுபானங்களை வைத்திருந்த குற்றச்சாட்டின் அடிப்படையில், ஒருவரை கொழும்பு விசேட கலால் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

விஸ்கி, பிரெண்டி, ரம், வோட்கா மற்றும் பியர் உள்ளிட்ட பெருந்தொகை மதுபானங்கள் கலால் அதிகாரிகளால் மீட்கப்பட்டுள்ளன.

பிரபல ஹோட்டல் ஒன்றில் இளைஞர் - யுவதிகள் பங்கேற்கும் விருந்து உபசார நிகழ்வில் விற்பனை செய்வதற்காக இந்த மதுபானங்கள் கொண்டு வரப்பட்டிருந்தன.

இந்த நிகழ்வு கடந்த சனிக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

சமூக இணையத்தளம் ஒன்றினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விருந்து நிகழ்வில், 1500 இற்கு மேற்பட்ட இளைஞர்கள், யுவதிகள் கலந்து கொண்டனர். இவர்களுக்கு விற்பனை செய்வதற்காக இந்த மதுபானங்கள் கொண்டு வரப்பட்டிருந்தன என்று விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது.

இந்த மதுபான விருந்திற்காகச் சென்றிருந்த அனைத்து இளைஞர் யுவதிகளும், 19 தொடக்கம் 27 வயதிற்கு உட்பட்டவர்களாவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# பெரிய விமானங்களுக்காக காத்திருக்கும் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம்!

கொழும்பு, ஏப். 04

ஓடுபாதை புனரமைப்பு நடவடிக்கைகளுக்காக வழமையான செயற்பாடுகளை மட்டுப்படுத்திக் கொண்டிருந்த கட்டுநாயக்க விமானநிலையம் எதிர்வரும் 7 ஆம் திகதி முதல் வழமைபோன்று இயங்கவுள்ளன.



இது குறித்த அறிவிப்பை விமானநிலைய மற்றும் விமான சேவைகள் நிறுவனம் அறிவித்துள்ளது.

கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஓடுபாதை புனரமைப்புப் பணிகளுக்காகக் கடந்த ஜனவரி 06 ஆம் திகதி தொடக்கம் ஏப்ரல் 05 ஆம் திகதி வரை விமானநிலையத்தின் செயற்பாடுகள் மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. இதற்காக நாளாந்தம் எட்டு மணிநேரம் விமான நிலையம் தற்காலிகமாக மூடப்பட்டு, ஓடுபாதைகள் புனரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

ஓடுபாதை புனரமைப்புப் பணிகளுக்கு 48 மில்லியன் டொலர்கள் செலவழிக்கப்பட்டிருந்ததுடன், இத்தொகை அரசாங்கம் மற்றும் சிவில் விமான சேவைகள் அதிகார சபையினால் செலவழிக்கப்பட்டிருந்தது.

தற்போது விமான நிலைய ஓடுபாதை புனரமைப்பு பணிகள் முற்றாக நிறைவடைந்துள்ள நிலையில் எதிர்வரும் 07 ஆம்திகதி தொடக்கம் விமானநிலையம் வழமை போன்று இயங்கத் தொடங்கவுள்ளது.

தற்போது மேற்கொள்ளப்பட்ட ஓடுபாதை புனரமைப்பு பணிகள் காரணமாக உலகின் மிகப்பெரிய விமானங்களும் எதிர்வரும் காலங்களில் கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வந்து செல்வதற்கான ஓடுபாதை வசதிகள் ஏற்படுத்தப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# குப்பையைக் கொட்டாதீர்



ஹற்றன் குடாஓயா குப்பை கூளத்தில் அண்மைக்காலமாக குப்பைகள் கொட்டப்பட்டு வந்தன. இந்தநிலையில், பொது மக்களின் ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்து அந்தக் குப்பைகள் நுவரெலியா பிரதேச கட்டுப்பாட்டுப் பகுதியான பத்தனைக் பகுதியில் கொட்டப்பட்டு வந்தன. இதனைக் கண்டித்தே பத்தனைப் பிரதேச பொதுமக்கள் பத்தனைப் நகரத்தில் நேற்றுமுன்தினம் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டனர்.

## தினசரி ராசி பலன் 04.04.2017

துர்முகிவருஷம்2017ஆம்ஆண்டுபங்குனித்திங்கள் 22 ஆம் நாள் அஷ்டமித்திதி. பகல் 11.20 மணி வரை. பின்னர் நவமி. நட்சத்திரம்: புனர்பூசம் இரவு 11.11 மணி வரை. பின்னர் பூசம். சித்தயோகம் முழுவதும். ராகுகாலம்: மாலை 3.16 மணிமுதல் 4.48 மணி வரை. சுபநேரம்: பகல் 10.35 மணிமுதல் 12.04 மணி வரை. இன்று ஸ்ரீராம நவமி. திவசம் செய்ய வேண்டிய திதி: பங்குனிமாத வளர்பிறை நவமி. பிறந்த நட்சத்திர வழிபாடு: புனர்பூசம்.

### 'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம்:** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. பொருள்வரவு சுமாராக இருக்கும். தேவையற்ற செலவுகள் உண்டாகும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் உண்டாகும்.

**ரிஷபம்:** இன்பமான நாள். வருமானம் வளமாக இருக்கும். நண்பர், உறவினர் உதவி கிடைக்கும். வேலை தேடுவோருக்கு வேலை கிடைக்கும்.

**மிதுனம்:** ஆக்கபூர்வமான பலன்கள் காணப்படுகின்றன. சுயதொழிலில் லாபம் கிடைக்கும். உத்தியோகத்தர்களின் திறமை பளிச்சிடும்.

**கடகம் :** அலைச்சல் மிகுந்த நாள். உத்தியோக விஷயமாய் நிறைய அலைய வேண்டி வரும். சிலர் தொழில் மாற்றத்தால் குடியிருக்க வாடகை வீடு தேடி அலைவார்கள்.

**சிம்மம் :** உயர்வான பலன்கள் காணப்படுகின்றன. வெளிநாட்டு உறவினர்களிடமிருந்து பரிசுப் பொருள்கள் வந்துசேரும். உத்தியோக உயர்வுகள் கிடைக்கும்.

**கன்னி:** விருத்தியான நாள். வியாபாரத்தில் புதிய முறைகளைக் கையாண்டு விருத்தியடைவார்கள். உத்தியோகத்தர்களின் திறமையால் உயர் அதிகாரிகளின் பாராட்டைப் பெறுவார்கள்.

**துலாம்:** மகிழ்ச்சியான நாள். நீண்டகாலமாக விட்டுப் பிரிந்த உறவுகள் மீண்டும் இணையும் வாய்ப்புண்டாகும்.

**விருச்சிகம்:** குழப்பமான நாள். மனதில் ஒருவித கவலைகள் உண்டாகும். பொருளாதாரம் நலிவடையும். உறவினர்களால் தொல்லைகள் அதிகரிக்கும்.

**தனுசு:** சம பலன்கள் காணப்படுகின்றன. குடும்பத்தில் சிறுசிறு சச்சரவுகள் தோன்றும். முதலாளி தொழிலாளி உறவுகளில் சிறுசிறு பிணக்குகள் காணப்படும்.

**மகரம்:** மேன்மையான நாள். வேலையில்லாதவர்களுக்கு வேலை வாய்ப்பு உண்டாகலாம். சிலருக்கு பதவி உயர்வு கிடைக்கும்.

**கும்பம்:** அனுகூலமான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். அரச ஊழியர்கள் கடமை உணர்ச்சியுடன் செயற்படுவதால் நன்மை பெறுவர்.

**மீனம்:** துயரமான நாள். மன அமைதி குன்றும். சிலர் விபத்துக்குள்ளாக வேண்டிவரும். தொழிலாளர்கள் பல சோதனைகளை எதிர்நோக்க வேண்டிவரும்.

சந்திராட்டமநாள்: விசாகம் 4 ஆம் கால், அனுஷம், கேட்டை, மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் கால் ஆகிய நட்சத்திரங்களில் உதயமானோர் இந்த தினத்தில் நற்கருமங்களை விலக்குதல் வேண்டும்.

# மின்கட்டணத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை

## ஊழலுக்கு எதிரான முன்னணி கூறுகிறது

கொழும்பு, ஏப்.04

கெரவலப்பிட்டி மின் உற்பத்தி நிலையத்தின் கட்டுமானப் பணிகளை இலக்கு வைத்து இலங்கையின் மின் கட்டணம் அதிகரிக்கப்பட உள்ளதாக ஊழலுக்கு எதிரான முன்னணி தெரிவித்துள்ளது.

அந்தமுன்னணியின்ஆலோசகர் கீர்த்தி தென்னக்கோன் வெளியிட்ட அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான யோசனை ஒன்று மின்சார சபைக்குச் சமர்ப்பிக்கப் பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

இலங்கையின் இயற்கை மின்னுற்பத்தியை மேற்கொள்வதற்குப் பல வெளிநாட்டு தனியார் நிறுவனங்கள் முன்வந்திருந்தன.

எனினும் இலங்கையில் உள்ள மின்னுற்பத்தித்துறை சார்ந்த மாப்பியாக்கள் அதற்கான சந்தர்ப்பத்தை வழங்கவில்லை.

தற்போதைய அரசு ஆட்சிக்கு வந்ததன் பின்னர் மேலும் 6 நிறுவனங்கள் இயற்கை மின்னுற்பத்தியை மேற்கொள்வதற்கு முன்வந்திருந்தன.

இது தொடர்பில் ஜனாதிபதியுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டு இலங்கையில் இயற்கை மின்னுற்பத்தித் துறையில் முதலீடு செய்ய இணக்கம் தெரிவித்திருந்தனர்.

இந்தநிலையில் அந்த அனைத்து நடவடிக்கைகளையும் புறந்தள்ளி மக்கள் மீது அதிக சுமையைச் சுமத்தும் வகையில் மின்னுற்பத்தித் துறை சார்ந்த மாப்பியாக்கள் மின்கட்டணத்தை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன.

இதேவேளை, நிலக்கரி மின்னுற்பத்தி மற்றும் டீசல் மின்னுற்பத்தி மூலம் பெரியளவில் மோசடிகள் இடம்பெற்று வருகின்றன.-என்றுள்ளது.(எ)

# வர்த்தகர்களிடம் கப்பம்பெற நல்லாட்சி அரசில் இடமில்லை

## அமைச்சர் பைஸர் முஸ்தபா கூறுகிறார்



கொழும்பு, ஏப்.04

கடந்த ஆட்சிக் காலத்தின் போது, அரசின் ஆதரவுடன், கொழும்பு - புறக்கோட்டையில் உள்ள வர்த்தகர்களிடம் இருந்து, பணம்பெறுவதை, பல குழுக்கள் பழக்கமாகக் கொண்டிருந்தன. ஆனால், நல்லாட்சி அரசில் இதுபோன்ற சம்பவம் நடைபெறாது என்பதை, நான் பகிரங்கமாக அறிவிக்கின்றேன் என்று, மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சர் பைஸர் முஸ்தபா தெரிவித்தார்.

புறக்கோட்டை வர்த்தக சமுதாயத்தின் வியாபாரிகள் ஐக்கிய கூட்டமைப்பின், வருடாந்த பொதுக் கூட்டத்துக்கு, பிரதம விருந்தினராகக்கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

வர்த்தகர்களிடம் இருந்து பணம்பெறும் எந்தவொரு சந்தர்ப்பமும், நல்லாட்சி அரசில் இடம்பெற்றதில்லை. உங்களிடமிருந்து தோற்றம் பெற்றவர்களே அவ்வாறு உங்களிடம் இருந்து சுரண்டினர். கொழும்பு வர்த்தக நகரம் உலகில் மிகப் பெரியதாகும். இதன் தோற்றத்துக்கும் தற்போது நிலைகொண்டிருப்பதற்கும் வர்த்தக சமுதாயமே காரணமாகும். கொழும்பில் மிகவும் சக்தி வாய்ந்த பிரதேசம் புறக்கோட்டை. அதுவே, வர்த்தகத்துக்கான இராச்சியமாகும். -என்றார். (எ)

# தலவாக்கலையில் மின்சாரம் தாக்கி குடும்பஸ்தர் சாவு

தலவாக்கலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வட்டகொடை மெதகும்புர மத்திய பிரிவில், நேற்று முன்தினம் இரவு மின்சாரம் தாக்கி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார் என்று தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச்சம்பவத்தில் உயிரிழந்தவர் 3 பிள்ளைகளின் தந்தையான, 41 வயதுடைய வேலுசாமி விஜயராஜ் என்று அடையாளம் காணப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

உயிரிழந்தவரின் சகோதரனின்ஓட்டோக்குநிறப் பூச்சுப் பூசிக் கொண்டிருந்த வேளையில், வெளிச்சத்துக் காக உபயோகிக்கப்பட்ட மின்குமிழின் மின்சார இணைப்பில் ஏற்பட்ட மின் கசிவு காரணமாகவே அவர் உயிரிழந்தார் என்றும் தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக லிந்துலை பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (எ)

# ஆஸ்திரேலியாவில் புகலிடம் கோரிய இலங்கைப் பெண் நாடு கடத்தப்பட்டார்

மோசடியான முறையில் ஆஸ்திரேலியாவில் புகலிடம் கோரிய இலங்கைப் பெண் ஒருவர் நாடுகடத்தப்பட்டுள்ளார்.

நிலாந்தி சேனாரத்ன என்ற இலங்கைப் பெண்ணே இவ்வாறு நாடு கடத்தப் பட்டுள்ளார் என்று அந்த நாட்டுக் குடிவரவு வழக்கறிஞர் ப்ரேங் லான்சா தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியாவில் புகலிடம் கோரி பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதும், அது நிராகரிக்கப்பட்ட நிலையில் நாடு கடத்தப்பட்டுள்ளார்.

ஆஸ்திரேலியாவில் பிறந்த அவரின் மகன் அந்த நாட்டில் இருக்க அனுமதிக்கப்பட்ட போதும், தாயார் நாடு கடத்தப்பட்டுள்ளார்.

சேனாரத்னவின் மகன் ஆஸ்திரேலியாவிலேயே பிறந்துள்ளார். அவர் கெய்ன்ஸ்ஸில் உள்ள பாடசாலை ஒன்றில் ஆரம்பக் கல்வியை ஆரம்பித்துள்ளார். அதனால், அவருடைய பாட்டியுடன் அவர் ஆஸ்திரேலியாவில் தங்க அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தான் ஓர் அகதி என்று கூறி அந்த இலங்கைப் பெண் மோசடி செய்துள்ளார். இதனால் அவர் தங்குவதற்கான அனுமதி தொடர்பில் கருத்திற்கொள்ள முடியவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

நிலாந்தி சேனாரத்ன விசா ஒன்றுக்காக விண்ணப்பித்திருந்த போதிலும் அவரது விசாவிண்ணப்பம் நிராகரிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், அவரால் அவரது மகனை வந்து பார்வையிடவும் முடியாது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இருப்பினும், அவரது பயணச் செலவுகளுக்குக் குடிவரவுத் திணைக்களமே பொறுப்பேற்றுள்ளது. (எ)








## "எமது நிலம் எமக்கு வேண்டும்"
# எழுச்சிப் போராட்டம் பிரான்ஸில்!

'எமது நிலம் எமக்கு வேண்டும்' எனும் எழுச்சிப் போராட்டம் ஒன்று பிரான்ஸில் நேற்று முன்தினம் Place de la Bastille பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இந்தப் போராட்டம் பிரான்ஸ் தமிழர் ஒருங்கிணைப்புக்குழு, தமிழ்ச் சங்கங்களின் கூட்டமைப்பு, தமிழீழ மக்கள் பேரவை ஆகியவற்றின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

இதன்போது மக்கள் பலரும் பதாகைகள், தமிழீழத் தேசியக்கொடி என்பவற்றைத் தாங்கியிருந்ததுடன், பிரெஞ்சு மொழி, ஆங்கில மொழியில் போராட்டத்தின் நோக்கம் பற்றி விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், பிரெஞ்சுமொழி, ஆங்கில மொழியிலான துண்டுப்பிரசுரங்களும் வெளிநாட்டவர்களுக்கு வழங்கப்பட்டன. வெளிநாட்டவர்கள் பலரும் இந்தப் போராட்டத்தின் நோக்கம் பற்றி அறிந்து கொள்வதில் ஆர்வம்காட்டினர். (ஐ)

## நாம் தொடர்ந்தும் போராட வேண்டும் என்பதை
# ஐ.நா. சபையின் 'நீதிப் படுகொலை' உணர்த்துகிறது
### அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை சுட்டிக்காட்டு

தமிழின அழிப்பின் மைய சூத்திரதாரியான இலங்கை அரசுக்கு, அது தொடர்பான விசாரணை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக இரண்டு ஆண்டுகள் கால அவகாசத்தை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை வழங்கியுள்ளமை, நாம் அதுவரை காத்திருப்பதற்காக அல்ல. களமாடுவதற்கான ஆணையே என்பதை உல கத் தமிழர்கள் உணர்ந்து கொண்டு செயலாற்ற வேண்டும்.

அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை இவ்வாறு தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

சூரியனின் மறைவைக் காணாத வகையிலான இராச்சியப் பெரும் பரப்பை தனது ஆளுகைக்குள் கொண்டிருந்த பிரித்தானிய சாம்ராச்சியத்தின் ஒருதலைப்பட்சமான ஆட்சி, அதிகாரக் கையளிப்பு இலங்கைத்தீவில் நிகழ்ந்த நாள் முதல் தமிழர்களின் தன்னுரிமைப் போராட்டம் பல்வேறு வடிவங்களில் தொடர்ந்தே வருகிறது.

தமிழர்களின் பெரும்பலமாக திகழ்ந்து வந்த தமிழீழ விடுதலைப் போராட்டம் பயங்கரவாதத்தின் பெயரால் அழித்தொழிக்கப்பட்ட பின்னணியில் மாபெரும் மனிதப் படுகொலை அரங்கேற்றப்பட்டிருந்தது.

பிராந்திய, உலகவல்லாதிக்க நலன்களுக்குள் லட்சத்துக்கு மேற்பட்ட தமிழர்கள் குழி தோண்டிப் புதைக்கப்பட்டது மட்டுமன்றி அதற்கான நீதியும் அதேகாரண காரியங்களை முன்னிறுத்தித் தடுத்து தாமதப்படுத்தப்பட்டு வருகிறது.

முள்ளிவாய்க்காலில் ஆயுதங்கள் மௌனிக்கப்பட்ட போதிலும் தமிழர்களின் தன்னுரிமைப் போராட்டம் அறவழியில் தொடர்ந்து வருகின்ற சூழலில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 'நீதிப்படுகொலை' யானது ஒருவித முடக்க நிலையை ஏற்படுத்திவிட்டதான உளவியல் சோர்வு நிலைக்குள் தமிழர்களை இட்டுச் சென்றுள்ளமை மறுக்க முடியாத உண்மையாகும்.

முள்ளிவாய்க்காலின் பின்னரான தமிழர்களின் நீதி வேண்டிய உரிமைப் போராட்டத்தின் மையப் புள்ளியாக ஜெனீவா திணிக்கப்பட்டிருந்தது. விரும்பியோ விரும்பாமலோ ஜெனீவா நோக்கியதாகவே உலகத் தமிழர்களின் போராட்டங்கள் வடிவமைக்கப்பட்டிருந்தது. இந்தச் சூழமைவில்தான் இனப்படுகொலை அரசுக்கான கால நீடிப்புத் தீர்மானம் தமிழர்களை உளவியல் சோர்வுக்குள்ளாக்கியுள்ளது.

*பிராந்திய, உலக வல்லாதிக்க நலன்களுக்குள் லட்சத்துக்கு மேற்பட்ட தமிழர்கள் குழி தோண்டிப் புதைக்கப்பட்டது மட்டுமன்றி அதற்கான நீதியும் அதேகாரண காரியங்களை முன்னிறுத்தி தடுத்து தாமதப்படுத்தப்பட்டு வருகிறது.*

இதுவே முடிந்த முடிவு கிடையாது. நாம் தொடர்ந்தும் கடுமையாகப் போராட வேண்டும் என்பதன் அறைகூவலாகவே ஜெனீவாவில் நிகழ்ந்த நீதிப் படுகொலை அமைந்துள்ளது. தமிழர் தாயகத்தின் பேரெழுச்சியில்தான் எமக்கான விடிவு தங்கியுள்ளது.- என்றுள்ளது. (ஐ)



*கனடாவில் ஈழத் தமிழர்களின் அரசியல் பலம் அதிகரிக்க வைக்க இது ஒரு நல்ல சந்தர்ப்பம் என்று பல்வேறு ஈழத் தமிழ் அமைப்புக் களும் கருதுகின்றன.*



# கனடா மார்க்கம் தோன்கில் தொகுதி இடைத் தேர்தலில் வெற்றி வாகை சூடுவாரா ஈழத் தமிழன் ராகவன்?

கனடாவில் இடைத்தேர்தல் நேற்று நடைபெற்றது. இந்தநிலையில் தேர்தல் பிரசாரத்தில் அந்த நாட்டுப் பிரதமர், மார்க்கம் தோன்கில் தொகுதியில் நேரடியாகக் களமிறங்கியிருந்தார். இதேவேளை அந்தத் தொகுதியில் கொன்சவேடிவ் கட்சியின் சார்பில் ஒரே ஒரு ஈழத் தமிழரான ராகவன் பரஞ்சோதி போட்டியிட்டுள்ளார்.தமிழர் போட்டியிட்டதால் தமிழ் வாக்காளர் மத்தியில் பரபரப்பும் எதிர்பார்ப்பும் நிலவுகிறது.

இந்தநிலையில் 5 தொகுதிகளுக்கான இடைத்தேர்தலின் முன்கூட்டிய வாக்குப்பதிவுகள் கடந்த வார இறுதியில் 4 நாள்கள் நடைபெற்றன. அதன் விவரங்கள் வெளியாகியுள்ளன. அதன்பிரகாரம் மார்க்கம் தோன்கில் தொகுதியிலேயே அதிக வாக்குகள் பதிவாகியுள்ளன. அதாவது 5577 வாக்குகள் அங்கு பதிவாகியுள்ளன. இடைத் தேர்தல் நடைபெறும் 5 தொகுதிகளிலும் அந்தத் தொகுதியிலேயே கடும் போட்டி நிலவுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கனடாவில் ஈழத்தமிழர்களின் அரசியல் பலம் அதிகரிக்க வைக்க இது ஒரு நல்ல சந்தர்ப்பம் என்று பல்வேறு ஈழத்தமிழ் அமைப்புக்களும் கருதுகின்றன. அதனால் அவை ஒன்றுபட்டு கொன்சவேடிவ் கட்சியின் ராகவன் பரஞ்சோதியின் வெற்றிக்காகக் கடுமையாக உழைத்தும் வந்தனர். இனப்படுகொலை மற்றும் போர்க்குற்ற விசாரணை, நிலவிடுவிப்பு போன்ற பல்வேறு தீர்க்கப்படாத பிரச்சினைகள் தொடர்பில் தமிழ்ச் சமூகம் அக்கறையுடன் உழைத்து வரும் இந்நேரத்தில், புலம்பெயர் நாடுகளில் ஈழத்தமிழரின் அரசியல் பலம் அத்தியாவசியமான ஒன்றாக இருக்கிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

காலைக்கதிர்





# “ஓ! அமெரிக்கா ...!! எங்கே போகிறாய்...?” 139

பொன்.வேணு கிருஷ்ணா

### ஏழை நாடுகளுக்கு என்ன கிடைக்கும்?

கார்பன் வெளியேற்றத்தைக் குறைப்பது என்பது பெரும்பாலும் முக்கிய பொருளாதார நாடுகளை உள்ளடக்குகிறது.

இதனால், பாரிஸ் ஒப்பந்தம் ஏழை நாடுகளோடு செய்வதற்கு ஒன்றுமில்லை என்று பொருள்படுகிறதா?

பணக்கார மற்றும் ஏழை நாடுகள் அனைத்தும், அவை ஒவ்வொன்றும் வெளியேற்றுகின்ற கார்பன் அளவைக் குறைப்பதற்கு இயன்ற வகையில் செயல்பட வேண்டும்.

பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் எதிர்பாராத பாதிப்புக்களை சமாளிக்க ஏழை நாடுகள் மற்றும் அதிக பாதிப்புக்கு உள்ளாகக்கூடிய நாடுகளுக்கு உதவுவதற்கும்தான் இந்த பாரிஸ் ஒப்பந்தம்.

பருவநிலை மாற்றத்திற்கான நிதி ஆதரவைதான் இது குறிக்கிறது. வளர்ச்சி அடைந்த நாடுகள் ஆண்டுதோறும் 100 பில்லியன் டொலர்களை வளர்முக நாடுகளுக்கு வழங்குவதையும் பாரிஸ் ஒப்பந்தம் குறிப்பிடுகிறது.

மாசு வெளியேற்றாத எரிபொருள்களுக்கும், தொழில்நுட்பங்களுக்கும் மாறுவதற்காகவும், மாறிவரும் பருவநிலைக்கும் ஏற்ப மாற்றங்களை உருவாக்க உதவுவதற்கு இந்த நிதி பயன்படுத்தப்படும்.

பருவநிலை மாறுதலுக்கு உதவ அளிக்கப்படும் நிதி வளர்ச்சி குறைந்த நாடுகளுக்கும், சிறிய தீவு நாடுகளின் நலன்களுக்கும் வழங்கப்படும்.

விரைவாக வளர்ச்சி அடைகின்ற நாடுகளில் மாசு வெளியேற்றாத எரிபொருள் மாற்றத்திற்கு நிதி ஆதரவு அளிப்பது, நன்கொடை அளிக்கின்ற நாடுகளின் முதன்மைத் தெரிவாக இருப்பதாக நிபுணர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

பணக்கார நாடுகள் ஓராண்டுக்கு 100 பில்லியன் டொலர் வழங்குவது 2020ஆம் ஆண்டுக்குள் எட்டக்கூடிய இலக்கு என்று சமீபத்தில் வழங்கப்பட்டுள்ள வரைவு தெரிவிக்கிறது.

ஆனால் இந்த வரைவு தங்களுடைய எதிர்பார்ப்புக்களைநிறைவேற்றவில்லை என்கிறார் ஐக்கிய நாடுகள் பேச்சுவார்த்தைகளில் வளர்ச்சி குறைந்த நாடுகள் அமைப்பின் தலைவர் தோசி மப்பனு-மப்பனு.

''ஓராண்டு எட்டக்கூடிய இலக்குகளின் தகவல்களை விவரிப்பதாகவும், மாற்றங்களைத் தழுவிக் கொள்வதற்கும், கருவிகளுக்கும் அவற்றைப் பயன்படுத்துகிற பாதைக்கும் இடையே சமநிலையை எட்டுவதற்கான பார்வையில் மாசு வெளியேற்றத்தைத் தணிப்பதற்கான ஒதுக்கீடுகளாலும் வளர்ச்சி குறைந்த நாடுகளின் எதிர்பார்ப்புகளை உள்ளடக்கி இந்த வரைவு இருக்கிறது.''

மிகவும் ஏழையான நாடுகளுக்கு பருவநிலை மாற்றங்களைச் சமாளிப்பதற்கு போராடுவதற்காக ஐந்தில் ஒரு பங்கு நிதி வழங்கப்பட வேண்டும் என்று ஏழை நாடுகளில் பருவநிலை மாற்றம் பற்றிய களப்பணிகளை மேற்கொண்டு வரும் சர்வதேச தன்னார்வத் தொண்டு நிறுவனமான ஒக்ஸ்ஃபாம் தெரிவித்திருக்கிறது.

பருவநிலை மாற்றத்துக்கு நிதி ஆதரவு வழங்குவதற்காக பணக்கார நாடுகள் வழங்குவதாக ஒப்பு கொண்டுள்ள 41 பில்லியன் டொலர் நிதி ஆதரவில் 8.7 பில்லியன் டொலர் மட்டுமே வளர்ச்சி குறைந்த நாடுகளுக்கு சென்றடைந்ததாக 2016 ஆம் ஆண்டு பருவநிலை மாற்ற நிதி ஆதரவு நிழல் அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

### மில்லியனுக்கு 400 பகுதிகளுக்கு மேலாக காற்று மாசுபாடு நிலையாக இருக்கும் 2016

புவியை வெப்பமடையச் செய்யும் கிரீன்ஹவுஸ் வாயு, கார்பன்டை ஒக்சைட்டு ஆகியவற்றின் வெளிமண்டல நிலைகள் இந்த ஆண்டு முழுவதும் மில்லியனுக்கு 400 பகுதிகளுக்கு மேலாக இருக்கின்ற முதல் ஆண்டாக 2016 அமையும் என்று பருவகால மாற்றத்தைக் கண்காணிக்கும் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

காலநிலையின் எதார்த்தத்தில் ஒரு புதிய கால கட்டத்தில உலகம் நுழைந்திருக்கும் நிலையில், இந்த வாயுக்கள் வெளியேற்ற அளவுகள் உலக அளவில் பல தலைமுறைகளாக கீழிறங்க போவதில்லை என்று உலக வானிலை ஆய்வு நிறுவனம் தெரிவித்திருக்கிறது.




வளி மண்டலத்தில் இருக்கின்ற கார்பன் டை ஒக்ஸைட்டின் அளவு, தொழில்புரட்சி உருவான காலகட்டத்துக்கு முன்பு இருந்ததை விட இப்போது 44 சதவீதம் அதிகமாகும்.

மீத்தேன் மற்றும் நைட்ரஸ் ஒக்சைட்டு உள்பட பிற கிரீன்ஹவுஸ் வாயுக்களின் அதிகரிப்பு விபரங்களையும் உலக வானிலை ஆய்வு நிறுவனத்தின் அறிக்கை வழங்கியுள்ளது.

பசுங்கூட வாயுக்களின் வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்துகின்ற புதிய தொரு ஒப்பந்தம் அடுத்த மாதத்திலிருந்து அமலாக இருக்கிறது. ஆனால், அதனுடைய கட்டுப்பாடுகள் உடனடியாக எவ்வித தாக்கத்தையும் ஏற்படுத்தப் போவதில்லை.

### பருவநிலை மாற்றத்தை எதிர்த்து சீனா தொடர்ந்து போராடும் என உறுதி

டொனால்ட் ட்ரம்ப் அமெரிக்காவின் அதிபரான பிறகு பருவநிலை மாற்ற விவகாரத்தை அமெரிக்கா எப்படி அணுகினாலும், பருவநிலை மாற்றத்துக்கு எதிராக சீனா போராடும் என்று உறுதியளித்துள்ளது என 2016 நவம்பரில் சீனா அறிவித்தது.




சீனா நிச்சயமாக தொடர்ந்து போராடும் என்று மொராக்கோவில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் சீன தூதுக்குழுவின் ஓர் உறுப்பினர் தெரிவித்துள்ளார்.

இந்த விஷயத்தில் சீனா நிச்சயமாக தொடர்ந்து இருக்கும் என்று மொராக்கோவில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் சீனத் தூதுக்குழுவின் ஓர் உறுப்பினர் தெரிவித்துள்ளார்.

கடந்த செப்ரெம்பர் மாதம், சீனா மற்றும் அமெரிக்கா ஒன்றாக பாரிஸ் ஒப்பந்தத்திற்கு தங்களுடைய ஆதரவை தெரிவித்தன.

உலக வெப்பமயமாதலைக் குறைக்கும் நோக்கில் இந்த ஒப்பந்தம் கொண்டு வரப்பட்டது.

ஆனால், முன்னர் இந்த பருவநிலை மாற்றத்தை வெத்து வேட்டு என்ற ட்ரம்ப் விமர்சித்திருந்தார்..

அவர் அதிபராகப் பொறுப்பேற்ற உடன் இந்த விவகாரத்தில் அமெரிக்கா அளித்த உறுதிமொழிகளை அவர் திரும்பப் பெற்றுவிடுவாரோ என்ற அச்சம் நிலவி வருகிறது.

### காலநிலை மாற்றத்தின் எதிரொலி: சராசரியைவிட வட துருவத்தில் அதிக வெப்ப நிலை பதிவு




வட துருவத்தில் உள்ள வெப்ப நிலையானது நவம்பர் மற்றும் 2016 டிசெம்பர் மாதத்தில் சராசரி வெப்ப நிலையைவிட ஐந்து டிகிரி அதிகமாக பதிவாகி கடந்தகால உச்சங்களை முறியடித்துள்ளது.


இதுபோன்ற வெப்பநிலை, கால நிலை மாற்றத்தின் காரணமாக அதிகரித்துக் காணப்படுவதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

வட அட்லாண்டிக் பகுதியிலிருந்து வரும் வெப்பக் காற்று மற்றும் குறைந்து வரும் ஆர்டிக் கடல் பனி ஆகிய காரணங்கள் இந்த நிகழ்விற்குப் பங்காற்றியுள்ளது.

தொழில்மயமாக்கலுக்கு முன், இது போன்ற ஆர்டிக் நிகழ்வை ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒருமுறை பூமி கண்டிருக்கலாம். ஆனால், தற்போதைய மாதிரிகள் அடிப்படையில் ஒவ்வொரு 50 ஆண்டுகளுக்கும் இந்நிகழ்வு நடைபெறுவதாகக் கணிக்கப்பட்டுள்ளது.

### அமெரிக்கா பாரிஸ் ஒப்பந்தத்தில் இருந்து வெளியேறுமா?

உலக வெப்பமடைவதைக் குறைக்கும் நோக்கிலான பாரிஸ் ஒப்பந்தத்தில் இருந்து, அமெரிக்கா நீங்கிவிடும் என்று தான் எதிர்பார்ப்பதாக அதிபர் டிரம்பின் பருவகால மாற்றத்துக்கான ஆலோசகர் மைரோன் இபெல் ஜனவரி 2017 இல் பி.பி.சியிடம் தெரிவித்திருக்கிறார்.




*பருவகால மாற்றம் என்பது ஏமாற்று வேலை என்று ட்ரம்ப் முன்னதாக அதனை நிராகரித்திருக்கிறார்.*

தேர்தலின்போது அளித்த வாக்குறுதிகளான பாரிஸ் ஒப்பந்தத்தில் இருந்து நீங்குவது, ஐக்கிய நாடுகள் அவையின் பருவகால மாற்றம் தொடர்பான திட்டங்களுக்கு நிதி ஆதரவை நிறுத்துதல் ஆகியவற்றைச் செயல்படுத்துவதில் அதிபர் ட்ரம்ப் உறுதியாக இருக்கிறார் என தான் நம்புவதாக மைரோன் இபெல் கூறியிருக்கிறார்.

### பருவநிலை மாற்றம் குறித்த பாரிஸ் ஒப்பந்தத்துக்கு ஐரோப்பிய நாடாளுமன்றம் ஒப்புதல்

*பருவநிலை மாற்றம் குறித்த பாரிஸ் ஒப்பந்தத்துக்கு ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது. இதன்மூலம், அடுத்த மாதம் இந்த ஒப்பந்தத்தை நடைமுறைப் படுத்த வழி செய்யப்பட்டுள்ளது.*

ஸ்டிரஸ்பர்கில் நடைபெற்ற வாக்கெடுப்பில், உலக அளவில் மாசு ஏற்படுத்துதலில் 55 சதவீத பங்கு வகிக்கும் குறைந்தது 55 நாடுகளால் உறுதி செய்யப்பட்டுள்ளதையடுத்து அந்த ஒப்பந்தம் இரண்டு தொடக்க நிலைகளைக் கடந்துவிட்டது.



ஒப்பந்தம் உறுதிசெய்யப்பட்ட பத்திரங்கள் ஐ.நாவில் சமர்ப்பிக்கப்பட்ட முப்பது நாள்களுக்குப் பிறகு, அது நடைமுறைக்கு வரும்.

பாரிஸ் ஒப்பந்தம் கடந்த வருடம் சுமார் 200 நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டது; அதிகரித்துவரும் புவி வெப்பமயமாதலைக் கட்டுக்குள் கொண்டு வருவதே அந்த ஒப்பந்தத்தின் பிரதான இலக்காகும்.

### ஆதரவு மற்றும் எதிர்ப்புக்கிடையே பருவநிலை மாற்றம் தொடர்பான புதிய ஆணையில் ட்ரம்ப் கையெழுத்து

பருவநிலை மாற்றம் தொடர்பான தடைகளை நோக்கமாக கொண்டு, முன்னாள் அதிபர் ஒபாமாவின் கால கட்டத்தில் கொண்டு வரப்பட்ட விதிமுறைகளை திரும்பப் பெறும் நிர்வாக ஆணையில் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் கையெழுத்திட்டுள்ளார்.

இதன் மூலம் நிலக்கரி எரிசக்தி மீதான தடை நடவடிக்கைப் போரையும், பணியிடங்களைக் கொல்லும் விதிகளையும் முடிவுக்குக் கொண்டு வர இயலும் என்று அதிபர் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

நிலக்கரிச் சுரங்கப் பணியாளர்கள் புடை சூழ பேசிய ட்ரம்ப், இந்தப் புதிய நிர்வாக ஆணை பல புதிய பணிகளை உருவாக்கும் என்று குறிப்பிட்டார்.

கேள்வி தொடரும்...

# தமிழ்த் தேசிய எழுச்சி



ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றி சிந்தனைப் புரட்சியை முன்னெடுத்தவர்களுள் விடுதலைப் புலிகளின் தத்துவ ஆசிரியரான அன்ரன் பாலசிங்கம் மிக முக்கியமானவர். அரசியல் ஞானம் மிக்க தத்துவ ஆசிரியர்.

ஈழத் தமிழினத்தின் உயரிய வரலாற்றுப் பதிவு ஏடான 'போரும் சமாதானமும்' என்ற நூலை அவர் படைத்திருக்கின்றார். இலங்கைத் தீவில் தமிழ்த் தேசிய எழுச்சி பற்றி அந்நூலில் அவர் குறிப்பிடும் நுட்பமான – துல்லியமான – விடயங்களை இக்கட்டுரைத் தொடரில் நாம் அறிந்து கொள்ளலாம்.




106

## யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த சமாதானப் பேச்சுகள்

### போர்நிறுத்த மீறல் குற்றச்சாட்டுகள்

அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன், ஜனாதிபதியின் செயலருக்கு எழுதிய பதில் கடிதத்தில் கண்காணிப்புக் குழுக்கள் செயற்படுவதில் எழுந்துள்ள தாமதத்திற்கு அரசாங்கத்தின் போக்கும் அணுகுமுறையும் காரணம் எனச் சுட்டிக்காட்டினார். பலப்பத்த பெண்டி எழுப்பிய மற்றும் சில பிரச்சினைகளுக்கும் அவர் விரிவான பதிலளித்தார். தமிழ்ச்செல்வனின் பதில் கடிதத்தை இங்கு தருகிறோம்.

*தலைமைச் செயலகம்*
*அரசியல் பிரிவு*
*யாழ்ப்பாணம்*
*13.02.1995*

*திரு. கே. பலப்பத்தபெண்டி*
*ஜனாதிபதியின் செயலர்*
*கொழும்பு*
*சிறிலங்கா*

*திரு. பலப்பத்தபெண்டி அவர்கட்கு,*

*1995 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 10 ஆம் நாள் திகதியிடப்பட்ட உங்களது கடிதத்துக்கு நன்றி.*

*வெளிநாட்டுப் பிரதிநிதிகளின் பங்களிப்புடன் கண்காணிப்புக் குழுக்கள் செயற்படுவதில் எழுந்துள்ள தாமதம் குறித்து நாம் உண்மையாகவும் ஆழமாகவும் கவலை அடைந்துள்ளோம். இந்தத் தாமதத்துக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் எந்த வகையிலும் பொறுப்பானவர்கள் அல்லர் என்பதை நாம் வலியுறுத்திக்கூற விரும்புகிறோம். பகை நிறுத்த உடன்பாட்டைச் சீரிய முறையில் செயற்படுத்தச் சமாதானக் குழுக்கள் செயற்படுவது அத்தியாவசியம் என்பதே எமது நிலைப்பாடாகும். அரசாங்கத்தின் போக்கும், அணுகுமுறையுமே இந்தத் தாமதத்துக்குக் காரணம் என நாம் கருதுகிறோம்.*

*1995 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 14 ஆம் நாளன்று, யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சுற்றுப் பேச்சுக்களின் போது, பகைநிறுத்த உடன்பாட்டிலுள்ள குறைபாடுகள் பற்றிச் சுட்டிக்காட்டிய நாம், அமைதி ஒப்பந்தத்தின் செயற்பாட்டு விதிகளில் திருத்தங்களையும் மாற்றங்களையும் செய்ய வேண்டுமென வலியுறுத்தினோம். கிழக்கு மாகாணத்தில் நிலவும் பிரச்சினைகளைத் தெளிவுபடுத்தி ஜனவரி மாதம் 15 ஆம் நாளன்று உங்களுக்கு விரிவான கடிதம் ஒன்றை நான் அனுப்பிவைத்தேன். கிழக்கில் விடுதலைப் புலிப் போராளிகள் நடமாடுவதில் எழுந்துள்ள சிக்கல்களைச் சுட்டிக்காட்டி, இது பற்றி நாம் கலந்துரையாடி, இப் பிரச்சினைகளைத் தீர்க்கும் வகையில் உடன்பாட்டு நடைமுறை விதிகளை விரிவுபடுத்தி, அவற்றைத் தொகுத்து மூல நகலுக்கு இணை ஆவணமாகச் சேர்க்க வேண்டுமென ஆலோசனை கூறினோம். கண்காணிப்புக் குழுக்கள் தமது பணிகளை இலகுவாகவும் சிறப்பாகவும் செய்ய வேண்டும் என்ற குறிக்கோளுடனேயே இந்த யோசனையைத் தெரிவித்தோம். ஆயுதம்தரித்த எமது போராளிகளின் நடமாட்டம் கரையோரக் கடற் பிராந்தியத்தில் எமது போராளிகளின் அசைவியக்கம், மீன்பிடிக்கான தடைகள், இப்படியாகப் பல முக்கிய பிரச்சினைகள் அமைதி உடன்பாட்டு வரையறைக்குள் வரவில்லை. அதனால் தான் இப்பிரச்சினைகள் பற்றி அரசும் விடுதலைப் புலிகளும் பேச்சுக்கள் நடத்தி, இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும் என நாம் வற்புறுத்தினோம். ஆக்கபூர்வமான, நடைமுறைச் சாத்தியமான எமது யோசனைகளுக்கு எதிர் மறையாகவும், பகையுணர்வுடனும் நீங்கள் அளித்த பதில்களும், நான்காவது சுற்றுப் பேச்சுக்களை வேண்டுமென்றே நீங்கள் இழுத்தடிப்பதுமே கண்காணிப்புக் குழுக்கள் செயற்படுவதில் தாமதத்தை ஏற்படுத்தி இருக்கின்றன.*

*விடுதலைப் புலிகளின் தலைமையை வெளிநாட்டுப் பிரதிநிதிகள் சந்திப்பதை அரசாங்கம் வேண்டுமென்றே இழுத்தடித்தது. இரு இனங்களுக்கு மத்தியில் எழுந்த போர் நெருக்கடிக்கு மத்தியஸ்தம் வகிக்க வரவழைக்கப்பட்ட வெளிநாட்டுப் பிரதிநிதிகள், நெருக்கடியில் சம்பந்தப்பட்ட இரு தரப்புத் தலைமைகளையும் சந்திப்பதே சரியான ஒழுங்கு மரபாகும். அப்பொழுதுதான் அவர்கள் இனநெருக்கடியின் தாற்பரியத்தைப் புரிந்து நடுநிலை வகித்துப் பணியாற்ற முடியும். நாம் எவ்வளவோ அழுத்தங்கள் கொடுத்ததற்குப் பின்புதான் நீங்கள் அவர்களைச் சந்திக்க அனுமதித்தீர்கள். இதனையடுத்து சென்றவாரம் நாம் அவர்களைச் சந்தித்தோம். நாம் அவர்களைச் சந்தித்த போது கண்காணிப்புக் குழுக்களின் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் பங்குகொள்வதை வரவேற்றதுடன், சமாதானக் குழுக்கள் விரைவில் செயற்படச் செய்யவேண்டும் என்ற எமது ஆவலையும் வெளிப்படுத்தினோம். அமைதி உடன்பாட்டிலுள்ள குறைபாடுகளையும் சுட்டிக்காட்டிய நாம், உடன்பாட்டு விதிகள் திருத்தியமைக்கப்பட்டு விரிவாக்கம் செய்யப்பட வேண்டுமென வற்புறுத்தினோம். அவர்களும் தனியே கூடி, மந்திராலோசனை நடத்தி நாம் தெரிவித்த கருத்துக்களுக்கு ஏகமனதாக இணக்கப்பாடு தெரிவித்தனர். வெகுசீக்கிரமாக அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் சந்தித்து, பிரச்சினைகளை விவாதித்து, உடன்பாட்டு விதிகளை மேலும் விரிவுபடுத்தி, அவற்றை ஒரு முழுமையான ஆவணமாகத் தொகுத்து, மூலப் பிரதியின் இணைப்பாகச் சேர்க்க வேண்டுமென யோசனை தெரிவித்தார்கள். இவ்விதம் செய்தால், கண்காணிப்புக் குழுக்கள் திறமையாகச் செயற்படுவதற்கு ஏதுவாக இருக்குமென்பது அவர்களது நிலைப்பாடு. இந்தச் சந்திப்பில் அரச பிரதிநிதியாகக் கலந்து கொண்ட பிரிகேடியர் பீரிஸ் வெளிநாட்டுப் பிரதிநிதிகளின் முடிவை ஏற்றுக்கொண்டு, அதனை அரசாங்கத்துக்குத் தெரியப்படுத்துவதாகச் சொன்னார். இது பற்றிக் கதைத்து முடிவு எடுப்பதற்காக மிக விரைவில் நான்காவது சுற்றுப் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டுமெனத் தாம் அரசாங்கத்தைக் கேட்கப் போவதாகவும் தெரிவித்தார்.*

*வெளிநாட்டுப் பிரதிநிதிகளின் நிலைப்பாட்டை நாம் ஏற்றுக் கொள்கிறோம். சிக்கலான பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் நோக்கில் நாம் விரைவில் சந்தித்துப் பேசவேண்டும். கண்காணிப்புக் குழுக்கள் செயற்படுவதற்கு இது வழிவகுக்கும். இந்தக் குழுக்கள் செயற்படுவதற்கு முன்னர், இருதரப்பும் இணக்கம் கண்ட, முழுமையான போர்நிறுத்த செயற்பாட்டுத்திட்டம் உருவாக்கப்படுவது அவசியமாகும். கண்காணிப்புக்குழுக்கள் இயங்கிவரும் அதேவேளையில், போர் நிறுத்த நடைமுறைப் பிரச்சினைகள் பற்றிப் பேசலாம் என நீங்கள் தெரிவித்த கருத்து எமக்கு ஏற்புடையதல்ல. தாமதமின்றி, இழுபறியின்றிப் பேச்சுக்களைத் தொடர்ந்திருந்தால் இப் பிரச்சினைகளுக்கு எப்பொழுதோ தீர்வு கண்டிருக்கலாம். எனவே, இச்சிக்கலுக்குத் தீர்வு கண்டு, கண்காணிப்புக் குழுக்களை தாமதமின்றி இயக்கிவிடும் நோக்குடன் நாம் விரைவில் சந்திக்க வேண்டும்.*

*பகை நிறுத்த உடன்பாட்டு விதிகளுக்கு அமைவாக, யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டு-அம்பாறை ஆகிய ஆறு மாவட்டங்களிலும் ஆறு கண்காணிப்புக்குழுக்கள் நியமிக்கப்பட வேண்டும் என்பதை நீங்கள் அறிவீர்கள். எம்முடன் கலந்தாலோசிக்காது, நான்கு கண்காணிப்புக் குழுக்களை மட்டும் நியமிப்பதற்கே அரசாங்கம் விரும்புவது போலத் தெரிகிறது. உடன்பாட்டில் இணங்கியதுபோல ஆறு குழுக்கள் நிறுவப்படல் வேண்டும் என்றும் கனடாவிலிருந்தும் நெதர்லாந்திலிருந்தும் மேலதிகமாக இரு வெளிநாட்டுப் பிரதிநிதிகள் காலதாமதமின்றி வரவழைக்கப்பட வேண்டும் எனவும் வற்புறுத்துகிறோம்.*

*அரச ஆயுதப் படைகளின் ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளின் மத்தியிலும், பகை நிறுத்த உடன்பாட்டு விதிகளை மீறாது விடுதலைப் புலிகள் இயக்கம் மிகவும் கண்டிப்பான முறையில் அமைதியைப் பேணி வருகிறது. போர் நிறுத்த மீறல்களென நீங்கள் அனுப்பிவைத்த பட்டியலில் தெரிவிக்கப்படும் சம்பவங்கள் திரிவுபடுத்தப்பட்ட கட்டுக்கதைகள். கிழக்கு மாகாணத்தில் அரச ஆயுதப் படைகளின் அத்துமீறல்கள் அடங்கிய பட்டியல் ஒன்றை இத்துடன் அனுப்பி வைக்கிறோம். மிகவும் பாரதூரமான போர் நிறுத்த மீறலாக நீங்கள் சித்திரித்துக் காட்டிய சம்பவம் குறித்து நாம் ஏற்கனவே கேணல். ரத்வத்தையுடன் தொடர்பு கொண்டுள்ளோம். இந்தச் சம்பவம் ஜனவரி மாதம் 23 ஆம் நாள் மட்டக்களப்பிலுள்ள கல்குடாவில் நிகழ்ந்தது. எமது ஏழு போராளிகளை ஏற்றிச் சென்ற கடற்புலிப் படகு ஒன்று, இயந்திரக் கோளாறு காரணமாக கல்குடா கரையோரமாகத் தரையிறங்க நேர்ந்தது. இது முற்றிலும் எதிர்பாராமல் நிகழ்ந்த சம்பவம். பகை நிறுத்த உடன்பாட்டை மீறும் நோக்கம் எதுவும் எமது போராளிகளுக்கு இருக்கவில்லை. நீங்கள் கூறியது போல எமது போராளிகள் கனரகப் பீரங்கியைக் கொண்டு செல்லவில்லை. ஓர் இயந்திரத் துப்பாக்கியையே அவர்கள் வைத்திருந்தார்கள். எமது போராளிகள் கைது செய்யப்பட்டு பின்பு விடுதலை செய்யப்பட்டனர். ஆனால், அவர்களது ஆயுதங்களும், தொலைத்தொடர்புக் கருவிகளும், அவர்கள் சென்ற படகும் இன்னும் கையளிக்கப்படவில்லை. இந்தப் பொருள்களை மீட்பதற்கு நாம் எத்தனையோ முயற்சிகளை எடுத்தும் இப்பிரச்சினை இன்னும் தீர்க்கப்படவில்லை. இந்தச் சம்பவம் தற்செயலாக நடைபெற்றது என்பதாலும் போர் நிறுத்தத்தை மீறும் நோக்கம் எமக்கு இருக்கவில்லை என்பதாலும், இப் பொருள்களை எம்மிடம் திருப்பி ஒப்படைக்குமாறு அப் பிரதேச இராணுவத் தளபதிக்கு உத்தரவிடுமாறு உங்களை வேண்டுகிறோம். பகை நிறுத்த உடன்பாடானது ஆயுதங்களைப் பறிமுதல் செய்வதை அனுமதிக்கவில்லை என்பதை நீங்கள் அறிவீர்கள். எனவே, இந்த ஆயுதங்கள் எம்மிடம் திருப்பி ஒப்படைக்கப்படாத பட்சத்தில், போர் நிறுத்த நல்லெண்ணத்துக்குக் குந்தகம் விளைவிக்கும் பகைமையான சமிக்ஞையாகவே நாம் கருதுவோம்.*

*நித்தம்புவவில் நிகழ்ந்த சம்பவத்துக்கும் எமது இயக்கத்துக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. இந்தச் சம்பவத்தில் தொடர்புடையதாக நீங்கள் குறிப்பிட்ட நபர் விடுதலைப் புலிகளின் உறுப்பினர் அல்லர். விடுதலைப் புலிகளால் ஜனாதிபதிக்குப் பாரதூரமான பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக உருவகித்துக் காட்டுவது எமக்கு ஆச்சரியத்தையும் கவலையையும் அளிக்கிறது. இது ஆதாரமற்ற புனைகதையாகும்.*

*கிழக்கு மாகாணத்தில் நாம் பெருமளவில் ஆட்சேர்ப்பில் இறங்கியிருப்பதாகவும், புதிய படை முகாம்களை நிறுவிவருவதாகவும், கிழக்கில் ஒரு போருக்குத்தயார் செய்து வருவதாகவும் நீங்கள் முன்வைக்கும் குற்றச்சாட்டுகளில் எவ்வித ஆதாரமும் இல்லை. எமது அரசியல் போராளிகள், சுதந்திரமான முறையில் எமது மக்கள் மத்தியில் அரசியல் வேலைகள் செய்வதில் உங்களுக்கு ஆட்சேபம் இராது என நினைக்கிறேன்.*

*விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான முருங்கனில், குடிமக்களின் நிர்வாகத்தைப் பேணுவதற்காக நாம் ஒரு காவல்துறை நிலையத்தை நிறுவியது உண்மைதான். இது எவ்வகையிலும் பகை நிறுத்த உடன்பாட்டை மீறவில்லை.*

*உங்களது கடிதத்தில் நீங்கள் எழுப்பிய பிரச்சினைகளைத் தெளிவுபடுத்தி விளக்கம் தந்துள்ளோம். பேச்சுக்களை விரைவில் தொடங்கினால் ஏனைய முக்கிய பிரச்சினைகள் பற்றிப் பேசி, சுமுகமான தீர்வு காணலாம் என நம்புகிறோம்.*

*நன்றியுடன்*
*உங்கள் நேர்மையுள்ள*
*சு.ப.தமிழ்ச்செல்வன்*
*பொறுப்பாளர்*
*அரசியல்துறை*
*தமிழீழ விடுதலைப் புலிகள்*

(தொடரும்...)







வவுனியா செட்டிகுளம், கப்பாச்சி நாமகள் பாடசாலைக்கு புளொட் அமைப்பின் ஜேர் மன் கிளையின் அனுசரணையுடன் பரிசுப் பொருள் கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. (ஐ)





கியூடெக்- கரித்தாஸ் சர்வமத சகவாழ்வு ஒன்றுகூடலும் முதியோர் கௌரவிப்பும் வண்ணார்பண்ணை முஸ்லிம் கலவன் பாட சாலை முன்றிலில் அண்மையில் முதியோர் சங்கத் தலைவர் சி.சிவஞானம் தலைமையில் நடைபெற்றன. (ஐ-19)









சாவகச்சேரி பூவேந்தன் முன்பள்ளியின் 23 ஆவது மெய்வன்மைப் போட்டி நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற போது எடுக் கப்பட்ட படங்கள்... (ஐ-10)



நாவற்குழி சான்றோர் விளையாட்டுக் கழகத் திற்கு ஒரு தொகுதி விளையாட்டு உபகரணங்கள் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராம நாதனது பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து வழங்கப்பட்டன.

சுதந்திரக் கட்சியின் யாழ்.மாவட்ட தலைமைச் செயலகத்தில் வைத்து விளையாட்டு உபகர ணங்களை நாடாளுமன்ற உறுப்பினர் அங்க ஜனது பிரத்தியேக செயலாளரும் அவரது தந் தையாருமான சதாசிவம் இராம நாதன் வழங்கி னார். (ஐ-21)









பாரம்பரிய உணவுப் பழக்கம் தொடர்பான விழிப் புணர்வை ஏற்படுத்தும் முகமாக யுனிசெவ் நிறுவன நிதி அனுசரணையுடன் யாழ். சமூக செயற்பாட்டு மையத்தின் நடைமுறைப்படுத்தலில் தெல்லிப்பழை தாய்மார் கழகங்களும் தெல்லிப்பழை சுகாதாரப் பணி மனையும் இணைந்து நடத்திய உணவுத் திருவிழா தெல் லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் அண்மையில் நடைபெற்றது. (ஐ)

# செயற்றிறன் வாய்ந்த அரசியல் இயக்கமே இன்று இந்த நாட்டினது தாகமாக உள்ளது

கொழும்பு, ஏப்.04

நேர்மையும் செயற்றிறனும் வாய்ந்த தூய்மையான அரசியல் இயக்கமே இன்று இந்த நாட்டின் இளைஞர் தலைமுறை உள்ளிட்ட அனைத்து மக்களதும் அரசியல் தாகமாக உள்ளது.

-இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கொழும்பு சுகததாச உள்ளக அரங்கில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் இளைஞர் முன்னணியின் தேசிய மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

ஊழல், மோசடிகளை மேற்கொண்டு அரச வளங்களையும் பொது மக்களின் சொத்துக்களையும் முறையற்றவகையில் பயன்படுத்தி தமது சட்டைப் பைகளை நிரப்பிக் கொள்ள எந்தவொரு அரசியல்வாதியும் எத்தனிப்பார்களாயின் அவர்கள் எந்த அரசியல் கட்சியைச் சார்ந்தவர்களாயினும் சரி அவர்களுக்கெதிராக உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்குத் தான் ஒருபோதும் பின் நிற்கப்போவதில்லை.




நேர்மையானதும் தூய்மையானதுமான அரசியல் இயக்கத்துக்காக ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி மீண்டும் முன் வந்திருப்பதை இளைஞர் பலத்துடனான இந்த மாநாடு சிறப்பாக எடுத்துக்காட்டுகிறது.

நாம் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைத்துவத்தைப் பொறுப்பேற்றது எனது குடும்பத்தில் எவருக்கும் கிரீடம் அணிவிப்பதற்காகவல்ல. நாட்டின் இளைஞர் தலைமுறைக்கும் பொது மக்களுக்கும் சிறந்ததோர் எதிர்காலத்தைக் கட்டியெழுப்புவதற்குக் கட்சியைப் பலப்படுத்தவே.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியைப் புனரமைத்து புதிய செயற்றிட்டங்களுடன் முன்கொண்டு செல்லவுள்ளோம்.

கட்சியின் பயணத்தில் பல்வேறு தடைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது. கட்சிக்குத் தலைமைத்துவத்தை வழங்குமாறு தமக்கு அழைப்பு விடுக்கப்பட்டால் கட்சியை முன்கொண்டு செல்லவும் இடமளிக்கப்பட வேண்டும்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி கிராமங்கள், நகரங்களிலுள்ள அனைவருக்காகவும் திறக்கப்பட்டுள்ளது. உள்ளூராட்சித் தேர்தலை இந்த வருடம் நடத்தக் கூடியதாக இருக்கும். அத்தேர்தலில் வேட்பாளர்களை வெற்றிபெறச் செய்வதன்றி இளைஞர்கள் வேட்பாளர்களாக இருந்து கட்சியை வெற்றிப் பாதையில் கொண்டுசெல்ல முன்வர வேண்டும்.-என்றார்.

'தீர்வுக்குப் பலம்' என்ற கருப்பொருளின் கீழ் நாடெங்கிலும் இருந்து சுமார் 12 ஆயிரம் இளைஞர், யுவதிகள் பங்குபற்றிய இந்த மாநாடு கோலாகலமாக நடைபெற்றது. 13 வருடங்களுக்குப் பின்னர் இந்த மாநாடு நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. இதுவரை காலமும் தமது பிரச்சினைகளை முன்வைத்த இளைஞர் சமூகம் இந்த முறை பிரச்சினைகளுக்குத் தீர்வுகளையும் முன்மொழிவுகளையும் முன்வைத் திருந்தமை மாநாட்டின் விசேட அம்சமாகும். (ஐ)

# ஐ.எஸ்ஸில் இணைந்த இலங்கையர் கடும் அழுத்தங்களுக்கு மத்தியில்!

## பிரதமர் ரணில் தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.04

இலங்கையில் இருந்து சிரியாவுக்குச் சென்று ஐ.எஸ். அமைப்புடன் இணைந்து கொண்டவர்கள், கடும் அழுத்தங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

-இந்திய ஊடகமொன்றுக்கு வழங்கிய பேட்டியிலேயே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

-இது தொடர்பில் பிரதமர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

அவ்வாறு இணைந்து கொண்டவர்களில் சிலர் கொல்லப்பட்டுள்ளனர். ஏனையவர்கள் யார் என்பதை அடையாளம் கண்டு அவர்களின் குடும்பத்தவர்களுடன் பேச்சு மேற்கொண்டுள்ளோம்.

இலங்கையில் இருந்து சென்றவர்கள் அமெரிக்கா, ஈராக் மற்றும் சிரிய படையினர் முன்னேறி வருவதன் காரணமாகக் கடும் அழுத்தங்களுக்கு உள்ளாகியுள்ளனர் என்பதே இறுதியாக எமக்குக் கிடைத்த செய்தியாகும்.-என்றார். (ஐ)



# புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய உத்தரப் பொங்கல் எதிர்வரும் ஞாயிறு

கிளிநொச்சி, ஏப். 04

கிளிநொச்சி கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பங்குனி உத்தரப்பொங்கல் விழா எதிர்வரும் 9 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்த விழா நேற்று விளக்கு வைத்தலுடன் ஆரம்பமாகி பாரம்பரிய முறைப்படி தென்மராட்சி மீசாலை புத்தூர் சந்தி படமரவடியில் இருந்து படையல்பண்டம் எடுத்து வருவதற்காக மாட்டு வண்டில்கள் புறப்பட்டன.

அத்துடன், நிகழ்வுக்குத் தேவையான ஏற்பாடுகளைத் தர்மகர்த்தாக்களும் பரிபாலன சபையினரும் முன்னெடுத்து வருகின்றனர்.

வழமைபோன்று ஆலயப் பொங்கல் விழாவுக்கான போக்குவரத்து ஒழுங்குகள் பாதுகாப்பு ஏற்பாடுகள் உள்ளிட்ட சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று ஆலய நிர்வாகம் தெரிவித்துள்ளது. (ஐ)

## நாளை மின் தடை

யாழ்ப்பாணம்,ஏப்.04

நாளை புதன்கிழமை யாழ்ப்பாணம், மன்னார் பிரதேசங்களின் சில இடங்களில் காலை 8.30 மணி முதல் மாலை 5.30 மணி வரையில் மின்சாரம் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி யாழ்.பிரதேசத்தில் வில்லூன்றி கேணியடி, நாவாந்துறை ஒருபகுதி, முத்தமிழ்வீதி, மீனாட்சிஅம்மன் கோவிலடி, யாழ்.சிறைச்சாலை, யாழ்.பொலிஸ் நிலையம், யாழ்.துரையப்பா விளையாட்டரங்கு ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் நாகசெட்டி, இராசமடு, நானாட்டானிலிருந்து அச்சங்குளம் வரை, எருவிட்டான், அறுகுக்குன்று ஆகிய இடங்களிலும் மின்தடை ஏற்படும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ)

# இளைஞர்களது தலைமைத்துவத்தை ஏற்க முதியவர்கள் முன்வர வேண்டியது அவசியம்

## கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் பிரதி முதல்வர் லலீசன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.04

முதியவர்கள் இளையவர்களுக்கு முன்மாதிரியாகச் செயற்பட வேண்டும். அரசியலிலும் சரி ஏனைய சமூக நிறுவனங்களிலும் சரி இளையோரை அங்கீகரித்து அவர்களுடைய தலைமைத்துவத்தை ஏற்றுக் கொள்ள முதியவர்கள் முன்வர வேண்டும்.

-இவ்வாறு கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் பிரதி முதல்வர் ச.லலீசன் தெரிவித்தார்.

ஏழாலை வடக்கு விவேகானந்தர் இளைஞர் கழகத்தின் ஆண்டு விழாவும், கல்விச் சாதனையாளர் கௌரவிப்பு நிகழ்வும் அண்மையில் ஏழாலை வடக்கு - கிழக்கு சனசமூக நிலைய மண்டபத்தில் இடம்பெற்றது.

விவேகானந்தர் இளைஞர் கழகத் தலைவர் க.கனகதுர்க்கா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

இலங்கையில் 13 வயது தொடக்கம் 29 வயதுவரை உள்ள இளைஞர் பருவம் சாதனைகளைச் செய்யத் துடிக்கும் பருவம் ஆகும். தனக்கென ஓர் அங்கீகாரத்தை எதிர்பார்க்கும் பருவம்.

இந்தப் பருவத்தில் சமூகப் பணிகளில் ஈடுபட ஓர் இளைஞர் குழு முன்வருகிறது எனின் அவர்களை ஊக்கப்படுத்தி அங்கீகரிப்பது வளர்ந்தவர்களின் கடமை ஆகும். அதை விடுத்து இளைஞர்கள் வாள் வெட்டுக் கலாசாரத்துக்குச் சென்றுவிட்டார்கள் என்றோ போதையில் கிடக்கின்றார்கள் என்றோ ஒப்பாரி வைப்பதால் பயனில்லை.

சில அமைப்புக்களில் வாழ்நாள் தலைவர்களாக இருக்க விரும்பும் முதியவர்கள் தமக்கு பின் யார் வருவார் என்று புலம்புவதையும் பார்க்கின்றோம்.

இளைஞர்களாகிய நீங்கள் வாழ்க்கையில் உயர்வடைய வேண்டுமானால் ஒரு கொள்கையைப் பின்பற்றுங்கள். எந்தக் கஷ்டம் வந்தாலும் அதை தளர்த்தி விடாதீர்கள். நேர முகாமைத்துவத்தை வாழ்வில் கைக்கொள்ளுங்கள். இன்று யாழில் நடக்கும் பெரும்பாலான நிகழ்வுகள் குறித்த நேரத்துக்கு ஆரம்பிப்பதில்லை. அதே போல் அதனை முடித்துவைப்பதற்கும் நேர வரையறை இடப்படுவதில்லை.

இன்றைய இளைய சமூகமே இந்நிலைமை மாற்றவல்லது. நேரம் என்பது மிகப்பெறுமதியான வளம் என்பதை உணருங்கள். சுவாமி விவேகானந்தர் நேரத்தைப் பற்றிக் குறிப்பிடும் போது ''ஓடுவது முள் அல்ல உன்னுடைய வாழ்க்கை'' என்றார். உங்களுக்கென சில வரையறைகளை ஆக்கிச் செயற்படுவது ஆரம்பத்தில் கடினத்தன்மை வாய்ந்ததாக நாளடைவில் உங்கள் கொள்கைப் பற்றால் நீங்கள் அடையாளப்படுத்தப்படுவீர்கள்.-என்றார். (ஐ-21)

## கைதுசெய்யப்பட்ட மீனவர்களை மீட்க நடவடிக்கை!

போதைப்பொருள்கள் வைத்திருந்த குற்றச்சாட்டில் இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ள காரைக்கால் மீனவர்கள் அறுவரையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என புதுச்சேரி முதல்வர் நாராயணசாமி தெரிவித்துள்ளார்.

காரைக்காலைச் சேர்ந்த கஜேந்திரன் (வயது-31), தமிழ்மணி (வயது-31), அருள் (வயது-22), ஜெயசீலன் (வயது-20), பாக்கியராஜ் (வயது-21) பொன்னுசாமி (வயது-43) ஆகிய அறுவருமே கைதுசெய்யப்பட்டவர்கள் ஆவர். கடந்த 31ஆம் திகதி இவர்களை இலங்கை கடற்படையினர் போதைப் பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

# சுற்றுலாவா, தீவிரவாதமா? நீங்களே தேர்ந்தெடுங்கள் இளைஞர்களே!

## காஷ்மீரில் பிரதமர் மோடி



காஷ்மீர், ஏப்.04

காஷ்மீர் இளைஞர்களுக்கு முன்பு 2 பாதைகள் உள்ளன. ஒன்று சுற்றுலா, மற்றொன்று தீவிரவாதம். இதில் எதை தேர்ந்தெடுப் பது என்பது இளைஞர்களின் கைகளில் தான் உள்ளது.

-இவ்வாறு பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

ஜம்மு காஷ்மீரில் அமைக்கப்பட்டுள்ள இந்தியாவின் மிக நீளமான சுரங்கப்பாதையை பிரதமர் மோடி நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை திறந்து வைத்து உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த 40 ஆண்டுகளாக இங்கு ரத்தம் சிந்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. பல தாய்மார்கள் தங்கள் மகன்களைப் பறிகொடுத்துள்ளனர். அதற்குப்பதிலாக சுற்றுலாவை தேர்ந்தெடுங்கள். நீங்கள் மாற்றத்தை உணர்வீர்கள்.

கல்லின் வலிமை குறித்து காஷ்மீர் இளைஞர்களுக்குஎடுத்துரைக்க விரும்புகிறேன். தவறான வழிநடத்துதலால் சில இளைஞர்கள் கல்வீச்சில் ஈடுபட்டு வருகின்றனர். அதேநேரம் சில இளைஞர்கள் காஷ்மீரின் எதிர்காலத்துக்காகக் கற்களை வெட்டி வருகின்றனர்.

பணத்தால் மட்டும் செனானி-நஷ்ரி சுரங்கப்பாதை அமைக்கப்படவில்லை. காஷ்மீர் இளைஞர்களின் வியர்வை, உழைப்பால் இந்தச் சுரங்கப்பாதை கட்டி எழுப்பப்பட்டுள்ளது. இதன் மூலம் ஜம்மு காஷ்மீரின் பயணத் தூரம் குறைந் துள்ளது. இதன் மூலம் மாநிலம் வளர்ச்சிப் பாதையில் பயணிக்கும்.

பாகிஸ்தானால் தன்னையே காப்பாற்றிக் கொள்ள முடியவில்லை என்பதை நீங்கள் உணரவேண்டும். இந்த நேரத்தில் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் வசிக்கும் மக்களுக்குஓர் அழைப்பு விடுக்கிறேன். இந்திய அரசின் காஷ்மீர் மாநிலத்தில் மேற்கொள்ளப்படும் வளர்ச்சித்திட்டங்களைப் பாருங்கள். உங்கள் எதிர்காலம் என்ன? அதை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.- என்றார். (ச)

## நான் இந்தியக் கலாசார தூதர்! அஸாமில் தலாய் லாமா பெருமிதம்

வோஹாட்டி, ஏப்.04

நான் இந்திய கலாசாரத்தின் தூதர். கடந்த சில ஆண்டுகளாக என்னை இந்தியாவின்மகன்என்றே குறிப்பிட்டு வருகிறேன். இது தொடர்பில் சீன ஊடகங்கள் என்னிடம் கேள்வி எழுப்பின.

-இவ்வாறு திபெத் புத்த மதத் தலைவர் தலாய்லாமா தெரிவித்துள்ளார்.

அஸாமின் குவாஹாட்டி நகரில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்திய அரசின் விருந்தினராக 58 ஆண்டுகள் தர்மசாலாவில் தங்கியுள்ளேன். எனது மூளை முழுவதும் நாலந்தாவின் சிந்தனைகள் நிரம்பிவிட்டன. கடந்த 50 ஆண்டுகளாகச் சப்பாத்தி, தான் சாப்பிட்டு வருகிறேன். எனவே உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் என்னை இந்தியனாகவே உணர்கிறேன்.

நான் எப்போதுமே சமூக ஒற்றுமையை வலியுறுத்தி வருகிறேன். நாம் அனைவரும் மனிதர்கள். எனவே மனித நேயத்தை முன்னிறுத்தினால்கருத்து வேறுபாடுகள், பிரச்சினைகள் குறைந்துவிடும். எனது வாழ்நாளில் மிகப்பெரிய மாற்றத்தைச் சந்திப்பேன் என்று எதிர்பார்க்கவில்லை.

எனினும்கல்வி மூலம் எதிர்காலச் சந்ததியினர் கருணை, அன்பைப் புரிந்து கொள்வார்கள். நமது சமுதாயத்தில் இருந்து வன்முறையை ஒழிப்பது நம் அனைவரினதும் கடமை. -என்றார். (ச)

## விவசாயிகளுக்கு ஆதரவு தெரிவித்த 80 மாணவர் கைது

டில்லியில் போராட்டத்தில் ஈடுபடும் தமிழக விவசாயிகளுக்கு ஆதரவாகக் கடலில் இறங்கிப் போராட்டம்மேற்கொண்ட புதுச்சேரி அரசசட்டக்கல்லூரி மாணவர்கள் 80 பேரை நேற்றுத் திங்கட் கிழமை பொலிஸார் கைது செய்தனர்.

தமிழகத்தைச் சேர்ந்த விவசாயிகள் கடந்த 20 நாள்களாகத் டில்லி ஜந்தர் மந்தரில் போராட்டம் நடத்திவருகின்றனர். இந்த நிலையில், சட்டக் கல்லூரி மாணவ, மாணவியர் வகுப்புகளைப் புறக்கணித்துக் கடற்கரைச்சாலை டியூப்ளே சிலை அருகே கூடி, கடலில் இறங்கிப் போராட்டம் மேற்கொண்டனர். அங்கு வந்த பொலிஸார் அவர்களைத் தடுக்க முயன்ற போது, இரு தரப்புக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. இதனை அடுத்தே மேற்படி மாணவர்கள் கைது செய்யப்பட்டனர். (ச)

## தேசத்துரோக வழக்கு: வைகோவுக்கு மறியல்!



சென்னை, ஏப்.04

தேசத்துரோக வழக்கில் வைகோவை 15 நாள்கள் விளக்கமறியலில் வைக்க சென்னை பெரு நகர குற்றவியல் நடுவர்நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

கடந்த 2009 ஆம் விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாகவும், இந்திய இறையாண்மைக்கு எதிராகவும் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ பேசினார் என்ற குற்றச்சாட்டில் இவர் மீது தேசத் துரோக வழக்குத் தொடரப்பட்டது.

இந்த வழக்கு நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது. வழக்கின் போது ஆஜராகிய வைகோ, பிணையில்செல்லவிருப்பமில்லைஎனத்தெரிவித்தார். இந்த வழக்கை விசாரித்த சென்னை பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்ற நீதிபதி கைகள் இவரை 15 நாள்கள் விளக்க மறியல் வைக்க உத்தரவிட்டனர்.

இதனையடுத்து இவர் புழல் சிறையில் அடைக்கப்படவுள்ளார். (ச)

## துடைப்பத்துடன் விவசாயிகள் போராட்டம்!

வறட்சி நிவாரணம், கடன் தள்ளுபடி உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி டில்லியில் போராடும் விவசாயிகளுக்கு ஆதரவாக தமிழக விவசாய சங்க கூட்டியக்கம் சார்பில் தஞ்சை ரயில் நிலையத்தில் நேற்று ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. இதன் போது விவசாயிகள் கையில் துடைப்பத்தை (விளக்குமாறு) ஏந்தியபடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதைப் படத்தில் காணலாம்.



# தயாரிப்பாளர் சங்கத் தேர்தலில் விஷால் வெற்றி!

சென்னை, ஏப்.04

தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர் சங்கத் தேர்தலில் நடிகர் விஷால் வெற்றி பெற்றார். ஏற்கெனவே தென்னிந்திய நடிகர்சங்கத்தின்பொதுச் செயலாளர் பதவி வகிக்கும் விஷால், இதன் மூலம் தமிழ்த் திரைப் படத் தயாரிப்பாளர் சங்கத்துக்கும் தலைவர் ஆகி றார்.

தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர்சங்கத்துக்கு இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்தல் நடைபெறுவது வழக்கம். கடந்த ஆண்டுகளில் நிர்வாகப் பொறுப்பை வகித்த கலைப்புலி எஸ்.தாணு தலைமையிலான நிர்வாகத்தின் பதவிக் காலம் முடிவடைந்ததை அடுத்து, புதிய நிர்வாகிகளை தேர்வு செய்யும் தேர்தல் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை சென்னையில் நடைபெற்றது.

கடந்த முறை பதவி வகித்த கலைப்புலி எஸ்.தாணு தலைமையிலான நிர்வாகத்தை குறை கூறிவந்த, நடிகர் விஷால், தனது தலைமையில் புதுக் கூட்டணி அமைத்து இந்தத் தேர்தலில் போட்டியிட்டார். 'நம்ம அணி' என்ற பெயரில் உருவாக்கப்பட்ட இந்த அணியின் சார்பில் இயக்குநர் மிஷ்கின், பிரகாஷ் ராஜ் மற்றும் கௌதம் வாசுதேவ்மேனன் உள்ளிட்டோர் போட்டியிட்டனர்.

இதே போல் தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர்கள் முன்னேற்ற அணியின் சார்பில் ஆர்.இராதாகிருஷ்ணன் தலைவர்பதவிக்குப் போட்டியிட்டார். சுரேஷ் காமாட்சி, கே.ராஜன் மற்றும் விஜயமுரளி உள்ளிட்டோர் இந்த அணியின் சார்பில் சங்க நிர்வாகத்தைக் கைப்பற்றப் போட்டியிட்டனர். தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர்களின்எழுச்சிக்கூட்டணி சார்பில் கே.ஆர். தலைவர் பதவிக்குப் போட்டியிட்டார்.



இந்த அணியின் சார்பில் ஏ.எம். ரத்னம், பி.டி.செல்வகுமார், மற்றும் ஏ.எல். அழகப்பன், எஸ்.ஏ.சந்திரசேகரன், எஸ்.கதிரேசன் உள்ளிட்டோர் நிர்வாகப் பொறுப்பைக் கைப்பற்றப் போட்டியிட்டனர். தலைவர், துணைத்தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் என 27 பதவிகளுக்கு தேர்தல் நடைபெற்றது.

காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெற்ற வாக்குப்பதிவில் ஆயிரத்து 59 வாக்குகள் பதிவாகின. ஓய்வு பெற்ற நீதிபதி ராஜேஸ்வரன் மேற்பார்வையில் நடைபெற்ற இத்தேர்தலின் வாக்கு எண்ணிக்கை, மாலை 6 மணிக்கு தொடங்கியது. தொடக்கம் முதலே நடிகர் விஷால் முன்னிலையில் இருந்தார். இறுதிச் சுற்றுக்குப் பின்னர் 478 வாக்கு கள் பெற்று விஷால் வெற்றி பெற்றார். இராதாகிருஷ்ணனுக்கு 335 வாக்குகள்கிடைத்தன. கே.ஆர் 224 வாக்குகள் பெற்றார். சென்னை, அண்ணாநகர், கந்தசாமி நாயுடு கல்லூரியில் நடைபெற்ற வாக்குப்பதிவில் நடிகர்கள் ரஜினி காந்த், கமல்ஹாசன், நடிகைகள் குஷ்பூ, ராதிகா உள்ளிட்டோர் வாக்களித்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

## பிரிட்டன் நாடாளுமன்ற சதுக்கத்தில் முதன்முதலாக பெண் உருவச்சிலை

### நிறுவ பிரதமர் தெரேசா மே தீர்மானம்



பிரிட்டன் நாடாளுமன்ற சதுக்கத்தில் பெண் ஒருவரின் உருவச்சிலை அமைக்கப்படவுள்ளது என்று பிரதமர் தெரேசா மே அறிவித்துள்ளார்.

டேம் மிலிசென்ட் காரட் போர்செட் என்று அழைக்கப்படும் பெண்மணியின் உருவச் சிலையே பிரிட்டன் நாடாளுமன்ற சதுக்கத்தில் உருவாக்கப்படவுள்ள முதலாவது பெண் உருவச்சிலை என்பது குறிப்பிடத்தக்கது.

அரசியல் தேர்தல்களில் பெண்களும் வாக்களிக்க வேண்டும் என்பது தொடர்பில் முதன்மையாக நின்று போராடிய பெருமை, தொழிற்சங்கத் தலைவரும் அறிவு சார் மற்றும் அரசியல் எழுத்தாளருமான மிலிசன்ட் போர்செட்டையே சாரும்.

நாடாளுமன்ற சதுக்கத்தில் அமைக்கப்பட்டுள்ள சேர் வின்ஸ்டன் சர்ச்சிள் மற்றும் நெல்சன் மண்டேலா ஆகியோரின் உருவச்சிலைகளுக்கு அருகிலேயே அந்த உருவச்சிலை அமைக்கப்படத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சிலை விவகாரம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த தெரேசா மே, 'தற்போது இழைக்கப்படும் அநீதிகளை நோக்கும்போது, மிலிசன்ட் போர்செட்டின் செயற்பாடுகள் அவரை தொடர்ந்தும் நினைவூட்டுகின்றன' என்றார். (எ)

## அத்துமீறி மீன்பிடித்த 81 படகுகள் எரிப்பு!

### இந்தோனேஷிய கடற்படை அதிரடி

ஜகர்த்தா, ஏப்.04

இந்தோனேஷியாவின் கடல் எல்லையில். அத்து மீறி மீன்பிடித்ததாக 81 வெளிநாட்டுப் படகுகளை இந்தோனேஷியக் கடற்படையினர் தீ வைத்து எரித்தனர்.

இந்தோனேஷியாவின் கடல் எல்லையில் அத்துமீறி வந்து மீன் பிடிக்கும் வெளிநாட்டு மீனவர்கள் மீது அந்த நாடு கடும் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

இந்த நிலையில் இந்தோனேஷியா கடல் பகுதியில் மலேஷியா, வியட்நாம், பிலிப்பைன்ஸ், தாய்லாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த மீனவர்கள் எல்லை மீறிச் சென்று மீன்பிடித்துக் கொண்டிருந்தனர்.

இந்தோனேஷியா கடற் படை அவர்களை சுற்றிவளைத்து கைது செய்தது. பின்னர் 81 படகுகளையும் இழுத்துச் சென்றனர். அவற்றைத் தீ வைத்து அழித்தனர்.

# சீனாவின் ஆதரவின்றி வடகொரியாவை சமாளிக்க முடியும்!

### அமெ.ஜனாதிபதி ட்ரம்ப் அதிரடி



வொஷிங்டன், ஏப்.04

வடகொரியாவின் அணுவாயுத அச்சுறுத்தல்களுக்குச் சீனாவின் ஆதரவு இல்லாமலேயே அமெரிக்கா தீர்வுகாணும் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

வடகொரியாவும், தென்கொரியாவும் பரம்பரை எதிரி நாடுகளாக உள்ளன. இதில் வடகொரியாவுக்குச் சீனாவும், தென்கொரியாவுக்கு அமெரிக்காவும் ஆதரவு தெரிவித்து வருகின்றன.

தென்கொரியாவை தாக்குவோம் என்று வடகொரியா தொடர்ந்தும் எச்சரித்து வருகிறது. எனவே இதைத் தடுக்கும் வகையில் அமெரிக்கா தனது இராணுவத்தின் ஒரு பிரிவைத் தென்கொரியாவில் நிறுத்தி உள்ளது.

இதனால் கோபம் அடைந்த வடகொரியா அமெரிக்காவை நேரடியாகத் தாக்குவோம் என்று கூறுகிறது. அமெரிக்கா, வடகொரியாவில் இருந்து வெகு தூரத்தில் உள்ளது. அங்கிருந்து சென்று அமெரிக்காவைத் தாக்குவது கடினம் என்பதால் அமெரிக்காவரை சென்று தாக்கக் கூடிய கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையை வடகொரியா தயாரித்து உள்ளது.

மேலும், இந்த ஏவுகணைகளில் அணுகுண்டை ஏற்றிச்சென்று தாக்கும் வகையில் அணு குண்டுகளையும் தயாரித்துச் சோதனை நடத்தி உள்ளது. வட கொரியாவின் அச்சுறுத்தலை சமாளிக்க முடியாமல் அமெரிக்கா போராடி வருகிறது. இதற்காக சீனாவின் உதவியையும் அமெரிக்கா கேட்டுள்ளது.

ஆனால் நட்பு நாடான வடகொரியாவுக்கு எதிராக சீனா எந்த நடவடிக்கையையும் எடுக்கத் தயாராக இல்லை. இதனால் அமெரிக்காவுக்கு உதவ அந்தநாடு முன்வரவில்லை.

இது தொடர்பாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட்ட்ரம்ப் கருத்து வெளியிட்டுள்ளபோது தெரிவித்தவை வருமாறு:-

வடகொரியா அமெரிக்காவுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் வகையில் நடந்து கொண்டாலும் அந்த நாட்டைச் சமாளிக்க அமெரிக்காவால் முடியும். அவர்கள் அணு ஆயுதத்தைக் காட்டி அச்சுறுத்துகிறார்கள். அதையும், அமெரிக்காவால் முறியடிக்க முடியும்.

இந்த விடயத்தில் சீனாவிடம் ஆதரவு கேட்டிருக்கிறோம். ஆனால் அவர்கள் உதவ முன்வருவார்களா? என்று தெரியவில்லை. அவர்கள் உதவினால் சீனாவுக்குத் தான் நன்மை. ஒருவேளை உதவவில்லை என்றால் யாருக்குமே நன்மை இருக்காது.

சீனாவினுடைய ஆதரவு இல்லாமலேயே வடகொரியாவை எல்லா வகையிலும் சமாளிக்கும் நிலையில் தான் அமெரிக்கா இருக்கிறது. - என்றார். (எ)

# இலங்கையர் உட்பட 480 பேர் மத்திய தரைக் கடலில் மீட்பு!

### இரு படகுகளில் பயணித்தவேளை



இலங்கையர்கள் உட்பட்ட குடியேறிகள் பலர் மத்தியதரைக் கடலில் ஸ்பெயின் நாட்டின் அரச சார்பற்ற அமைப்பால் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

சட்ட விரோத குடியேறிகள் 480 பேர் உள்ளடங்கியுள்ள இரு படகுகளில் இருந்து கடந்த சனிக்கிழமை காப்பாற்றப்பட்டவர்களில் 4 வயது குழந்தை ஒன்றும் இருப்பதாக ரொய்ட்டர் செய்தி வெளியிட்டுள்ளது

வட மற்றும் மத்திய ஆபிரிக்கா, இலங்கை, யேமன், உள்ளிட்ட நாடுகளில் குடியேறிகள் அந்தப் படகுகளில் பயணித்துள்ளனர்.

இந்த நிலையில் லிபியாவின் சப்பிரதா நகரில் இருந்து 22 கடல்மைல் தூரத்தில் வைத்து அவர்கள் அதிகாரிகளால் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

அதன்பின்னர் அவர்கள் மீன்பிடி வள்ளங்களில் ஏற்றப்பட்ட ஒகஸ்டாவின் சோலியன் துறைமுகத்துக்கு நேற்றுமுன்தினம் மாலை அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

காப்பாற்றப்பட்ட குடியேற்றவாசிகள் தொடர்பில் கருத்துத் தெரிவித்த ஸ்பெயின் நிறுவனம்-

கானா, நைஜீரியா, பங்களாதேஷ் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளைச் சேர்ந்த குடியேற்றவாசிகளே அதிகளவில் இருந்தனர் என்று தெரிவித்துள்ளது. (எ)

## 2ஆவது தடவையும் பதவிக்குவர முயற்சி:

### பராகுவே ஜனாதிபதிக்கு எதிராக கையெழுத்துப் போராட்டம்!



பராகுவே நாட்டின் ஜனாதிபதிப் பதவியைத் தக்க வைத்துக் கொள்ளும் வகையில் முன்வைக்கப்பட்டுள்ள புதிய சட்டமூலத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் பல ஆர்ப்பாட்டக்காரர்கள் கையெழுத்துத் திரட்டும் நடவடிக்கையை நேற்று முன்தினம் ஆரம்பித்துள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை, பராகுவே நாட்டின் ஜனாதிபதி ஹொரேசியோ காட்டிஸ் மீண்டும் ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்குவதற்கு வழிவகுக்கும் வகையில் செனட் சபையில் இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்பட்டுப் புதிய சட்டமூலம் ஒன்று கொண்டு வருவது தொடர்பில் அக்கறை செலுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து பராகுவே நாட்டின் பலர் இது தொடர்பில் ஆர்ப்பாட்டங்களை நடத்த ஆரம்பித்தனர்.

பராகுவே நாட்டில் ஜனாதிபதி ஒருவர் அதிகபட்சம் 5 ஆண்டுகளே பதவியில் இருக்க வேண்டும் என்ற சட்டம் அங்கு நடைமுறையில் உள்ளது. இந்தச் சட்டத்தை மாற்றியமைக்கும் வகையிலேயே மேற்குறித்த புதிய சட்டமூலம் முன்வைக்கப்பட்டுள்ளது.

இதே வேளை பராகுவே நாட்டில் சுமார் 35 வருட காலமாகச் சர்வாதிகார முறைமையில் ஆட்சி நடத்தப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (எ)

## வட சீனாவில் குண்டுவெடிப்பு; 9 பேர் உயிரிழப்பு

வட சீன ஷென் சீ மாகாணத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 9 பேர் உயிரிழந்தனர். 6 பேர் காயமடைந்தனர் என்று சீன அரச செய்தி நிறுவனம் சின்குவா தெரிவித்துள்ளது.

மக்கள் செறிந்து வாழும் பிரதேசத்தில் சட்ட விரோதமான வெடிமருந்துகளைக் களஞ்சியப்படுத்திவைத்த நிலையில் இந்தக் குண்டு வெடிப்பு இடம்பெற்றிருக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குண்டுவெடிப்பு இடம் பெற்ற சூழலில் உள்ள கட்டடங்கள் முற்றாகச் சேதமடைந்துள்ளன.

இடிபாடுகளுக்கு இடையே மேலும் பலர் அகப்பட்டிருக்கலாம். எனவே அவர்களை மீட்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன என்றும் மீட்புப் பணியாளர்கள் தெரிவித்துள்ளனர். (எ)

# இருபதுக்கு 20 அணியிலிருந்து குசல் மெண்டிஸ் நீக்கம்;
# மாற்றங்களுடன் களமிறங்குகிறது இலங்கை அணி!

கொழும்பு, ஏப். 04

இலங்கை - பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான இருபதுக்கு 20 கிரிக்கெட் போட்டித்தொடர் இன்று ஆரம்பமாகிறது.

இரண்டு போட்டிகளைக் கொண்ட இந்தப் போட்டித் தொடரின் முதலாவது போட்டி இன்று கொழும்பு ஆர். பிரேமதாச மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த இருபதுக்கு 20 போட்டியின் இரண்டாவது போட்டி நாளை மறுதினம் 6 ஆம் திகதி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை - பங்களாதேஷ் அணிகள் மோதும் இந்த இருபதுக்கு 20 போட்டிகளுக்கான இலங்கை அணியிலிருந்து குசல் மெண்டிஸ் நீக்கப்பட்டுள்ளார்.

குசல் மெண்டிஸ் ஒருநாள் மற்றும் டெஸ்ட் போட்டிகளில் சிறப்பாக விளையாடிவருகின்றார். எனினும் இவரது இருபதுக்கு 20 சராசரி 9.23 என்ற குறைவான மட்டத்தில் உள்ளது.

இதனால், இவர் ஒருநாள் மற்றும் டெஸ்ட் அணியில் இடம்பிடிப்பதுடன், இருபதுக்கு 20 போட்டிக்கான அணியில் சிறிது காலங்களுக்கு விளையாடமாட்டார் என இலங்கை கிரிக்கெட் தெரிவுக்குழுத் தலைவர் சனத் ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

இதேவேளை திசர பெரேரா, குசல் பெரேரா, டில்ஷான் முனவீர, தனுஷ்க குணதிலக, சந்துன் வீரக்கொடி மற்றும் செஹான் ஜயசூரிய அணியில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

அணியில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ள குசல் பெரேரா உடற்தகுதி பரிசோதனையின் பின்னர் அணியில் இடம்பிடிப்பார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.








இருபதுக்கு 20 அணியில் இடம்பிடித்துள்ள வீரர்களின் விவரம் வருமாறு:-

உபுல் தரங்க (அணித் தலைவர்), டில்ஷான் முனவீர, தனுஷ்க குணதிலக, குசல் பெரேரா, லசித் மலிங்க, இசுரு உதான, நுவான் குலசேகர, தசுன் சானக, விகும் சஞ்சய, மிலிந்த சிறிவர்தன, அசேல குணரத்ன, சீகுகே பிரசன்ன, சாமர கபுகெதர, திசர பெரேரா, லக்ஷான் சந்தகன், செஹான் ஜயசூரிய.

இதேவேளை, இலங்கை மற்றும் பங்களாதேஷ் அணிகளுக்கு இடையில் நடைபெறவிருக்கும் இருபதுக்கு 20 தொடரில் கெண்டைக்கால் உபாதை காரணமாக, இலங்கை அணியின் தலைவர் அஞ்சலோ மத்தியூஸ் இடம்பெறமாட்டார் என இலங்கை கிரிக்கெட் சபையின் முகாமையாளர் அசங்க குருசிங்க நேற்று முன்தினம் உறுதிப்படுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நடைபெறவிருக்கும் முதலாவது இருபதுக்கு 20 போட்டியில் நிச்சயமாக மத்தியூஸ் இடம்பெறமாட்டார். இதே நிலைமை இரண்டாவது போட்டியிலும் தொடரும். அவர் இத்தொடரில் இடம்பெறாதது மிகவும் ஏமாற்றமாகவுள்ளது.

மேலும் மீண்டும் பூரண குணமடைவதற்காக அவர் கடினமாகப் போராட வேண்டியுள்ளது. அவரது பிற்தொடை தசை குணமடைந்து இருப்பினும் வலது கெண்டைக்கால் தசை இன்னும் சரியாக வில்லை.

அத்துடன், மத்தியூஸ் பூரண உடல் தகுதியினை பெறாவிட்டால், நடைபெறவுள்ள ஐ.பி.எல். போட்டிகளிலும் விளையாடமாட்டேன் என்று என்னிடம் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் நாடுகளில் இடம்பெறவுள்ள சம்பியன்ஷிப் கிண்ண தொடரில் அவரை விளையாட வைப்பதே எமது அடுத்த பெரிய இலக்கு என்றும் குருசிங்க கருத்து தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனவரி மாதம் தென்னாபிரிக்காவில் இடம்பெற்றிருந்த இருபதுக்கு 20 தொடரில் தொடைத்தசை உபாதைக்குள்ளாகியிருந்த மத்தியூஸ் பங்களாதேஷ் உடனான இருபதுக்கு 20 தொடரில் தேக ஆரோக்கியம் பெறுவார் என எதிர்பார்க்கப்பட்டிருந்தது.

இதனால், பங்களாதேஷ் உடனான ஒரு நாள் தொடர், டெஸ்ட் தொடர் மற்றும் ஆஸ்திரேலிய அணியுடனான இருபதுக்கு 20 தொடர் ஆகியவற்றில் இலங்கை அணியின் தலைவர் பங்குபற்றியிருக்கவில்லை.

இந்தப் போட்டியில் பங்கேற்க முடியாமை தொடர்பில் மத்தியூஸ் தெரிவித்தவை வருமாறு:-

இத்தொடர்களில் பங்கு பெற்ற முடியாமல் போயிருப்பது எனக்கு மிகவும் வருத்தமளிக்கிறது. பங்களாதேஷ் அணியுடனான டெஸ்ட் மற்றும் ஒரு நாள் தொடர்களில் பங்கு பெற்ற முடியாமல் இருந்திருப்பினும் இருபதுக்கு 20 தொடரினை எதிர்பார்த்திருந்தேன். ஆனால், உடற் பயிற்சி வல்லுநர்கள் நான் தேறுவதற்கு இன்னும் சில காலம் தேவை எனக்கூறியுள்ளனர். திட்டமிட்டபடி கடந்த திங்கட்கிழமை பந்து வீச்சு பயிற்சிகளில் ஈடுபட விருந்தேன். எனினும் அது சரியான முறையில் அமைந்திருக்கவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை - பங்களாதேஷ் அணிகள் மோதும் இருபதுக்கு 20 தொடர் இன்று ஆரம்பமாகவுள்ளது.

இதேவேளை, இந்தியாவில் நடைபெறவுள்ள ஐ.பி.எல். போட்டித் தொடர் நாளை ஆரம்பமாகின்றது. நாளை மறுதினம் நடைபெற உள்ள போட்டியில் மும்மை அணி சுப்பர்ஜி காண்ட் அணியை எதிர் கொள்ள உள்ளது.

இதேவேளை, இலங்கை அணியின் முக்கிய வீரர் லசித் மலிங்க மும்பை அணியில் இடம்பெற்றுள்ளார்.

மும்மை அணியின் முதல் போட்டிநாளை மறுதினம் 6 ஆம் திகதி நடைபெற உள்ளநிலையில், பங்களாதேஷ் அணிக்கு எதிரான இரண்டாவது இருபதுக்கு 20 போட்டியும் நாளை மறுதினம் நடைபெறவுள்ளது. கடந்த காலங்களில் ஐ.பி.எல் போட்டிகளில் பங்கேற்பது தொடர்பில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்த மலிங்க இம்முறை இலங்கை அணியிலா அல்லது மும்மை அணியிலா விளையாடுவார் என்பதில் பெரும் சந்தேகம் ஏற்பட்டிருந்தது.

இந்த நிலையில் தனது தீர்மானத்தை மலிங்க வெளியிட்டுள்ளார்.

ஐ.பி.எல் போட்டியினை விட இலங்கை அணியின் வெற்றி தமக்கு முக்கியமானது என்றும், ஐ.பி.எல் போட்டி தொடரில் அனைத்து போட்டிகளிலும் பங்குபற்றுவது முக்கியமானதாகினும் தான் தேசிய அணியில் இடம்பெறுவதற்கு முன்னுரிமை வழங்குகிறேன்.

எனவே, பங்களாதேஷ் அணிக்கு எதிரான இருபதுக்கு 20 போட்டித் தொடரில் பங்கேற்பேன் என மலிங்க தெரிவித்துள்ளார்.

# இலங்கை கிரிக்கெட் அணி வீரர்களை ஜனாதிபதி சந்தித்தார்!

கொழும்பு, ஏப். 04

இலங்கை கிரிக்கெட் அணி வீரர்கள் மற்றும் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் அதிகாரிகளை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இந்தச் சந்திப்பு நேற்று முன்தினம் ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்றுள்ளது.

இதன்போது, இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் தலைவர் திலங்க சுமதிபால, விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர, தெரிவுக்குழுவின் தலைவர் சனத் ஜயசூரிய, இலங்கை அணியின் முன்னாள் வீரர்களு விதாரண, இலங்கை அணியின் பிரதம பயிற்றுவிப்பாளர் கிரஹம் போர்ட் மற்றும் இலங்கை அணி வீரர்கள் கலந்துகொண்டனர்.

இதேவேளை, ஆசிய கிரிக்கெட் கவுன்சிலின் தலைவர் சஹரியர் எம். கான், பங்களாதேஷ் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவர் நஸ்முல் ஹசன், பங்களாதேஷ் கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையின் நிறைவேற்று அதிகாரி நிசாம் உதின் சௌத்திரி மற்றும் பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.



இந்தச் சந்திப்பில் கலந்து கொண்ட ஜனாதிபதி, கிரிக்கெட் விளையாட்டின் மேம்பாட்டுக்கு முழுமையான ஒத்துழைப்புகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கடந்த இரண்டு வருட காலப் பகுதியில் கிரிக்கெட் விளையாட்டுத்துறை பெற்றுக் கொண்டுள்ள வெற்றிகள் குறித்து விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர மற்றும் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவர் திலங்க சுமதிபால ஆகியோர் இந்தச் சந்திப்பின்போது கருத்துத் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், இந்தச் சந்திப்பில் கலந்துகொண்ட அனைவருக்கும் ஜனாதிபதியால் இராப்போசன விருந்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அத்துடன், 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டிகளில் வெற்றி பெற்ற வீரர்களுடன் ஜனாதிபதி புகைப்படமும் எடுத்துக் கொண்டார்.

## மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான இருபதுக்கு 20:

# தொடரை வென்றது பாகிஸ்தான்!




போர்ட், ஏப். 04

மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான கடைசி இருபதுக்கு 20 போட்டியில் பாகிஸ்தான் 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.

இதன் மூலம் பாகிஸ்தான் அணி 4 போட்டி கொண்ட 20 ஓவர் தொடரை 3-1 என்ற கணக்கில் கைப்பற்றியது.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி மேற்கிந்தியத் தீவுகளுக்கு சுற்றுப்பயணம் செய்து விளையாடி வந்தது. இரு அணிகளும் மோதிய 4 ஆவது மற்றும் கடைசி இருபதுக்கு 20 ஆட்டம் போர்ட் ஒப் ஸ்பெயினில் நேற்று முன்தினம் இடம் பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி பாகிஸ்தான் வீரர்களின் அபாரமான பந்து வீச்சில் திணறியது. அந்த அணியால் நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 124 ஓட்டங்களை எடுக்க முடிந்தது.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் வோல்டன் அதிகபட்சமாக 40 ஓட்டங்களும், பிராத்வெயிட் 37 ஓட்டங்களையும் எடுத்தனர். சதாப்கான், ஹசன்அலி தலா 2 விக்கெட்டுகளும், இமாத் வாசிம், வகாப் ரியாஸ், ரயிஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டும் எடுத்தனர்.

பின்னர் விளையாடிய பாகிஸ்தான் 19 ஓவர்களில் 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 127 ஓட்டங்களை எடுத்து 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

தொடக்க வீரர் அகமது ஷேகாத் 45 பந்துகளில் 53 ஓட்டங்களுடன் (6 பவுண்டரிகள், ஒரு சிக்சர்) பாபர் ஆசம் 38 ஓட்டங்களும் எடுத்தனர்.

இந்த வெற்றி மூலம் பாகிஸ்தான் 4 போட்டிகள் கொண்ட இருபதுக்கு 20 தொடரை 3-1 என்ற கணக்கில் கைப்பற்றியது.

அந்த அணி முதல் ஆட்டத்தில் 6 விக்கெட்டுகள் வித்தியாசத்திலும், 2 ஆவது போட்டியில் 3 ஓட்டங்கள் வித்தியாசத்திலும் வெற்றி பெற்று இருந்தது.

3 ஆவது போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் வெற்றி பெற்று இருந்தது.

இருபதுக்கு 20 போட்டி முடிந்ததைத் தொடர்ந்து இரு அணிகள் இடையே 3 ஒருநாள் போட்டி தொடர் இடம்பெறவுள்ளது. முதல் ஒருநாள் போட்டி எதிர் வரும் 7 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

# பங்களாதேஷ் அணித் தலைவருக்கு போட்டித் தடை விதித்தது ஐ.சி.சி!



பெங்களூர், ஏப். 04

பங்களாதேஷ் அணியின் தலைவர் மஸ்ரபீ முர்தஷாவுக்கு ஒருநாள் போட்டி ஒன்றில் விளையாட ஐ.சி.சி. தடை விதித்துள்ளது.

இலங்கை அணிக்கு எதிரான இறுதி ஒருநாள் போட்டியின் போது, பந்து வீசுவதற்கு வழங்கப்பட்ட நேரத்தை விட அதிக நேரம் எடுத்துக் கொண்டமைக்காகவே குறித்த போட்டித் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அவரது போட்டிக் கட்டணத்தில் 40 சதவீதம் தண்டப்பணமாக அறவிடப்பட்டுள்ளதுடன், ஏனைய வீரர்களுக்கு போட்டிக் கட்டணத்தில் 20 சதவீதம் தண்டமாக அறவிடப்பட்டுள்ளது.

இலங்கை அணிக்கு எதிரான இறுதி ஒருநாள் போட்டியில் பங்களாதேஷ் அணி 70 ஓட்டங்களால் தோல்வியடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மியாமி ஓபன் டென்னிஸ்: பெடரர் இம்முறை சம்பியன்!

மியாமி, ஏப். 04


மியாமி ஓபன் டென்னிஸ் தொடரில் ஸ்பெயின் வீரர் ரபெல் நடாலை வீழ்த்தி சுவிட்ஸர்லாந்தின் ரோஜர் பெடரர் சம்பியன் பட்டத்தை வென்றுள்ளார்.

மியாமி ஓபன் சர்வதேச டென்னிஸ் போட்டி அமெரிக்காவில் இடம்பெற்று வந்தது.

இதன் ஆண்கள் ஒற்றையர் இறுதிப்போட்டி நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதில் உலகின் முன்னணி வீரர்களான ரோஜர் பெடரர் (சுவிற்ஸர்லாந்து)- ரபெல் நடால் (ஸ்பெயின்) மோதினார்கள்.

இதில் பெடரர் 6-3, 6-4 என்ற நேர்செட் கணக்கில் நடாலை எளிதில் வீழ்த்தி மியாமி ஓபன் பட்டத்தை வென்றார்.

6 மாத காலத்துக்கு பிறகு களம் இறங்கியுள்ள பெடரரின் ஆட்டம் நம்ப முடியாத வகையில் அபாரமாக இருக்கிறது.



இந்த ஆண்டில் அவர் வென்ற 3 ஆவது பட்டம் இதுவாகும். கிராண்ட் சிலாமான ஆஸ்திரேலிய ஓபன் மற்றும் இண்டியன் வெல்ஸ் போட்டியில் பட்டம் வென்று இருந்தார். 35 வயதான பெடரருடன் கடைசியாக மோதிய 4 ஆட்டத்திலும், நடால் தோற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கொல்கத்தா அணியில் ரஸல் இடத்தை நிரப்ப அனைவரும் போராட வேண்டும் என்கிறார் கம்பீர்

புதுடில்லி, ஏப். 04

கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியில் ஆந்த்ரே ரஸல் இடத்தை நிரப்ப அனைவரும் போராடுவது அவசியமானது என்று அந்த அணியின் தலைவர் கௌதம் கம்பீர் தெரிவித்துள்ளார்.

10 ஆவது ஐ.பி.எல். தொடரில் கௌதம் கம்பீர் தலைமையிலான கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி 3 ஆவது முறையாக ஐ.பி.எல். கோப்பையை வெல்லும் ஆர்வத்துடன் இருக்கிறது. அந்த அணி



2012 மற்றும் 2014 இல் கோப்பையை வென்று இருந்தது.

மேற்கிந்தியத் தீவுகள் அணியின் சகலதுறை வீரர் ஆந்த்ரே ரஸல் விளையாட முடியாமற் போனமை கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக்கு மிகப்பெரிய இழப்பாகும். ஊக்க மருந்து தொடர்பான விதிமுறையை மீறியமைக்காக அவருக்கு ஓர் ஆண்டு தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனால் ரஸல் இந்த ஐ.பி.எல். போட்டியில் விளையாடமாட்டார்.

இந்த நிலையிலேயே கம்பீர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

மேலும், கொல்கத்தா அணியின் மிகச் சிறந்த வீரர்களில் ஒருவராக ரஸல் திகழ்ந்தார். அவரது இழப்பை ஈடுசெய்வது மிகவும் கடினமே என்றும் தெரிவித்துள்ளார்.

# பாகிஸ்தானின் அழைப்பை நிராகரித்தது பங்களாதேஷ்!

மியாமி, ஏப் 04

பாகிஸ்தானுக்கு கிரிக்கெட் விஜயம் செய்வதற்கு பங்களாதேஷ் அணி மறுப்புத் தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானில் மீண்டும் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளை நடத்தும் நோக்கில் பங்களாதேஷ் கிரிக்கெட் அணிக்கு, பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அழைப்பு விடுத்திருந்தது.

ஆனால், பாதுகாப்புக் காரணங்களைக் காட்டி பாகிஸ்தானின் அழைப்பை பங்களாதேஷ் ஏற்க மறுத்துள்ளது.

லாகூரில் பாகிஸ்தான் பிறிமியர் லீக் இறுதிப் போட்டி நடைபெற்ற போது பங்களாதேஷ் கிரிக்கெட் சபையின் பிரதிநிதி மேஜர் ஏ. கே. எம். அனிசுத் டௌலாவும் கலந்து கொண்டிருந்தார். அப்போதுதான் இந்த அழைப்பு விடுக்கப்பட்டது.

இதற்குப் பதிலளித்த பங்களாதேஷ் கிரிக்கெட் சபையின் ஊடக மற்றும் தொடர்பாடல் பிரிவுத் தலைவர் ஜலால் யூனிஸ், ''பாகிஸ்தான் தொடர்பான அறிக்கைகள் திருப்திகரமாக இல்லை என்பதால் நாங்கள் அங்கு விஜயம் செய்வதற்கு பின்வாங்குகின்றோம்''.- என்று கூறியுள்ளார்.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் பங்களாதேஷுக்கு பாகிஸ்தான் அணி விஜயம் செய்தபோது பாகிஸ்தான் கிரிக்கெட் சபை 325,000 டொலர்களை பொறுப்பேற்றுக் கொண்டது.

அந்த கிரிக்கெட் விஜயம் தமது சொந்த நாட்டில் நடைபெறுவதற்கு ஒப்பானது என்று தெரிவித்தே அந்தத் தொகையை பாகிஸ்தான் எடுத்திருந்தது.

ஆனால், இந்த வருடம் தேவைப்பட்டால் நடுநிலையான மைதானத்தில் விளையாடத் தாங்கள் தயார் எனக் குறிப்பிட்ட பங்களாதேஷ், வருவாயைப் பகிர்ந்து கொள்வதற்கு இணங்கவில்லை.

## போதைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்–

"ஜனாதிபதியால் முன்னெடுக்கப்படும் போதை ஒழிப்பு வேலைத்திட்டத்தின் கீழ் முப்படையினரும் இணைந்து பல்வேறு நடவடிக்கைளை மேற்கொண்டு வருகின்றனர்.

"இலங்கையில் அதிகளவு போதைப்பொருள் வடக்குக் கடல் மார்க்கமாகக் கடத்தப்படுவதாகப் பல்வேறு தரப்பினராலும் கூறப்படுகிறது.

"இவற்றைக் கட்டுப்படுத்துவதில் கடற்படை வீரர்களும் புலனாய்வுத் துறையினரும் கடற்கரையோரங்களில் ரோந்துப் பணியில்ஈடுபட்டுவருகின்றனர்.

"கடந்த வருடம் ஆயிரம் கிலோவுக்கு அதிகமான கஞ்சாவைக் கைப்பற்றியுள்ளோம். இவற்றைத் தவிர போதை மாத்திரைகள் மற்றும் ஹெரோயின் போதைப்பொருள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளமையுடன், சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டு, பொலிஸார் ஊடாகச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

"ஹெரோயின் போதைப்பொருள் கடத்தப்படுவதாகக் கடற்படையினருக்குக் கிடைத்த இரக்சியத்தகவலின் அடிப்படையில், பருத்தித்துறைக்கு வடமேற்கே, நாட்டுப்படகு மூலம் யாழ்ப்பாணத்துக்கு ஹெரோயின் போதைப்பொருள் கடத்த முற்பட்ட ஆறு பேர் கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து 13.5 கிலோ போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

தற்போது பருவப்பெயர்ச்சிக் காலநிலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து, வடகடலில் அதிகளவு மீன்பிடி மேற்கொள்ளப்படும் நிலை உருவாகியுள்ளது. போதைப்பொருள் கடத்தல்காரர்கள் மீனவர்களுடன் மீனவர்களாக இலங்கைக் கடற்பரப்புக்குள் உட்பிரவேசிப்பதைத் தடுப்பதற்குப் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளோம்.

குறிப்பாக பகல், இரவு மற்றும் அதிகாலை நேரங்களில் கடற்படையினரின் ரோந்து இரண்டு மடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளது. சந்தேகத்துக்கிடமான முறையில் வரும் நாட்டுப்படகுகள் மற்றும் விசைப்படகுகளைச் சோதனை மேற்கொள்ள கடற்படை வீரர்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது."

– என்றார் கடற்படைத் தளபதி. (உ)

## ஜே.ஆரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸின் விசேட அதிரடிப் படையை உருவாக்கியவருமான ரவி ஜெயவர்த்தன நேற்றுப் பிற்பகல் கொழும்பில் காலமானார்.

இவர் இலங்கையின் முதலாவது நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியான ஜே. ஆர்.ஜெயவர்த்தனவின் ஒரே மகனாவார். இறக்கும் போது அவருக்கு வயது 80 ஆகும்.

எயர் சிலோன் நிறுவனத்தில் விமானியாகப் பணியாற்றிய ரவி ஜெயவர்த்தன, பின்னர் இலங்கை ஜனாதிபதியின் பாதுகாப்பு ஆலோசகராகப் பணியாற்றினார்.

இதன்போதே அவர் 1984 ஆம் ஆண்டு இலங்கைப் பொலிஸ் பிரிவின் சிறப்பு அதிரடிப் படையை உருவாக்கினார்.

ஈழவிடுதலைப் போராட்டத்தை ஆரம்ப காலத்திலேயே நசுக்குவதில் மூளையாகச் செயற்பட்டவர்களில் ரவி ஜெயவர்த்தனவும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## சுகாதார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ருந்த அமைச்சர் ராஜித சேனாரத்ன வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் வடக்கு சுகாதார நிலைமைகள் குறித்துப் பல்வேறுதரப்பினரையும் அழைத்து விசேட சந்திப்பொன்றை நடத்தினார்.

அச்சமயம் ஆளுநர் அலுவலகத்தின் முன்பாக ஒன்றுகூடிய வடக்குமாகாண சுகாதாரத் தொண்டர்கள் தமக்கான நியமனத்தை வலியுறுத்தி போராட்டத்தில் ஈடுபட்டனர். பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளையும் தாங்கியவாறு அமைதியான முறையில் அவர்கள் தமது போராட்டத்தை முன்னெடுத்தனர்.

"நீண்டகாலமாக சம்பளம் இன்றி பல்வேறு கஷ்ட துன்பங்களுக்கு மத்தியில் தொடர்ச்சியாகப் பாதிப்புக்களை எதிர்நோக்கிவருகின்றோம். எங்களுக்கான நியமனங்களை வழங்குமாறு பல தடவைகள் பல தரப்பினரிடமும் கோரிக்கை விடுத்திருக்கின்றோம். ஆனாலும் அவை இதுவரையில் நிறைவேற்றப்படவில்லை. நாம் தொடர்ந்தும் ஏமாற்றப்பட்டே வருகின்றோம்.

"இங்கு வந்திருக்கின்ற சுகாதர அமைச்சர் எங்களுக்கு நல்லதோர் தீர்வைப் பெற்றுத் தர வேண்டுமென்று எதிர்பார்த்தே வந்திருந்தோம். ஆனாலும் அவரும் எங்களை ஏமாற்றிவிட்டுச் சென்றுள்ளார். ஆகவே எமது நியாயமான கோரிக்கைகளுக்குச் சாதகமான தீர்வு கிடைக்கும் வரையில் தொடர்ச்சியான போராட்டங்களை மேற்கொள்வதற்குத் தீர்மானித்திருக்கின்றோம்" – என்று சுகாதாரத் தொண்டர்கள் தெரிவித்தனர். (உ)

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விஜயம் மேற்கொண்டிருந்த ஐரோப்பிய ஒன்றிய அரசியல் பொருளாதார தலைமை அதிகாரி போல் கோட்பிரே யாழ். நகரிலுள்ள முதலமைச்சரின் அலுவலகத்தில் முதலமைச்சரைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது ஐரோப்பிய ஒன்றியத்தினால் இங்கு மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்தித் திட்டங்கள், சமகால அரசியல் நிலைமைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டன. அச்சமயமே மேற்படி இரண்டு தரப்பினரும் இணைந்து செயற்படுவதெனத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இச் சந்திப்பு குறித்து முதலமைச்சர் ஊடகங்களுக்குக் கருத்துவெளியிடுகையில்–

வடக்கு மாகாண மக்களுடன் இணைந்து தாங்களுடைய நடவடிக்கைகளை எவ்வாறு முன்னெடுத்துச் செல்லலாம் என்பதிலேயே ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகள் அதிக கவனம் செலுத்தியிருந்தனர். ஏனெனில் கடந்த காலங்களில் வடக்கு மாகாண சபையுடன் சேராமலும் இங்குள்ள நிலைமைகளை அறியாமலும் ஐரோப்பிய ஒன்றியம் செயற்பட்டு வந்தமையை நான் ஏற்கனவே அவர்களுக்குத் தெரியப்படுத்தியிருந்தேன்.

அதனடிப்படையில் அவற்றைக் கருத்திலெடுத்து தற்போது வடக்கு மாகாண சபையுடன் இணைந்து, புரிந்துணர்வின் அடிப்படையில் தாங்கள் செயற்படுவார்கள் என அவர்கள் கூறியுள்ளனர் – என்றார் முதலமைச்சர். (உ)

## வீரவன்ஸ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காட்டியே இந்தப் பிணை மனுத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. எனினும், மகளின் உடல் நலக் குறைவு தொடர்பில் போதிய ஆதாரங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை எனத் தெரிவித்து, பிணை விண்ணப்பத்தைக் கொழும்பு கோட்டை நீதிமன்றம் நேற்று நிராகரித்தது.

முன்னரும் கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றம் அவரது பிணை மனுவை நிராகரித்தமையை அடுத்து அவர் சார்பில் மேல் நீதிமன்றத்தில் பிணை மீளாய்வு மனு தாக்கல் செய்யப்பட்டது. அந்த விண்ணப்பமும் கடந்த 21 ஆம் திகதி நிராகரிக்கப்பட்ட நிலையில் தாம் முறையற்ற அரசியல் அழுத்தங்களினால் விளக்கமறியலில் தொடர்ந்து வைக்கப்பட்டிருக்கின்றார் என்று தெரிவித்து அதற்கு எதிர்ப்பும், ஆட்சேபனையும் காட்டும் விதத்தில் கடந்த 24 ஆம் திகதி அவர் சிறையில் சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தார். உடல் நிலை மோசமடைந்த நிலையில் முதலில் சிறை ஆஸ்பத்திரிக்கும் பின்னர் கொழும்பு தேசிய ஆஸ்பத்திரிக்கும் மாற்றப்பட்ட அவர் 9 நாள்களின் பின்னர் அந்த உண்ணாவிரதத்தைக் கைவிட்டார் என்பது தெரிந்ததே.

தற்போது அவர் சார்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பிணை கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்படாவிட்டாலும் அந்த மனுவை எதிர்வரும் 7 ஆம் திகதி வெள்ளியன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்வார் என கோட்டை நீதிவான் நேற்று அறிவித்தார்.

அன்றைய தினத்தில் விமல் வீரவன்ஸவின் உடல்நிலை தேறியிருப்பின் அவரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறு வெலிக்கடை சிறைச்சாலை அதிகாரிக்கு அவர் உத்தரவிட்டார்.

இதேவேளை, சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸ் நிதி மோசடி விசாரணை பிரிவு, விமல் வீரவன்ஸ தொடர்பிலான விசாரணையை தாங்கள் தற்போது நிறைவு செய்துள்ளனர் நேற்று நீதிமன்றத்தில் தெரிவித்தது.

எதிர்வரும் புத்தாண்டுக்கு முன்னர் விசாரணை தொடர்பான மூல ஆவணங்களை நீதிபதியிடம் சமர்ப்பித்து அறிவுறுத்தல்களைப் பெற்றுக் கொள்ள எதிர்பார்த்துள்ளனர் எனப் பொலிஸ் நிதி மோசடி விசாரணை பிரிவினர் தெரிவித்தனர்.

அதனால் புத்தாண்டுக்கு முன்னர் விமல் வீரவன்ஸ பிணையில் வரக் கூடிய சூழல் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## ஜனாதிபதிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாளர்களிடம் தெரிவித்தார்.

ஐ.தே.கட்சியுடன் சேர்ந்து அவசர அவசரமாக 19 ஆவது திருத்தத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றிய சிறிலங்கா சுதந்திரக் கட்சியினருக்கு, அந்தத் திருத்தத்தின் மூலம் தமது ஜனாதிபதியின் அதிகாரம் வெட்டப்பட்டிருக்கின்றமையும், அதற்குத் தாங்கள் துணை போயிருக்கின்றமையும் கூட இன்னமும் விளங்கவில்லை என்றார் அவர்.

அமைச்சரவையைத் தனித்து மாற்றியமைக்க முடியாதளவுக்கு நிலைமை காரணமாக ஜனாதிபதியும் அவரது சுதந்திரக்கட்சியின் சிரேஷ்ட அமைச்சர்களும் இப்போது ஏதும் செய்ய இயலாதவர்களாகச் சிக்குண்டுள்ளனர் என்றார் அவர். (உ)

## பதவியேற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கண்ணன் விவகாரம் தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், மூத்த சட்டத்தரணியுமான எம். ஏ. சுமந்திரன் இந்தவிடயத்தைத் தெரிவித்தார்.

அரச சட்டத்துறை சேவையிலோ, நீதித்துறை சேவையிலோ இல்லாமல் தனிப்பட்ட சட்டத்தரணியாக மட்டக்களப்பு நீதிமன்றத்தில் பணியாற்றி வந்த இராமநாதன் கண்ணன் மலையகத்தைச் சேர்ந்தவர். அவரை நேரடியாக மேல் நீதிமன்ற நீதிபதியாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நியமித்துள்ளார். அதற்கு எதிராக இலங்கை சட்டத்தரணிகள் சங்கமும், நீதிபதிகள் சங்கமும் போர்க்கொடி உயர்த்தியிருக்கின்றன. தனிப்பட்ட சட்டத்தரணியாகப் பணியாற்றும் ஒருவரை நேரடியாக நீதிபதியாக நியமிக்கும் முறைமையை ஆட்சேபித்துள்ள இந்த இரு அமைப்புகளும், அதனால் அவருக்கு வழங்கிய நீதிபதி பதவியை இரத்துச் செய்யுமாறு கோரித் தீர்மானங்களை நிறைவேற்றி ஜனாதிபதியையும், அரசையும் வலியுறுத்தி வருகின்றன.

பதவி நியமனம் வழங்கப்பட்டு, யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதியாகக் கடமையாற்றிவரும் இராமநாதன் கண்ணனின் நியமனத்தை இரத்துச் செய்யக் கோருவது நீதித்துறையில் முறையற்ற தலையீடு எனச் சுட்டிக் காட்டியிருக்கின்றார் சுமந்திரன்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

தமிழ்ப் பிரதேசங்களில் தமிழ் தெரிந்த நீதிவான்கள், நீதிபதிகள் தேவைக்குரிய விதத்தில் நியமிக்கப்பட வேண்டும். அதில் பற்றாக்குறை நிலவுகின்றது என்பதை அரசுக்குப் பொதுவாகச் சுட்டிக் காட்டி வலியுறுத்தி வந்தோம்.

ஆனால், நீதிபதி கண்ணன் உட்பட எவரையும் நீதிபதி பதவிக்கு நியமிக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எந்தக் கட்டத்தில் கேட்டதுமில்லை; வலியுறுத்தியதும் இல்லை; தனிப்பட்ட சிபார்சு எவையும் செய்யவுமில்லை.

ஆனால், நீதிபதி கண்ணனின் நியமனத்தில் அரசமைப்புச் சட்டம் முழு அளவில் ஒழுங்கு முறையாகப் பின்பற்றப்பட்டிருக்கின்றது.

நீதிபதியாக ஒருவரை ஜனாதிபதி நியமிப்பதற்கு இரண்டு தேவைப்பாடுகளை அரசமைப்பு வலியுறுத்துகின்றது.

ஒன்று – சுயாதீனமாகச் செயற்படும் நீதிச்சேவை ஆணைக்குழுவின் சிபாரிசு.

அடுத்து – சட்டமா அதிபரின் சிபாரிசு.

அந்த இரண்டும் நிறைவு செய்யப்பட்டே நீதிபதியாகக் கண்ணனை ஜனாதிபதி நியமித்துள்ளார்.

ஆகவே, அந்த நியமனத்தில் தலையிடுவது சுயாதீன நீதித்துறையில் அத்துமீறித் தலையிடுவதாகும்.

அதுவும் சுயாதீனமாக இயங்கும் நீதிச் சேவை ஆணைக்குழுவின் செயற்பாட்டில் தலையிடுவதாகவும் இது அமைகின்றது.

அரச சட்ட சேவையில் இல்லாத சட்டத்தரணிகள் நீதித்துறையில் நீதிபதி, நீதியரசர் பதவிகளுக்கு நேரடியாக நியமிக்கப்படும் வழக்காறு- வழமை – நமது நாட்டின் சட்ட சரித்திரத்தில் பல தடவைகள் நிகழ்ந்துள்ளது.

நீதியரசர் கிறிஸ்தோபர் வீரமந்திரி தனது 40 ஆவது வயதில் சட்டத்தரணியாக இருந்து நேரடியாக உயர் நீதிமன்றத்துக்கே நீதியரசராக நியமிக்கப்பட்டவர். பின்னர் பத்தாண்டுகளுக்கு மேல் சர்வதேச நீதிமன்றத்தில் நீதியரசராக மதிக்கப்படும் அளவுக்கு உயர்ந்தவர்.

சிரேஷ்ட சட்டத்தரணியாக இருந்த நெவில் சமரக்கோன் நீண்ட காலம் தனிப்பட்ட சட்டத்தரணியாகப் பணியாற்றிக் கொண்டிருந்த சமயத்தில் 1977 இல் நேரடியாக நாட்டின் பிரதம நீதியரசராகவே நியமிக்கப்பட்டு ஏழு ஆண்டுகள் அப்பதவியில் மதிப்பார்ந்த நிலையில் பணியாற்றினார்.

நீதிபதி ஒருவர் நியமிக்கப்பட்டுப் பணியாற்றத் தொடங்கினால் அவரது பதவி, பதவி நியமனத்தை ரத்துச் செய்யும் ஏற்பாடு எதுவும் அரசமைப்பில் அல்லது சட்டங்களில் இல்லை.

வேண்டுமானால் நீதிபதி ஒருவரின் செயற்பாடு, நடத்தை தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொண்டு அவரைப் பதவியிலிருந்து விலத்தலாம். நீதிபதி கண்ணனைப் பதவி விலத்துவதற்கு அத்தகைய தவறு எதையும் அவர் இழைக்கவில்லை.

ஆகவே, ஒரு நீதிபதியைப் பதவியிலிருந்து வெளியேற்றுமாறு நீதிபதிகளின் சங்கம் போன்ற ஒரு தொழிற் சங்கக் கட்டமைப்போ, சட்டத்தரணிகள் சம்மேளனமோ கோருகின்றமை நீதித்துறையில் ஏதேச்சதிகாரமாகத் தலையிடும் போக்காகும்.

இதை நாம் கண்டிக்கின்றோம்.

இலங்கையில் நீதி, நிர்வாகம் மற்றும் பரிபாலனம் தொடர்பில் மேலும் சந்தேகங்களையும், கேள்விகளையும் இத்தகைய தலையீடு ஏற்படுத்தும். – என்றார் எம்.ஏ.சுமந்திரன். (உ)

## போர்க்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குற்றங்கள் இடம்பெற்றன என்று நாங்கள் ஏற்றுக் கொள்ளவுமில்லை. எனவே, போர்க் குற்றங்கள் தொடர்பான விசாரணைகளும் தேவையற்றவை.

"போர்க்குற்ற விசாரணைகள் என்கின்றபோது, புலிகளின் குற்றங்களை விசாரிப்பது யார்? அவர்களில் யாரை விசாரிப்பது? அவர்களின் தலைவர்கள் இருக்கின்றனரா?

"புலிகளின் ஊடக இணைப்பாளராக முன்னர் இருந்த தயா மாஸ்ரர் அருகில் இருக்கின்றார்.

"ஆகவே, நாம் யாரை – யார் விசாரிப்பது என்பதற்கப்பால் இந்த நாட்டில் மீளவும் கடந்த கால நிலைமைகள் ஏற்படாத வகையில் அனைத்து மக்களும் சம உரிமையுடன் வாழக்கூடிய வகையில் அரசியல் தீர்வொன்றை முன்வைக்கவும் அதிகாரங்களைப் பகிரவும் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம்.

"இந்த நாட்டிலுள்ள சிங்கள மக்களுக்கு இருக்கின்ற அனைத்து உரிமைகளும் தமிழ், முஸ்லிம் உள்ளிட்ட அனைத்து இன மக்களுக்கும் கிடைக்கும் வகையிலான தீர்வொன்றை உருவாக்க இருக்கிறோம்.

"மாகாண சபைகளுக்கும் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்து வருகிறோம்." – என்று அமைச்சர் ராஜித சேனாரத்ன மேலும் தெரிவித்தார். (உ)

# தொழில் வாய்ப்புக்குப் பெண்களை வெளிநாடு அனுப்புவதை நிறுத்துக!

கொழும்பு, ஏப்.04

வெளிநாடுகளுக்குப் பெண்களை அனுப்பித் தொழிலில் ஈடுபடுத்துவதைத் தவிர்த்து அவர்களின் வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தி சுதந்திரத்துக்கான பெண்கள் அமைப்பு மஸ்கெலியா நகர பஸ் நிலையத்துக்கு அருகில் ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டது.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் சுமார் 50 இற்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்டனர்.

'வெளிநாட்டில் அடிமைத் தொழில் செய்வதற்குப் பதிலாக பாதுகாப்பான தொழிலை உறுதி செய்', 'மலிவான பணியாளர்களாக பெண்கள் வெளிநாட்டுக்கு விற்கப்படுவதை நிறுத்து', 'வெளிநாட்டில் அனைத்து தங்களுக்கு உள்ளானவர்களுக்கு உடனடியாக இழப்பீடு வழங்கு' உள்ளிட்ட கோஷங்களை எழுப்பியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பொருளாதாரக் கொள்கைக்காக மலையகப் பெண்களை



மாத்திரமன்றி நாட்டில் அனைத்துப் பிரதேச பெண்களையும் வெளிநாட்டுத் தொழில் வாய்ப்பில் ஈடுபடுத்த அனுப்புவதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்று கோரியே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அண்மையில் மஸ்கெலியா பிரதேசத்தில் இருந்து, மத்தியகிழக்கு நாடு ஒன்றுக்குப் பணிப்பெண்ணாகச் சென்று 4 மாதங்களின் பின் சடலமாகக் கொண்டு வரப்பட்ட கற்பகவள்ளியின் குடும்பத்தாரையும், மத்தியகிழக்கு நாடுகளில் பணிபுரிந்து பாதிக்கப்பட்ட மஸ்கெலியாபிரதேசத்தைச் சேர்ந்த பெண்களுடைய குடும்பத்தாரையும் இணைத்துக்கொண்டு இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. (ஐ)

**சுதந்திரத்துக்கான பெண்கள் அமைப்பு மஸ்கெலியாவில் ஆர்ப்பாட்டம்**

## காணி மீட்பு கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஏப்.04

காணிமீட்புத்தொடர்பில் தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் கருத்தரங்கு ஒன்று நடத்தப்பட்டு வருகிறது. இந்தக் கருத்தரங்கு சுன்னாகம் திசா விடுதியில் நேற்று இரண்டாவது நாளாகவும் இடம்பெற்றது.

சுன்னாகம் கண்ணகி கிராம நலன்புரி முகாமில் 27 வருடங்களாக மக்கள் படும் அவலம் தொடர்பான உண்மை நிலையை மக்களுக்குத் தெளிவுபடுத்தும் முகமாக இந்தக் கருத்தரங்கு முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

நலன்புரி முகாமில் வாழும் மக்களது மனங்களில் மாற்றத்தை ஏற்படுத்தவும், மக்களுக்கான காணிகளை அவர்களிடம் ஒப்படைக்கவும் அரசுக்கு அழுத்தத்தைக்கொடுக்கும் நோக்கிலும் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## நம்பிக்கையின் வெளிப்பாடே வெற்றி



**தவக்கால சிந்தனை**

மனித வாழ்க்கையிலேயே நம்பிக்கை ஒரு முக்கியமான இடத்தை வகிக்கின்றது. இதனாலேதான் சொல்லுவார்கள் யானையின் பலம் தும்பிக்கையிலே. மனிதருடைய பலம் நம்பிக்கையிலே. மற்றவரை நம்பாமல் நாம் வாழமுடியாது. ஒருவர் ஒன்றைச் செய்து முடிப்பார் என்று நம்பித்தான் உலகின் பல வேலைகள் ஒவ்வொருவரிடமும் ஒப்படைக்கப்படுகின்றன. ஒருவரே அனைத்தையும் செய்துவிட முடியாது அப்படிச் செய்தால் அவர் கடவுளாகத்தான் இருக்க முடியும். அதனாலே, கூட்டு நம்பிக்கைதான் வாழ்வாக இருக்கின்றது.

கடவுள் இருக்கிறார், கடவுள் இல்லை என்றெல்லாம் கொள்கைகள் இருக்கின்றன. இருக்கின்ற ஒன்றைத்தான் இருக்கின்றது என்றும் அது இல்லாதபோது அதைத் தேடுகின்றோம். இல்லாத ஒன்றை நாம் தேட வேண்டியதில்லை. எனவேதான் ஆதியில் இறைவன் "இருக்கிறவர் நாமே" என்று மக்களுக்குத் தம்மை வெளிப்படுத்தினார். இருக்கின்றவர் என்பதன் பொருள் முக்காலமும் இருப்பவர் என்பதாகும். இயேசு கடவுளின் திருமகன், கடவுளிடமிருந்து வந்தவர், தன்னைக் கண்டவன் கடவுளைக் கண்டவன் என்று பலவேளைகளில் மக்களுக்குப் போதித்ததில் '' இருக்கிறவர் நானே'' என்பதை நீங்கள் நம்பாவிடில் நீங்கள் பாவிகளாய்ச் சாவீர்கள்'' என்றார்.

(யோவான் 8:24)

எம்முடைய நாளாந்த வாழ்விலும் நாம் ஒருவரை ஒருவர் நம்பியே வாழ்கின்றோம். கணவனும் மனைவியும் ஒருவரை ஒருவர் நம்பாவிடில் குடும்ப வாழ்வு நரகமாகிவிடும். அவ்வாறே பெற்றோர் பிள்ளைகளையும், பிள்ளைகள் பெற்றோரையும், ஆசிரியரை மாணவரும், மாணவரை ஆசிரியரும், முதலாளி தொழிலாளி, வர்த்தகர், நுகர்வோர் என்று, பல தரப்பட்ட இரு தரப்பினரும் ஒருவரை ஒருவர் நம்பியே வாழ்வு நடந்து கொண்டிருக்கின்றது.

இதே வேளையிலே நம்பியோருக்குத் துரோகம் செய்யும், ஏமாற்றும், மறுக்கும் எதிர் செயற்பாடுகளும் கூடவே நடக்கச் செய்கின்றன. நம்பிக்கை பொய்க்கும் போதே பகைமை, கொடுமை, போர், வன்செயல்கள் அழிவுகள் ஏற்படுவதையும் காண்கின்றோம்.

நாம் இறைவனிலே வைத்த நம்பிக்கையின் வெளிப்பாடாகவே தவக்காலத்தை நாம் பயன்படுத்த வேண்டும் எம்முடைய செபதப, தானதருமங்கள் எல்லாம் தீமைகள், பாவங்கள் அகன்று ஒற்றுமையும் நன்மையும் நிறைந்த வாழ்வாகவும் மாறாக ஒருவரை ஒருவர் அடிமைப்படுத்தி மற்றவரை சுரண்டி அபகரித்து, வன்முறைகள் செய்து, அழிவுகளை ஏற்படுத்தி, நம்பிக்கைத்துரோகம் செய்வதன் மூலமாக யாரும் நிறைவான, நிலையான வாழ்வைப் பெற்றுவிட முடியாது.

நீதியோடும் உண்மையோடும் நம்பிக்கையோடும், வாழும் வாழ்வே மகிழ்ச்சியையும், ஒற்றுமையும், பலத்தையும் கொண்டிருக்கும். எதிரான செயற்பாடுகள் நிறைந்த வாழ்வு பாவத்தையும், பயத்தையும், அழிவையுமே ஏற்படுத்தவல்லதாகும். தீமைகள் அநீதிகள் அகன்று நம்பிக்கையின் ஒளிக்கீற்றிலே உலகம் வாழ்வுபெற கருத்தோடு இறைவனை வேண்டிக் கொள்வோம்.

அன்ரனி றீற்றா - (ஓய்வு நிலை ஆசிரிய ஆலோசகர்)

## தங்க உருண்டைகள் என்று கூறி ஈயத்தை விற்க முயன்றவர் கைது!

கொழும்பு, ஏப்.04

புதையல் தோண்டியபோது பெறப்பட்டன என்று தெரிவித்து போலித் தங்க உருண்டைகளை விற்பனை செய்த நபரொருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தம்புள்ளை நகரில் நேற்று முன்தினம் மாலை இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் தெரிவித்துள்ளவை வருமாறு:-

கண்டிப் பிரதேசத்தைச் சேர்ந்த நபரொருவர் பணத்தேவைக்காக தனது வீட்டை விற்பனை செய்வதற்காக பத்திரிகையில் விளம்பரம் செய்துள்ளார்.

இதனையடுத்து அவரை தொலைபேசியில் தொடர்புகொண்ட நபரொருவர், தன்னிடம் புதையல் தோண்டியபோது பெறப்பட்ட தங்க உருண்டைகள் இருக்கின்றன என்றும், அவற்றை வாங்கி விற்றால் நல்ல லாபம் கிடைக்கும் என்றும், குறித்த நபருக்கு வீட்டை விற்கும் தேவை ஏற்படாது என்றும் தெரிவித்துள்ளார்.

சுமார் பத்து லட்சம் பெறுமதியான தங்க உருண்டைகள் தன்னிடம் இருக்கின்றன என்றும் அதனை குறைந்த விலைக்கு விற்பனை செய்ய தான் தயாராக இருக்கிறார் என்றும் அவர் தெரிவித் துள்ளார்.

இதனையடுத்து பொலிஸாருக்குத் தகவல் தெரிவித்துவிட்டு, வீட்டை விற்பனை செய்வதாக விளம்பரம் செய்த நபர் தம்புள்ளைக்கு சென்றுள்ளார். தங்கம் விற்பனை செய்ய முயன்றவரும் அங்கு வந்து இவரைச் சந்திக்க முயன்ற போது பொலிஸார் அவரைக் கைது செய்துள்ளனர்.

பொலிஸாரின் விசாரணையில் அந்த நபர் ஈய உருண்டைகளை வர்ணம் பூசி பொது மக்களை ஏமாற்றி விற்பனை செய்வதில் நீண்டகாலமாக ஈடுபட்டுவந்திருப்பது தெரியவந்துள்ளது. அநுராதபுரம் பிரதேசத்தைச் சேர்ந்த இந்த நபர் தொடர்பில் தம்புள்ளைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ஐ)

## இருதயத்தைத் தானமாக கொடுத்த ஈழத்தமிழன்

### சிறுநீரகங்கள், கல்லீரலும் கூட கொடை!!

*தமிழகத்தில் விபத்தில் மூளைச்சாவு அடைந்த இலங்கைத் தமிழ் அகதியின் இருதயம், சிறு நீரகம் உள்ளிட்ட உடல் உறுப்புகள் தானமாக அளிக்கப்பட்டுள்ளன.*

*ஹெலிகொப்டர் மூலம் அவரது இதயத்தை சென்னை மருத்துவ மனைக்கு மருத்துவர்கள் எடுத்துச் சென்றுள்ளனர்.*

*திருவண்ணாமலை மாவட்டம் கஸ்தம்பாடியில் உள்ள இலங்கை அகதி முகாமைச் சேர்ந்தவர் கிருபாகரன் (வயது -22). டிப்ளோமா படித்துள்ள அவர், புதுச்சேரியில் உள்ள கட்டுமான நிறுவனத்தில் வேலை செய்து வந்தார். கடந்த 29 ஆம் திகதி ஊருக்கு வந்த கிருபாகரன், தனது தம்பி விக்னேஸ்வரனுடன் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது, எதிரே வந்த வாகனத்துடன் மோதியதில் இருவரும் படுகாயமடைந்தனர்.*

*வேலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். தலையில் பலத்த காயம் ஏற்பட்டதால் கிருபாகரனை மட்டும் வேலூர் சி.எம்.சி. மருத்துவமனையில் அனுமதித்தனர்.*

*இந்த நிலையில், கிருபாகரன் மூளைச் சாவு அடைந்துள்ளார் என்று மருத்துவர்கள் தெரிவித்தனர். இதையடுத்து, அவரது உடல் உறுப்புகளை தானம் செய்ய குடும்பத்தினர் சம்மதம் தெரிவித்தனர். கிருபாகரனின் இருதயத்தை சென்னை மலர் மருத்துவ மனையில் சிகிச்சைபெற்று வரும் சத்தீஸ்கர் மாநில இளைஞருக்கு பொருத்த முடிவானது.*

*அதன்படி, கிருபாகரனின் இருதயம் அகற்றப்பட்டு, பொலிஸ் பாதுகாப்புடன் அம்புலன்ஸ் மூலம் வி.ஐ.டி. பல்கலைக்கழகத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டது. அங்கு தயாராக இருந்த ஹெலிகொப்டர் மூலம் சென்னைக்கு இருதயத்தை எடுத்துச் சென்றனர்.*

*கிருபாகரனின் கல்லீரல் மற்றும் ஒரு சிறுநீரகம் சி.எம்.சி. மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் 2 நோயாளிகளுக்குப் பொருத்தப்பட்டன. ஒரு சிறுநீரகம் சென்னை மியாட் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)*

## திட்டமிடலே இல்லாத 'நல்லாட்சி' என்னும் அரசு

### பிரசன்ன ரணதுங்க எம்.பி. விசனம்

திட்டமிடல் இல்லாத ஓர் அரசு இன்று நாட்டை ஆள்கின்றது என்று முன்னாள் மேல் மாகாண சபை முதலமைச்சரும், தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

பியகமயில் இடம்பெற்ற பொது ஜன ஐக்கிய முன்னணியின் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இதனைக் கூறினார்.

ஒரு குடும்பத்தில் கணவன் குடிகாரனாகவும், மனைவி ஒழுங்கில்லாதவளாகவும் இருந்தால் குடும்பத்தைக் கொண்டு நடத்தப் பணம் இருக்காது. இதனால், அவர்கள் அயல் வீடுகளில் கடன்படுவார்கள். அதனையும் குடித்துச் செலவு செய்வார்கள். பின்னர் பொருள்களை விற்பனை செய்வார்கள். இதுதான் அந்தத் திட்டமிடல் இல்லாத குடும்பத்தின் நிலை.

இந்த நிலையில்தான், இந்த அரசும் உள்ளது. தற்பொழுது அரச சொத்துக்களை விற்பனை செய்ய ஆரம்பித்துள்ளது. எனது சகோதரர் அர்ஜுனவும் அங்கே காணப்படுகின்றார். நான் அவருக்கு சொல்கின்றேன். அரச சொத்துக்களை விற்பனை செய்யும் அரசை விட்டுவிட்டு எம்முடன் வந்து சேர்ந்து கொள்ள வேண்டும்.- என்று மேலும் கூறினார். (ஐ)

### காணி ஆக்கிரமிப்பிற்கு எதிரான

# நல்லூர்ப் பிரகடனம்

### நல்லை ஆலய முன்றிலில் இன்று வெளியீடு

(எஸ்.நிதர்ஷன்)


யாழ்ப்பாணம், ஏப்.04

வடக்கில் பொதுமக்களுக்குச் சொந்தமான காணிகள் படையினரால் ஆக்கிரமிக்கப்படுவதற்கு எதிரான கருத்தை வெளிப்படுத்தும் நல்லூர்ப் பிரகடனம் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணியளவில் நல்லூர் கந்தசுவாமி ஆலய முன்றி லில் வைத்து வெளியிடப்படவுள் ளது. தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் இந்தச் செயற்பாடு இடம்பெறவுள்ளது.

வட மாகாணத்தின் பல இடங்களிலும் தனியாருக்குச் சொந்தமான பல ஆயிரம் ஏக்கர் காணிகள் பாதுகாப்பு என்ற பெயரில் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கின்றன.

அதேவேளை, அபிவிருத்தி என்ற போர்வையிலும் நிலங்களை ஆக்கிரமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. அரசாங்கத்தின் இத்தகைய செயற்பாடுகளால் வடக்கு மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், மீள்குடியேற்றப்பட்ட பிரதேசங்களிலும் முகாம்களிலும் வாழும் மக்களின் இன்றைய நிலமைகள் வேதனையளிப்பனவாக உள்ளன. இந்நிலையில் அவர்களின் உண்மை நிலமைகளை எடுத்தியம்புவதற்கும் காணிகள் ஆக்கிரமிப்பிற்கு எதிர்ப்புத் தெரிவித்துமே மேற்படி பிரகடனம் வெளியிடப்படவுள்ளது என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (மு)




## முள்ளிக்குளம், முசலிப் பகுதிகளில் நில மீட்புப் போராட்டம்:

# தமிழ், முஸ்லிம் மக்களுடன் நேற்று சர்வதேச மன்னிப்புச் சபையினர் சந்திப்பு







மன்னார், ஏப். 04

மன்னார் முள்ளிக்குளத்திலும் முசலிப் பிரதேசத்தில் மக்கள் தங்களின் பூர்வீகக் காணிகளை விடுவிக்கக் கோரி தொடர் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

முள்ளிக்குளத்தில் - தமிழ் மக்களும், முசலியில் முஸ்லிம் மக்களும் கடற்படை முகாமுக்கு முன்பாகவும், பள்ளிவாசல் முன்றிலிலும் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

சர்வதேச மன்னிப்புச் சபையைச் சேர்ந்த சாளின் சிற்றி தலைமையிலான உயர் அதிகாரிகள் நேற்று திங்கட்கிழமை போராட்டங்களில் ஈடுபட்டுள்ள மக்களை நேரில் சந்தித்து உரையாடினார்.

இரு இடங்களுக்குச் சென்ற சர்வதேச மன்னிப்புச் சபையினர் மக்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்புக்களின் போது வன்னி நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக் குழுப் பிரதி தலைவருமான செல்வம் அடைக்கலநாதன், வன்னி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வினோத ராதலிங்கம், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம், ஜீ.குணசீலன் உட்பட அருட்பணியாளர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

மன்னார் மறை மாவட்ட ஆயர் இல்லத்துக்குச் சொந்தமான 53 ஏக்கர் காணியில் குடியிருந்த முள்ளிக்குளம் கிராம மக்கள் கடந்த 2007 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 5 ஆம் திகதி இலங்கைக் கடற்படையினரால் கட்டாயமாக வெளியேற்றப்பட்டு இன்றுவரை சொந்த கிராமத்தில் மீள்குடியேற்றம் செய்யப்படவில்லை.

இந்நிலையில் தமது காணிகளை விடுவிக்குமாறு கோரி நேற்று 12ஆவது நாளாக அந்த மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். (இ-112)

## பொன்னாலை விளையாட்டுக் கழகத்திற்கு உபகரணங்கள் வழங்கினார் சரா எம்.பி.



பொன்னாலை, ஏப்.04

பொன்னாலை ஸ்ரீகண்ணன் விளையாட்டுக் கழகத்துக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் நேற்று மாலை விளையாட்டு உபகரணங்களை வழங்கினார்.

நேற்று முன்தினம் பொன்னாலைக்குச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் மேற்படி விளையாட்டுக்கழக வீரர்களைச் சந்தித்துக் கலந்துரையாடியபோது, தங்களுக்கு நிரந்தர விளையாட்டு மைதானம், விளையாட்டுப் பயிற்சிகள் மற்றும் உபகரணங்கள் என்பன இல்லை என அவர்கள் தெரிவித்திருந்தனர்.

தாங்கள் பெரும் சிரமங்களின் மத்தியில் தற்காலிக இடம் ஒன்றிலேயே விளையாட்டுச் செயற்பாடுகளை முன்னெடுக்கின்றனர் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

இந்த விடயங்களைக் கவனத்தில் எடுத்த சரவணபவன் எம்.பி உடனடியாகவே விளையாட்டு உபகரணங்களை வழங்குவார் என உறுதியளித்தார். அதற்கமைவாக நேற்று மாலை அங்கு சென்று விளையாட்டு உபகரணங்களை அவர் வழங்கினார். (மு)



தென்மராட்சி – சரசாலையில் நேற்று கிராமிய அமைச்சின் கீழ் உள்ள மில்கோ நிறுவனத்தின் பால் குளிரூட்டும் நிலையத்தை வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் திறந்து வைத்தார்.

(செய்தி 3 ஆம் பக்கத்தில்)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.04.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.